# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

## KARKATHAR OPPURAVU


| மலர் – 17, இதழ் – 9 | ஆவணி திங்கள் | விலை ரூ. 25/– | ஆண்டு சந்தா ரூ. 300/– | தமிழ் மாத இதழ் |
|---|---|---|---|---|
| Volume - 17, Issue - 9 | August 2026 | Price Rs. 25/- | Annual Subscription Rs. 300/- | Tamil Monthly |




**அமரர் மேலையூர் ச. அன்பழகன்**

**மேனாள் ஆசிரியர், கார்காத்தார் ஒப்புரவு**


"Delivered by India Post"

www.indiapost.gov.in



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


DAC™
DREAM ASCEND CONQUER
RHYTHM
BY DAC
MADAMBAKKAM
17 Exclusive Lake Front Villas
3 & 4 BHK Villas
With Clubhouse
₹1.55 Cr
Onwards
250 ACRES OF LAKE
Live
The Resort Life
EVERY DAY WITH DAC
Member
CREDAI
93003 93003
dacdevelopers.com
NEXT TO
ANNAI ARUL SCHOOL
TNRERA/35/LO/2352/2026
DATED 12.06.2026
www.rera.tn.gov.in

# திருமண விழா - நன்றி அறிவித்தல்



மயிலாடுதுறை
திரு. சிவபுண்ணியம். R, வழக்கறிஞர்
அவர்களின் பெயரன்
திரு. இளங்கோவன் – திருமதி. நிர்மலா
அவர்களின் இளையமகன்
**சிபி இளங்கோவன் B.E.,**

சீர்காழி
காஞ்சனா வைத்தியநாதன்
அவர்களின் பெயர்த்தி,
திரு. விஜயகுமார் – திருமதி. சுஜாதா
அவர்களின் மகள்
**சுவாதி விஜயகுமார் B.Tech.,**

இவர்களின் திருமண விழா 21.06.2026 காலை 9.00 முதல் 10.30 மணியளவில் மயிலாடுதுறை, நாகங்குடி (மயிலாடுதுறை - சீர்காழி சாலை) சிக்நேச்சர் திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது.

திருமண விழாவிற்கு நேரில் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியோருக்கும் மற்றும் மெய்நிகர் ஆசீர்வாதம் வழங்கியோருக்கும் மணமகன் மற்றும் மணமகள் இல்லத்தார் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்கள் அன்புள்ள

திரு. **S. இளங்கோவன்** M.Sc., (Ag.)
திருமதி. **E. நிர்மலா** M.A.,
திரு. **E. பிரவீன்** Proprietor, A1 Ideaz
திருமதி **P. உமாமகேஸ்வரி**, M.Sc., D.Co.op.
மயிலாடுதுறை

திரு. **விஜயகுமார்** B.E.,
திருமதி. **சுஜாதா** MCA
செல்வி. **சுருதி** B.Tech.,
சீர்காழி
(Camp-Jakartha, Indonesia)

# மணமகன்/மணமகள் தேவை

பெயர் — செல்வன் **P. ARAVIND**
படிப்பு — B.E. (CSE)
வேலை — Software Engineer-II
Amazon Corporate Office,
Bellevue (Near Seattle),
Washington, USA
USD 2,40,000 / PA



பிறந்த தேதி — 30-04-1996
உயரம் — 169 cms
நட்சத்திரம் — Hastham
கோத்திரம் — Kongaraya
பூர்வீகம் — C. Sathamangalam (Chidambaram)
தகப்பனார் — **N. Palani**
Dy. G.M. Private (Retd), Chennai
தாயார் — **R. Sumathi**
Admin. Officer (Retd.) State Govt.
முகவரி — Plot. No. 6, Ganesh Nagar,
Nemilichery, Chromepet,
Chennai - 600 044.
Cell: 9176646882/9444280027
விருப்பம் — Working in USA / Willing to move and work in USA / Working in Chennai (or) Bangalore.

---

பெயர் — செல்வன் **P. ஸ்டாலின்**
படிப்பு — B.E. (Civil)
வேலை — Assistant Manager - Civil
L&T Construction,
Larsen & Toubro Ltd., Bangalore.
Rs. 8,04,000 / PA



பிறந்த தேதி — 16.03.1995
உயரம் — 178cms
நட்சத்திரம் — பூரம்
கோத்திரம் — ஒகலுட
பூர்வீகம் — அவளிவநல்லூர், வலங்கைமான் (Tk)
தகப்பனார் — **S. புஷ்பநாதன்** M.A.
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு)
ஊரக வளர்ச்சித்துறை
தாயார் — **P. இந்திராணி** (இல்லத்தரசி)
மாடாகுடி, கும்பகோணம் (Tk)
முகவரி — 86, செந்தமிழ் நகர்,
வலங்கைமான் (Po&Tk)
திருவாரூர் (Dist) பின்: 612 804
9443678542, 9600848462
விருப்பம் — படித்து பணியில் உள்ள (அ) படித்து பணியில் இல்லாத வரன்

---

பெயர் — **M. சுபஸ்ரீ**



படிப்பு — B.Tech. (CS)
பிறந்த தேதி — 30.03.2003
உயரம் — 160 cm
நட்சத்திரம் — சதயம்
கோத்திரம் — நெப்புடையான்
பூர்வீகம் — அம்பிகாபுரம், கோடாலிக்கருப்பூர் வழி ஜெயங்கொண்டம்
தகப்பனார் — **Dr. S. மோகன்,** M.Com.,M.B.A.,Ph.D.
முதல்வர்: (Retd.) எஸ்.கே.எஸ்.எஸ். கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்
தாயார் — **T. கலைச்செல்வி,** M.Sc., B.Ed.
(நெடுங்காடு, காரைக்கால்) Late
முகவரி — "சப்தகிரி", 22, நூர் நகர்,
பிடாரிகுளம் ரோடு,
கும்பகோணம் - 612 001.
9443564662, 6380928662
mohanskss64@gmail.com

---

பெயர் — செல்வன் **S. RAVEEN KUMAR**
படிப்பு — M. Tech., VLSI.,
வேலை — Senior Engineer
MNC @ Chennai
Rs. 48 lakhs per Annum
பிறந்த தேதி — 21.11.1993



உயரம் — 175 cm
நட்சத்திரம் — Sathayam
கோத்திரம் — Kanagarayar
பூர்வீகம் — Madurai
தகப்பனார் — **A. Sankar**
Retd Director of School Education
தாயார் — **P. Vasanthi**
Retd Head Mistress Govt HSS School
முகவரி — Plot No. 28 & 29, VGN Highness,
Srinivasapuram, Iyyappanthangal,
Chennai-600056.
Cell : 7845914635/ 9488094635
விருப்பம் — Employed or Employable Good looking girl belongs to respectable family

# மணமகன்/மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **பா. சூர்யா** |
| படிப்பு | B.E. Mech. |
| வேலை | Planning and Contract Engineer MEP<br>(SPR Construction Pvt. Ltd. Chennai)<br>Rs. 5,00,000 / PA |
| பிறந்த தேதி | 19.04.1998 |
| உயரம் | 171 cm |
| நட்சத்திரம் | உத்திராடம் |
| கோத்திரம் | செம்பதரிய |
| பூர்வீகம் | கன்னியாகுடி |
| தகப்பனார் | **கோ. பாரி,** T.N.S.T.C. (Rtd.) |
| தாயார் | **பா. கஜலெட்சுமி,** Teacher<br>அரசு உதவி பெறும் பள்ளி - ஆயங்குடிபள்ளம்)<br>திருவாலங்காடு |
| முகவரி | N. 2, High School Street,<br>AKC (PO) - 609102.<br>Ayangudipallam, Sirkali (Tk)<br>9585258754 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி Dr. M. மதுமிதா** |
| படிப்பு | B.D.S., M.D.S., IIIrd year |
| வேலை | Second Year, Pediatric and Preventive Dentistry, Chettinadu Dental College & Research Institute, Chennai) Course Completion on August 2027 |
| பிறந்த தேதி | 02.05.2000 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | ரேவதி |
| கோத்திரம் | அங்கனுட |
| பூர்வீகம் | திருச்சிற்றம்பலம், மயிலாடுதுறை |
| தகப்பனார் | **S. முத்துகுமார்,**<br>Proprietor, Shivali Party Hall, Chennai - 63.<br>Ex. Project Manager, Saudi Snack Foods, Saudi Arabia |
| தாயார் | **M. சுசித்ரா**<br>கன்னியாகுடி, வைத்தீஸ்வரன் கோவில்<br>Proprietrix, Shivali Constructions and Shivali Boutique |
| முகவரி | 3, கணபதி சாலை, புது பெருங்களத்தூர்,<br>சென்னை - 600 063.<br>Cell : 9840447235, 80562 35491 / 9940161134 |
| விருப்பம் | Doctor / Engineer of any Post Graduate well settled in India |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **R. LOGESHWARAN** |
| படிப்பு | B.Sc. |
| வேலை | Asst. Manager, Canara Bank |
| பிறந்த தேதி | 29.12.1998 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | Bharani |
| கோத்திரம் | Ananthamudayaan |
| பூர்வீகம் | Melakadambur |
| தகப்பனார் | **N. Ramalingam** (Rtd. Chief Manager, SBI) |
| தாயார் | **R. Vennila** (Housewife) |
| முகவரி | Ramalingam Apartment,<br>Javulikara Street,<br>Tiruvarur - 610 001.<br>9786312333, 7358472133 |
| விருப்பம் | Banking Professional & Currently Employing |



| | |
|---|---|
| பெயர் | **A. கபிலன்** |
| படிப்பு | B.Arch. |
| வேலை | கட்டிட வடிவமைப்பு<br>(சுயதொழில்) |
| பிறந்த தேதி | 06.10.1995 |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | வண்ணாமுட |
| தகப்பனார் | **S. அருள்** |
| தாயார் | **P. கலைச்செல்வி** |
| முகவரி | ஆசி தரும் அன்பகம்<br>திருவள்ளுவர் நகர் முதல் தெரு,<br>பூதாமூர்,<br>விருத்தாசலம் - 606 003.<br>9842331969, 9842331961 |



## 'கார்காத்தார் ஒப்புரவு' கட்டண விபரம்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 300 |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகள் மட்டும்) | 2000 |
| மணமகள், மணமகன் தேவை | |
| கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கருப்பு வெள்ளை ¼ பக்கம் | 750 |
| கருப்பு வெள்ளை ½ பக்கம் | 1500 |
| கருப்பு வெள்ளை முழு பக்கம் | 3000 |
| கலர் ¼ பக்கம் | 2000 |
| கலர் ½ பக்கம் | 4000 |
| கலர் முழு பக்கம் | 7000 |
| முன் அட்டை உட்புறம் | 8000 |
| பின் அட்டை உட்புறம் | 8000 |
| பின் அட்டை வெளிப்புறம் | 10000 |

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **“Chidambaram Spiritual Stay”**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833, 9884004550**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு “Booking.com” மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

---

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

**இதழின் உள்ளே....**



சங்க நிகழ்வுகள்....................................................11 – 17

சங்கப்பலகை ..................................................................25

மணமகன் / மணமகள் தேவை...................... 40–44

சிறுவர் பகுதி ........................................................45–48

**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **முனைவர் கைலை. சண்முகம்**

ஆசிரியர் : **வனஜா இளங்கோவன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்



கார்குல உறவுகளுக்கு கார்காத்தார் ஒப்புரவின் ஆவணி மாத வணக்கங்கள் பல. ஆவணி என்றாலே பண்டிகைகள் ஒன்றன் பின் ஒன்றாக அமைந்து நம்மைப் பரவசப்படுத்தும். திருமண வைபவங்களும் கோலாகலமாக நடைபெறும் மாதமிது.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் பட்ஜெட் ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி சட்டசபையில் தாக்கல் செய்யப்படுகிறது. அனைவரும் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அரசு என்ன மாதிரியான பட்ஜெட் அளிக்கப் போகிறது என எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள். மக்களுக்கு நலம் பயக்கக் கூடிய பட்ஜெட்டாக இருக்க வாழ்த்துவோம்!

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து தனியார் ராக்கெட்டான விக்ரம்–1 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டுள்ளது. தனியார் நிறுவனம் உருவாக்கிய ராக்கெட்டுகளை விண்வெளியின் சுற்றுப்பாதையில் செலுத்தும் திறன் பெற்ற உலகின் மூன்றாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்பது நமக்கு பெருமை அளிப்பதாக உள்ளது என்பது உண்மையே.

மேலும் ஹைட்ரஜன் ரயில் திட்டத்தில் இந்தியா உலகின் மிக நீண்ட ரயில் இயக்கி சாதனைப் படைத்துள்ளது. ஜூலை 17ஆம் தேதி பிரதமர் மோடி அவர்கள் ஹரியானாவின் ஜிந்த்–சோனிபட் இடையே முதல் ஹைட்ரஜன் ரயிலைத் தொடங்கி வைத்தார். பசுமை ரயில் திட்டத்தின் முன்னோடியாக வடிவமைக்கப்பட்ட ஹைட்ரஜன் ரயில் திட்டத்தில் பல்வேறு வளர்ந்த நாடுகள் இரண்டு முதல் மூன்று பெட்டிகள் உடைய ரயிலை இயக்கும்போது, இந்தியா 10 பெட்டிகளை உடைய ரயிலை இயக்கி அசத்தி உள்ளது. இந்திய ரயில்வேக்கு நமது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பரிசுகள் ஜனவரி 26, 2027ஆம் ஆண்டு புதுடில்லியில் நமது குடியரசுத்தலைவி திரௌபதி முர்மு அவர்களால் கலைஞர்களுக்கு வழங்கப்படும். விருது பெற்ற அனைவருக்கும் கார்காத்தார் ஒப்புரவின் வாழ்த்துக்கள்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி லார்ட்ஸ் டெஸ்டில் கோப்பை வென்று பாரதத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இந்திய பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து, ஜூலை 2026ல் நடைபெற்ற ஜப்பான்

ஓபன் சூப்பர் 750 தொடரின் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் வென்று சாம்பியன் பட்டம் பெற்றுள்ளார். ஆசிய குத்துச்சண்டை போட்டியில் இந்திய வீராங் கனைகள் 5 தங்கம், 10 வெள்ளி, 4 வெண்கலங்கள் வென்றதுடன், 19 வயதிற்குள்ளானவர்கள் போட்டியில் 2 தங்கம் 6 வெள்ளி பதக்கங்கள் வென்றுள்ளது பாராட்டுக்குரியது. அனைத்து வீராங்கனைகளையும் பாராட்டுவோம்.

உலக கால்பந்து கோப்பை ஜுூரம், ஜூலை 20ஆம் தேதி ஸ்பெயினின் மகத்தான வெற்றியுடன் முடிவுக்கு வந்துள்ளது. FIFA உலக கோப்பை போட்டி யில் மூன்று முறை கோப்பை வென்ற அர்ஜென்டினாவை முதன் முறையாக வெற்றி கொண்டு ஸ்பெயின் கோப்பை வென்றுள்ளது பாராட்டுக்குரியது.

இங்கிலாந்து அரசில் அமைச்சராகப் பொறுப் பேற்றுள்ள தமிழின நாடாளுமன்ற உறுப்பினரான உமா குமரன் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்!

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் காமன் வெல்த் விளையாட்டுப் போட்டி ஜூலை 23ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 2ஆம் தேதி வரை நடக்க உள்ளது. 74 நாடுகளைச் சேர்ந்த 3000 வீர, வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்கின்றனர். வெற்றி பெற வாழ்த்துவோம்.

இறுதியாக நமது தென்னிந்திய இசைக்குயில் திருமதி ஜானகி அவர்கள் மைசூரில் இறைவனடி சேர்ந்தார். அவரது சிங்காரவேலனே தேவா கேட்டு மயங்காதவர்களே இல்லை எனலாம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்!

நன்றி! வணக்கம்!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- ❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- ❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- ❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. **8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- ❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும்* ***கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

*- கார்காத்தார் ஒப்புரவு*

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

விருத்தாசலத்தில் முதுகுன்ற திருவிழா தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் சார்பில் தலைவர், பொதுச்செயலாளர், அமைப்புச்செயலாளர், மண்டலத்தலைவர்கள், மண்டலச் செயலாளர்கள், இணைப்புச் சங்க செயலாளர்கள், இணைப்புச்சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், மகளிர் இளைஞர் அணியினர், சொந்தங்கள் பெரும்திரளாக கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள். மிக்க மகிழ்ச்சி.

முதுகுன்ற விழா குத்துவிளக்கு ஏற்றி இறைவணக்கத்துடன் துவங்கப்பட்டது. திரு. பூ. முதுகுன்றன் (வழக்கறிஞர் விருத்தகிரி) மற்றும் குடும்பத்தினர் முன்னிலையில், கி.பி. 981–982 கருங்கல் கோவில் கட்டிய சோழப்பேரரசி செம்பியன் மாதேவி சிலையை (ஐம்பொன், 3 அடி உயரம், 81 கிலோ எடை) தலைவர் ஸ்ரீ பிரம்ம ஞான சபை திருவையாறு அவர்களின் பொற்கரங்களில் அளிக்கப்பட்டது. தருமை ஆதீனம் 27ஆவது குருமகா சன்னிதானம் ஆசியுடன் அவர்கள் சார்பாக கட்டளைத் தம்பிரான் பெற்றுக்கொண்டார். முதுகுன்ற வரலாறும் விருத்தாசல புராணமும் நூலை திரு. ஜி.கே. வாசன் அவர்கள் வெளியிட மருத்துவர் கோவிந்தசாமி, நகர்மன்ற தலைவி சங்கவி முருகதாஸ், மருத்துவர் அருண்பிரசாத் மற்றும் நாங்கள் அனைவரும் பெற்றுக்கொண்டோம்.

விழாவிற்கு எங்களை அழைத்து கௌரவித்த மூத்த வழக்கறிஞர் திரு. முதுகுன்றன், விருத்தாச்சலம் சேவை சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், மகளிர் குழுவினர்கள், மற்றும் சொந்தங்கள் அனைவருக்கும் KKR மற்றும் கூட்டமைப்பு சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து நன்றி பாராட்டி மகிழ்கிறோம்.

முனைவர் K. ராஜசுந்தரம் பிள்ளை @
KKR K சுரேஷ், தலைவர்

## நங்கநல்லூர்:

சங்கத்தின் செயற்குழு மற்றும் மகளிரணி கூட்டம் 28.06.26 அன்று சங்க கட்டிட அலுவலகத்தில் நடைபெற்றது. தலைவர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் தலைமையில், திருமதி. கலையரசி இராஜசேகரன் மற்றும் கீதா நடராஜன் ஆகியோரது இறை வணக்கப்பாடலுடன் கூட்டம் துவங்கியது. தலைவர் திரு. கோ. தியாகராஜன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அண்மையில் மறைவுற்ற நமது பகுதியின் கார்குல சொந்தங்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலர் திரு. வே. கண்ணன் அவர்கள் சென்ற மாத அறிக்கையை வாசித்ததுடன் கடந்த ஒரு மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை வரிசைபடுத்தினார். பொருளாளர் திரு. வை. செல்வ குமார் நிதி நிலை பற்றிய விவரங்களை தெரிவித்தார். மகளிரணி உறுப்பினர் திருமதி. பானுமதி அவர்களது 70வது பிறந்தநாளை முன்னிட்டு சங்கத்தின் சார்பில் அவருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. மாலை சிற்றுண்டி மற்றும் இரவு உணவிற்கான பொறுப்பைதிருமதி.பானுமதி அவர்களே ஏற்றுக்கொண்டார். நமது குலத்தை சேர்ந்த காப்பீட்டு முகவர் திரு. G. செல்வராசு (விருத்தாசலம்) அவர்கள் ஆயுள் காப்பீடு பற்றிய முக்கியத்துவத்தையும் மற்றும் பல்வேறு காப்பீடுகள் பற்றியும் விளக்கமளித்தார். செயற்குழு உறுப்பினர் திரு. வீரராஜ்குமார் அவர்கள் ஆனந்தம் அமைப்பினை பற்றிய சிறு விளக்கமளித் தார். சிற்றுண்டி மற்றும் இரவு உணவு வழங்கிய திருமதி. பானுமதி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப் பட்டது. ஆலோசகர் திரு. தி. இராஜசேகரன் அவர்களது நன்றியுரையினை தொடர்ந்து இரவு உணவுக்குப்பின் கூட்டம் இனிதே முடிவுற்றது.

வே. கண்ணன், செயலாளர்

## அண்ணாநகர்:

சங்க கூட்டம் 12.07.26 அன்று அண்ணாநகரில் உள்ள ஆடிட்டர் திரு. முத்தையா அவர்கள் அலுவலகத்தில் நடைபெற்றது.

தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் கூட்டத்தை தொடங்கிவைத்து பேசினார். 2.10.2026 அன்று நடைபெறவுள்ள சங்க ஆண்டுவிழா பற்றி ஆலோசிக்கப்பட்டது. பெண்ணாடத்தில் உள்ள மெய்கண்டார் ஆலயத்தில் மணிமண்டபம் கட்டுவதற்கு ரூ. 5,000/– நன்கொடை அளிக்கப்பட்டது என்றார்.

செயலாளர் என். ஆனந்தகணபதி அவர்கள் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகமாக்க, உறுப்பினர்களின் மகன்/மகள் கல்வி முடித்து பணியில் சேர்ந்தவுடன் அவர்களை சங்க கூட்டத்தில் கலந்துகொள்ள ஊக்கப்படுத்த வேண்டும் என்றார்.

உறுப்பினர் எண்ணிக்கையை அதிகமாக்க திருவாளர்கள் V. இளங்கோவன், V. ரவிக்குமார், R. சிவக்குமார், R. பாலபிரகாஷ் ஆகியோர் அடங்கிய நால்வர் குழு அமைக்கப்பட்டது.

அண்ணாநகர் சங்கத்தின் பதிவை, வருடாந்திர புதுப்பித்தல் வேலை தொடங்கப்பட்டுள்ளது என தலைவர் தெரிவித்தார்.

திரு. R. சிவகுமார் அவர்கள் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

J. கோபாலகிருஷ்ணன்
தலைவர்

✣ ✦ ✣

## போரூர்:

சங்க செயற்குழுகூட்டம் 12.7.2026 அன்று திரு. இளங்கோ அவர்கள், அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் சங்க ஆண்டுவிழா, மற்றும் மங்கல சந்திப்பு 20.9.26 அன்று நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. உடன் ''ஸ்ரீ ஜெய் மாருதி மஹால்'' பதிவு செய்யப்பட்டது. இதில் மங்கல சந்திப்பு மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்துவது எனவும், சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் 3 மணிக்கு நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் 5.00 மணிமுதல் 7.00 மணி வரை சங்க ஆண்டுவிழா, சிறப்பு அழைப்பாளர்களுடன், சிறப்பாக நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது. மங்கல சந்திப்புக்கான விபரம் இந்த மாத ஒப்புரவு இதழில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் போரூர் மங்கல சந்திப்பு என வாட்ஸ்அப்பில் ஒரு ஆப் open செய்யப்பட்டு, அதிலும் Google form, GPay Scanner மண்டப Location QR code, என விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இதில் நம் கார்குல சொந்தங்கள் பங்குபெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் போரூர் சங்க அனைத்து உறுப்பினர்களும், குடும்பத்துடன் வந்திருந்து விழாவை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். நன்றி!

S. சந்திரமோகன், செயலாளர்

✣ ✦ ✣

## புதுச்சேரி:

05.07.26 அன்று கூட்டம், திருமதி. அலமேலு அம்மையார் இல்லத்தில், அசோக்நகர், இலாசுப்பேட்டில், சங்க தலைவர் திரு. J. ராஜன்பாபு தலைமையில் நடைபெற்றது. தலைவர் சங்க நிகழ்வுகள் பற்றியும், வரும் செப்டம்பர் 20ஆம் தேதி நடக்கும் சங்க ஆண்டு விழா, முகவரி கையேடு (Address Book) வெளியீடு, மற்றும் கூட்டமைப்பின் பொதுக்குழு விழா எப்படி சிறப்பாக நடத்துவது பற்றி எடுத்து கூறினார்கள். சங்க பொருளாளர் திரு. இராமலிங்கம், பகுதி செயலாளர்கள் திரு. ஆனந்தன், திரு. வடிவேல் தங்களின் கருத்துக்களை கூறினார்கள். கூட்டத்தில் இந்த வருடம் சங்கத்தில் புதிதாக சேர்ந்த உறுப்பினர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. முடிவில் மகளிர் அணி தலைவி திருமதி. சுந்தரவள்ளி ஆனந்தன், தங்களின் கருத்தை கூறி, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த அலமேலு அம்மையாருக்கு துண்டு அணிவித்து சிறப்பு செய்து நன்றி கூறினார்கள். கூட்டம் இனிதே முடிந்தது. வந்திருந்த உறுப்பினர்களுக்கு அம்மையார் வீட்டார்கள், ஸ்வீட், காரம், ஜூஸ் வழங்கி சிறப்பு செய்தனர். அம்மையாருக்கும் வீட்டு சொந்தங்களுக்கும் சங்கத்தின் சார்பில் மனங்கனிந்த நன்றிகள். வணக்கம்.

P.S. தமிழ்ச்செல்வன், செயலாளர்

✣ ✦ ✣

## செந்துறை:

சங்க கூட்டம் 12.07.2026 அன்று திரு. ஞானசம்பந்தர் மடாலயத்தில் மண்டலத் தலைவர் திரு. R. இரவீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. சங்கச் செயலாளர் திரு. சா. ஜெயராமன் அனைவரையும் வரவேற்றார்.

திருஞானசம்பந்தர் மடாலயத்திற்கு வ.உ.சி. இளைஞர் அணி உறவுகள் திரு. செ. ஆனந்த்

(சிங்கப்பூர்), திரு. கு. கார்த்திக் மற்றும் திரு. அ. செந்தில்குமார் ஆகியோர் 50 சேர் (50 plastic chair) அன்பளிப்பாக வழங்கியமைக்கு நமது சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி கூறப்பட்டது. திரு. வ. முருகேசன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது. நன்றி!.

த. வைத்திநாதன், தலைவர்

✤ ✦ ✤

## குமராட்சி ஒன்றியம்:

சங்க ஆண்டு விழா, 28.6.2026 குமராட்சி ஒன்றிய அரங்கத்தில் குமராட்சி தலைவர் திரு. A.G. சிவராமன்பிள்ளைதலைமையில்துணைத்தலைவர்கள் A. வேணுகோபால் பிள்ளை, பேராசிரியர் S. சிவக்குமார் பிள்ளை முன்னிலையில் நடைபெற்றது. சிதம்பரம் நகர சங்கத்தின் தலைவர் திரு. K. சண்முகசுந்தரம் பிள்ளை, செயலர் திரு. M.G. ரவிச்சந்திரன் பிள்ளை, பொருளாளர் Dr. V.R. பாஸ்கரன் பிள்ளை M.S., துணைத்தலைவர் திரு. S. பூங்குன்றன் பிள்ளை, துணைச்செயலர் திரு. S. விவேக் பிள்ளை ஆகியோர் பாராட்டப்பட்டனர். மேலும் பணி உயர்வு பெற்ற திரு. Ln. R. இளஞ்செழியன் பிள்ளை மற்றும் பணி நிறைவு பெற்ற திரு. K. பீகர் பிள்ளை, பேராசிரியர் திரு. T.S.S. ஞானக்குமார் பிள்ளை ஆகியோர் பாராட்டப்பட்டனர். மகளிர் அணி தலைவி முனைவர் சாந்தி சிவக்குமார், கல்வித் தந்தை திரு. R. செந்தில்குமார் பிள்ளை, வையூர் தியாகராஜன் பிள்ளை, பேராசிரியர் முனைவர் V. செல்வநாராயணன் பிள்ளை, டாக்டர் நடனசபாபதி பிள்ளை ஆகியோர் பாராட்டி பேசினர். 10 மற்றும் 12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு ரொக்கப்பரிசு மற்றும் புத்தகம் பேனா ஆகியவை பரிசாக அளிக்கப்பட்டது. அதங்குடி கிளை சங்கத்தால் ரூ. 10,000 வழங்கப்பட்டது. விளத்தூர் பிரபாகரன் பிள்ளையால் ரூ. 5,000 பரிசாக வழங்கப்பட்டது. புலவர் திரு. கு. சம்மந்தம் பிள்ளை M.A., M.Phil., B.Ed., DIT, திருவள்ளூர் அவர்கள் ''மகிழ்வித்து மகிழ்'' என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். இளையோர் பேரவை தலைவர் S. செந்தில்நாதன்பிள்ளை நன்றியுரை ஆற்ற விழா இனிதே முடிவுற்றது.

S. இராமச்சந்திரன், செயலர்

✤ ✦ ✤

## சீர்காழி:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 4.7.26 அன்று தலைவர் திரு. அகோரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. Er. முத்துகிருஷ்ணன்பிள்ளை வைப்பு நிதி வட்டியிலிருந்து நலிவுற்ற உறுப்பினர் குழந்தைகளுக்கு ஆகஸ்டு மாதம் கல்வி உதவிதொகை கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. நடந்து முடிந்த மங்கல சந்திப்பு நிகழ்ச்சியை சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, பொருளாளர் செந்தில்குமார் கூட்டத்திற்கு நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

S. ரவிச்சந்திரன், செயலாளர்

✤ ✦ ✤

## மணிக்கிராமம்:

சங்க கூட்டம் 27.06.2026 அன்று மணிக்கிராமம் சிவன் கோவிலில் சங்க தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. இறைவணக்கத்திற்கு பிறகு சங்க கௌரவ தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும் செயலர் திரு. T. கபிலன் ஆண்டறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. S. பரம நாதன் வரவு–செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அப்படியே ஏற்றுக்கொண்டது.

கார்குல வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் 81 அகவை காணும் கல்வி தந்தை அவர்களுக்கு பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திக்கிறோம். ஆகஸ்டு மாதம் ஆண்டு விழா நடத்த தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். இறுதியாக பொருளர் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

G. அன்பழகன், தலைவர்

✤ ✦ ✤

## மயிலாடுதுறை:

14.06.2026 அன்று செயற்குழு கூட்டம், மகளிர் அணி இறை வணக்கத்துடன் துவங்கியது. S. சரவணன் இணைச் செயலர் அவர்களின் வரவேற்பு உரையுடன், செயலர் மற்றும் பொருளர் இருவரின் அறிக்கையும் பதிவு செய்தார்கள்.

பின்னர் தலைமை உரையில் தலைவர் பொறுப்பு திரு. T. ரவிகுமார் அவர்கள் 2026–27 ஆண்டு மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பம் வழங்குவது குறித்தும், மங்கல சந்திப்பு 09.08.2026 அன்று திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் கார்குல சொந்தங்கள் அனைவரும் ஒத்துழைப்பை தரும்படி கேட்டுக் கொண்டார். பின்னர் உரையாற்றிய கூட்டுறவுத்துறை துணைப்பதிவாளர் திரு. சந்திரசேகர் மத்திய அரசின் 10% இட ஒதுக்கீடு உயர்கல்வியில்

முற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் பெற்றிட மாநில அரசிடம் முறையிட்டு பெற வேண்டும் என்றும் கூறினார். அடுத்து மேனாள் மாநில பொதுச்செயலாளர் திரு. M. சத்யபால் சங்க வளர்ச்சிக்காக தனது மேலான கருத்துக்களை பதிவு செய்தார். பொருளாளர் என் முத்துக்குமாரசாமி நன்றி உரைக்கு பின்னர் இரங்கல் தீர்மானங்கள் மீது மவுன அஞ்சலி செலுத்தப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

S. தில்லைநாயகம், செயலர்

---

## பரசலூர்:

5.7.2026 அன்று சங்க கூட்டம் நக்கீரர் தெரு திரு. க. கோவிந்தராசன்பிள்ளை இல்லத்தில் நடைபெற்றது.

திருமதி. R. ஈஸ்வரி இறைவணக்கம் பாட திரு. க. கோவிந்தராசன் பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டம் இனிதே துவங்கியது. செயலர் அறிக்கையை திரு. A. ராமலிங்கம்பிள்ளை வாசிக்க, நிதி அறிக்கையை தலைவர் வாசித்தார்கள். நிதி பதிவேடுகள் மற்றும் அவசரக்கால நிதி உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க ஆண்டு விழா நடத்துவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டு, அதில் சங்கத்தின் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த உறுப்பினர்களை கௌரவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

கடலூர் மாவட்டம் பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோவில் மணிமண்டப திருவிழா விற்கு சங்கம் சார்பாக ரூ. 500 அனுப்பப்பட்டது என்பதை தலைவர் மகிழ்வுடன் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் காரம், இனிப்பு, தேநீர் தலைவர் குடும்பத்தினர் தந்து உபசரித்தனர்.

நிறைவாக திரு. S. செந்தில்குமார் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– கே.எஸ். செந்தில்குமார், செயலர்

---

## செம்பொன்னார்கோவில்:

சங்க கூட்டம் 07.07.2026 அன்று துணைச் செயலர் திரு. G. முத்துக்குமார் – பூஜா அவர்கள் இல்லத்தில் சங்கத் தலைவர் தலைமையில் இறைவணக்கம் – திருமதி. மீனாலோட்சனி நடனம் பாடிட, சங்க செயலர் குரு. முத்துகுமார் அவர்கள் சென்ற மாத அறிக்கை, பொருளர் M.C. செல்வராஜ் அவர்கள் வரவு/செலவு வாசித்திட கூட்டம் இனிதே தொடங்கியது.

தலைவர் அவர்கள் பேசுகையில் 13.06.2026–ல் மாநில செயற்குழுவில் ஏற்கப்பட்ட தீர்மானங்களை வாசித்து காட்டினார்கள். 09.07.2026–ல் நடைபெறும் மெய்கண்டார் மணிமண்டப நிகழ்வில் நமது சங்கம் சார்பில் நிதி உதவியும், உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள். மங்கல சந்திப்பு திருச்சி ஆகஸ்ட் 15, மயிலாடுதுறை ஆகஸ்ட் 9ல் நடைபெறவுள்ளது என்றும் கூறினார்கள்.

நமது சங்க உறுப்பினர் திரு. சண்முகவடிவேல் அவர்களின் இறப்பிற்கு திரு. M.C. ராமநாதன் பிள்ளை, திரு. கணபதி நடனம்பிள்ளை, திரு. வாசன்பிள்ளை, திரு. ராமஅருள்பிள்ளை, திருமதி. ரெத்தினாவதி ஆகியோர் புகழ்அஞ்சலி செலுத்தினார்கள்.

கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார்க்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட ஆண்களுக்கான பரிசு திரு. ரவிச் சந்திரன், பெண்களுக்கான பரிசு திருமதி. T. சுகந்தி இல்லத்தாரால் வழங்கப்பட்டது.

இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பு செய்தார்கள். சங்க பொருளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

திரு. இராமநாதன், தலைவர்

---

## மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும் பள்ளம் & தலைச்சங்காடு:

சங்க கூட்டம் 06.07.2026 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் இல்லத்தில் இறைவணக்கத் துடன் இனிதே தொடங்கியது. சங்க உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசினார்.

அப்போது 2025–26ஆம் ஆண்டிற்கு மாநில சங்கத்திற்கு இணைப்பு சந்தா வழங்கியது தொடர்பாகவும் மற்றும் 2026–27ஆம் கல்வியாண்டிற்கு CREW அறக்கட்டளை சென்னை மூலம் கல்வி உதவித் தொகைப்பெற நம் சங்க மாணவ/மாணவிகளிடமிருந்து விண்ணப்பம் பூர்த்தி செய்தல் தொடர்பாகவும் விபரம் தெரிவித்தார்.

பின்னர் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

பால. இலட்சுமணன், தலைவர்

---

## 80 இராதாநல்லூர்:

சங்க கூட்டம் 19.7.2026 அன்று சங்க கௌரவத் தலைவர் கு. இராமசுப்ரமணியன் இல்லத்தில், அவர்கள் தலைமையில் சங்க தலைவர் தி. முத்துக்குமரசாமி வரவேற்புடன் துவங்கியது. ஜுலை மாதத்தில் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. 30.6.2026 அன்று பணிநிறைவு பெற்ற தலைமை ஆசிரியர் மு. சீனிவாசன், விருப்ப ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை P. கலைச்செல்வி, பணிநிறைவு பெற்ற தலைமை ஆசிரியர் ஏ. இராமலிங்கம் ஆகியோர்களை பாராட்டி சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது. சீர்காழி மண்டல தலைவர் M. சிங்காரவேலன், மண்டல செயலர் சிதம்பரநாதன் ஆகியோர் ஓய்வு பெற்றவர்களை பாராட்டி சால்வை அணிவித்தனர். கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவருக்கும் 11.00 மணிக்கு தேநீர் விருந்தும் மதியம் 1.00 மணிக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. 30.4.2026 வரை வரவு செலவு கணக்கு பொருளாளர் அவர்களால் முன்னிலை படுத்தப்பட்டு ஏற்கப்பட்டது. CREW அறக்கட்டளை கல்வி உதவித்தொகை பெற விரும்பும் கல்லூரி மாணவ/மாணவிகள் விண்ணப்பத்தினை உரிய இணைப்புகளுடன் தலைவர் அவர்களிடம் நேரில் அளிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. தலைவர் அவர்கள் விண்ணப்பத்தினை பரிசீலித்து பரிந்துரை செய்து அறக்கட்டளைக்கு அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. பாராட்டு பெற்ற மூன்று பேரின் ஏற்புரைக்குபின் சங்க செயலர் இரா.மு.அ. செல்வம் (எ) ராஜா முத்தையா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

தி. முத்துக்குமரசாமி, தலைவர்

✤ ✦ ✤

## திருவாரூர்:

சங்க கூட்டம் 21.6.2026 அன்று நடைபெற்றது. தலைவர் திரு. கண்ணபிரான் பிள்ளை தலைமை ஏற்றும் திரு. V. பொன்னுசாமி பிள்ளை முன்னின்றும் நடத்திவைத்தார்கள். கடவுள் வணக்கமாக திருமுறை அனைவராலும் பாடப்பட்டது.

செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையையும் பொருளாளர் பொன்னுசாமி பிள்ளை நிதிநிலை அறிக்கையும் வாசித்து ஒப்புதல் பெற்றார்கள். உறுப்பினர் விஜயா அவர்களின் மகன் திருமண விழாவில் சங்கம் சார்பில் திருமண வாழ்த்து கொடுத்து மணமக்களை வாழ்த்தினோம் என கூறினார்கள். கூட்டத்தில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் திருமதி. விஜயா குடும்பத்தினர் சிற்றுண்டி தேநீர் வழங்கினார்கள். கடைசி நிகழ்வாக திரு. கந்தசாமி பிள்ளை நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

அடுத்த கூட்டம் 14.7.26 அன்று நடத்த தீர்மானிக்கப்பட்டது.கல்விஉதவிநிதிவிண்ணப்பங்கள் திரு. ஸ்ரீராம் (புதுப்பத்தூர்), திரு. தமிழரசன் (போலசம்) பெற்றதை M/s CREW Trust-க்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது.

அ. சோமசுந்தரம், செயலாளர்

✤ ✦ ✤

## கும்பகோணம்:

குத்துவிளக்கு பூஜை மற்றும் மாதாந்திர கூட்டம் 19.07.2026 அன்று மகாமககுளம் கீழக்கரையில் அருள்மிகு அமிர்தவல்லி உடனாய அபி முகேஸ்வரர் ஆலய திருமண அரங்கில் தலைவர் ஏ.எஸ். பழனி தலைமையில் செயலாளர் எஸ். விஜயகுமார், பொருளாளர் ஜி. ராஜாராமன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கலந்துகொண்ட அனைவரையும் மண்டல தலைவி திருமதி. நீலா இராஜசேகர் வரவேற்றார்கள். தலைவர் செயலாளர் உரைக்குப்பின் பூஜை நடைபெற்றது. பூஜையில் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்கும், ஆர்வமுடன் பூஜைக்கு தேவையான பொருட்களை வழங்கிய கார்குல சொந்தங்களுக்கும் தலைவர் ஏ.எஸ். பழனி அவர்கள் நன்றி கூறினார்கள்.

எஸ். விஜயகுமார், செயலாளர்

✤ ✦ ✤

## தஞ்சை:

சங்க கூட்டம் 28.6.2026 அன்று தஞ்சை கூட்டுறவு காலனி கற்பகவிநாயகர் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சங்க தலைவர் திரு. S. ஜெயசந்திரன் உறுப்பினர்கள், நிர்வாகிகளை வரவேற்று சங்கத்தை அடுத்த கட்ட வளர்ச்சி குறித்து எப்படி கொண்டு செல்வது என சிறப்புரையாற்றினார். கௌரவ தலைவர் திரு. S. ராஜசேகர் தலைமையுரை ஏற்று கடந்த 25 ஆண்டுகளாக சங்கம் எப்படி வளர்ச்சி பெறவேண்டும் என்ற இலக்கை நோக்கி சென்றோம். அதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் பற்றியும், காமதேனு சமூக அறக்கட்டளை பல சிரமங்களுக்கிடையே எப்படி ஆரம்பிக்கப்பட்டது என விளக்க உரையாற்றினார்கள்.

காமதேனு அறக்கட்டளை தலைவர் திரு. S. மோகன்குமார் கடந்த ஆண்டு அறக்கட்டளை சார்பாக மாணவ, மாணவிக்கு வழங்கிய கல்வி உதவி தொகையை பட்டியலிட்டு வாசித்தார்கள். CREW அறக்கட்டளை சார்பாக கடந்த 2025–26ஆம் ஆண்டு மாணவ, மாணவிக்கு வழங்கப்பட்ட கல்வி உதவி தொகைக்கு, CREW அறக்கட்டளைக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. தஞ்சை Er. திரு. பா. சிவகுமார் – புனிதா சிவகுமார் வீட்டு திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சங்கத்தின் சார்பாக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டு மணமக்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தோம். சங்க பொருளாளர் திரு. R. சண்முகம் அவர்கள் தற்போதைய நிதிநிலை குறித்து சிறப்புரையாற்றி னார்கள். திரு. S. பாலசுப்ரமணியன் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே முடிவுற்றது.

S. ஜெயசந்திரன், தலைவர்

## நெய்க்குப்பை:

நெய்க்குப்பை கிராமத்தில் 20 ஆண்டுகளுக்கு மேல் சங்கம் இயங்காமல் இருந்தது. செந்தில்குமார் ஆகிய நான் மிகவும் அலைந்து போராடி ஜெயங்கொண்டம், இளையபெருமாள்நல்லூர் சங்கம் மூலம் நெய்க்குப்பையில் ஜூன் மாதம் 2025–ம் ஆண்டு சங்கம் துவங்கப்பட்டது. துவக்க விழாவில் மாநில தலைவர் கே.கே.ஆர், பொருளாளர் ராமநாதன் பிள்ளை, பாலசுப்பிரமணியம், கைலை. சண்முகம், விஜயகுமார் மற்றும் சங்க நிர்வாகிகள் அனைவரையும் பரிவட்டத்துடன் மேளதாளத்துடன் அழைத்து பெருமையுடன் துவங்கினோம். தற்போது ஒரு ஆண்டு முடிந்து இரண்டாம் ஆண்டு சிறப்பாக நடந்து வருகிறது. மாதம் மாதம் பௌர்ணமி அன்று மாதக்கூட்டம் நடந்து வருகிறது. தலைவர் சில பிரச்சனைகளை சந்தித்து பெருமை சேர்க்கும் வகையில் சீரும், சிறப்புமாக செயல்பட்டு வருகிறார். இதில் ஒரு முக்கிய காரணம் நமது பிள்ளைமார் சமுதாயத்திற்கு சொந்தமான 200 ஆண்டு பயன்பாட்டில் இருந்த சுடுகாட்டை (மயானக்கரை) இடித்து, தரைமட்டமாக்கி விட்டார்கள். கடுமையாக முயற்சித்து 17 மனுக்களுடன் கலெக்டர், தாசில்தார், பி.டி.ஓ., சப்கலெக்டர், வி.ஏ.ஓ., மாவட்ட சர்வேயர் என்று காவல்துறை உதவியுடன் போராடி நம் சமுதாயத்தின் சுடுகாட்டை மீட்டு எடுத்துள்ளோம். சுடுகாடு இடிந்த உடனே காங்கிரஸ் எம்.பி. சுதா அவர்களிடம் 15 நபர்களை அழைத்துச் சென்று எங்கள் சமுதாய சுடுகாட்டை கட்டித்தர வேண்டி உடனே கோரிக்கை வைத்தோம். 15 தினங்களில் ரூ. 4,00,000/– கான்ட்ராக்ட் கொடுத்து அனுமதியும் கொடுத்துவிட்டார். பல பிரச்சனைகளுக்கு அப்பால் மீட்டெடுத்து சுடுகாடு வேலை நடந்து வருகிறது.

S. செந்தில்குமார், தலைவர்

## திருச்சி:

20.7.26 திங்கள்கிழமை மாலை 6.30 மணி அளவில் நமது சங்கத்தின் பொருளாளர் திரு. N. பாண்டியன் – திருமதி. காமாட்சி பாண்டியன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற குடும்பச் சந்திப்பு (Family Get together) நிகழ்வுக்கு சங்கத்தின் அழைப்பை ஏற்று கார்குல உறவுகள் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்கு மிக்க நன்றி.

திரு. N. பாண்டியன் – திருமதி. காமாட்சி கார்குல சொந்தங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று மிகச் சிறப்பாக உபசரித்தார்கள். குடும்ப சந்திப்பு நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திரு. N. பாண்டியன் குடும்பத்தினர் மிகச் சிறப்பாக செய்து இருந்தார்கள்.

மகளிரணியினர் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு ஒருவருக்கொருவர் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் அனைவரையும் நலம் விசாரித்து, குழந்தைகளை ஆட வைத்து விளையாடி மகிழ்ந்தார்கள்.

திருச்சி சங்க செயற்குழு உறுப்பினர் திரு. G.V. சரவணன் தனது கடந்தகால அனுபவங்களை எடுத்துக் கூறி திருச்சி சங்கத்தைப் பற்றி பெருமையாக பேசினார்கள். தலைவர் திரு. G. சிவகுருநாதன் தனது உரையில் திரு. N. பாண்டியன் – திருமதி. காமாட்சி பாண்டியன் ஆகியோரின் பல நற்செயல்களை எடுத்துக் கூறி சங்கத்தின் சார்பாக பாராட்டுக்களை தெரிவித்தார்.

திருமண தகவல் மையத்தின் அமைப்பாளர் நவிலு. N.B. பாலசுப்ரமணியன் அவர்கள் திரு. N. பாண்டியன் – திருமதி. காமாட்சி அவர்களுக்கு பயனாடை அணிவித்து பாராட்டினார்கள். இரவு அறுசுவை விருந்துடன் குடும்ப சந்திப்பு நிகழ்ச்சி 9.00 மணிக்கு நிறைவடைந்தது.

நிகழ்வில் இணை அமைப்பாளர் திரு. C. சபாபதி, திருச்சி KBF தலைவர் S. சோமசுந்தரம், வழக்கறிஞர். மனோகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டார்கள்.

சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் செயலாளர் நன்றியை தெரிவித்தார்கள்.

செயலாளர்

✤ ✦ ✤

**ஈரோடு:**

03.07.2026 அன்று சங்கத்தின் மூத்த உறுப்பினர் உயர்திரு. S. முத்தரசப்பன் அவர்களின் 100வது பிறந்தநாள் விழாவை நம்முடைய சங்கத்தின் தலைவர் திரு. A. தேவேந்திரன் அவர்களின் ஆலோசனையின் பேரில் சங்கத்தின் கௌரவத் தலைவர் திரு. E.S. கேசவானந்தம் அவர்களின் சீரிய தலைமையில் சங்கச் செயலாளர் திரு. S. பால்ராஜ் அவர்கள் மற்றும் திரு. S. பூபதி அவர்கள் சங்க மண்டலச் செயலாளர் முன்னிலையில் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு, அன்னாருக்கு வாழ்த்து மடல் வழங்கி மற்றும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்து, அவரிடம் அனைவரும் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டோம்.

– S. பால்ராஜ், செயலாளர்

✤ ✦ ✤

## வருந்துகிறோம்

1. சீர்காழி தாலுக்கா, பச்சைபெருமாள்நல்லூர் திரு. சம்பத் அவர்களின் மகன் செல்வன் ஜெயசூர்யா 26.6.26 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துகொள்கிறோம்.
2. சீர்காழி தாலுக்கா, தென்பாதி, சின்னதம்பி நகர் திரு. K. கணேசன் பிள்ளை அவர்கள் 5.7.26 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துகொள்கிறோம்.
3. சீர்காழி தாலுக்கா, தென்பாதி, பாப்பையாநகர் K. சட்டநாதன்பிள்ளை அவர்களின் தாயாரும், முன்னாள் சங்க தலைவர் Late S. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்களின் மனைவியுமான சரஸ்வதி அம்மாள் 11.7.26 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.
4. சீர்காழி தாலுக்கா, சட்டநாதபுரம் திரு. R. சுப்ரமணியன் (ஆசிரியர் ஓய்வு) 17.7.26 அன்று இயற்கை எய்தினார் என்பதை சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

✤ ✦ ✤


LIC HFL
LIC HOUSING FINANCE LTD

**வீடு கட்டுவோர் மற்றும் வீடு வாங்குவோர் கவனத்திற்கு**

சென்னை அனைத்து பகுதி, திருவள்ளுவர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள கார்குல மக்கள், தாங்கள் இருக்கும் பகுதி அருகில் உள்ள LIC HFL வட்டார அலுவலகம் மூலம் அனைத்து விதமான வீட்டுக்கடன், கல்வி மற்றும் திருமணத்திற்கு வீட்டு அடமான கடன், வர்த்தக கடன் எளிய முறையில் துரிதமாக எந்தவிதமான சேவை கட்டணம் இல்லாமல் பெற அணுகவும்.



**30 ஆண்டுகள் அனுபவம் பெற்ற**

**V. அமிர்தகடேசன்**

(Authorised Top selling partner)

செல்: 9443220893

## தன்னம்பிக்கைத் தொடர் - 2

அளிப்பவர்: S. நடராஜ்

### ஃபீனிக்ஸ் பறவை என மீண்டும் எழுந்து வந்தவர்

1959ஆம் ஆண்டு, அஸ்கர் படேல் என்ற இளைஞர், இங்கிலாந்திலிருந்து ஒரு உறுதியான முடிவோடு தாயகமான இந்தியாவுக்குத் திரும்பினார். மும்பையில் இருந்த தனது தந்தையின் தொப்பி தயாரிப்பு தொழிலில் ஈடுபடக்கூடாது என்பதே அந்த முடிவு. அவர் தனக்கென ஒரு சொந்த தொழிலை உருவாக்க விரும்பினார். அந்த முடிவு அவரை தனக்கென ஒரு லாரி வாங்கச் செய்ததுடன், கிளாக்ஸோ (Glaxo) என்ற மருந்து நிறுவனத்திற்கான சரக்கு பரிமாற்றம் செய்யவும் வைத்தது. அப்பணி மூலம் அவர் 'படேல் ரோடுவேஸ்' (Patel Roadways) என்ற நிறுவனத்தை ஆரம்பித்ததுடன், அந்த வாகனத்தை அவரே ஓட்டவும் செய்தார். சிறிது சிறிதாக அந்நிறுவனம் வளர்ச்சியுள்ளது.

அடுத்த நான்கு தசாப்தங்களில் (40 ஆண்டுகள்) அது ஆசியாவின் மிகப்பெரிய சரக்கு போக்குவரத்து (Logistics) நிறுவனங்களில் ஒன்றாக வளர்ந்தது. படேல் இடைவிடாது தனது தொழிலை விரிவுபடுத்தினார். கூரியர் சேவை, விமானச் சரக்கு போக்குவரத்து, நிதிச் சேவைகள், அந்நியச் செலாவணி மற்றும் வேகமாக வளர்ந்து வந்த பணப் பரிமாற்றத் தொழில் என, பல துறைகளில் கால் பதித்தார். அந்நிறுவனம் இந்தியாவில் மிகவும் பிரபலமான ஒரு பெயராக மாறியது. கங்காரு சின்னம் கொண்ட அந்த நிறுவனத்தை நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்களும் உடனடியாக அடையாளம் கண்டு கொள்ளும் நிலை உருவானது. 'ஹவுஸ் ஆப் படேல்ஸ்' (House of Patels) என அழைக்கப்பட்ட அந்த பெரிய நிறுவனம் லாபம் ஈட்டுவது மட்டுமன்றி, பொதுமக்களின் நம்பிக்கைக்குரியதாகவும் விளங்கியது.

அவரின் ஐம்பது வயதின் பிற்பகுதியில், படேல் ஓய்வு பெற முடிவெடுத்து, நிறுவனத்தின் அன்றாட பொறுப்புகளைத் தனது மகன்களிடம் ஒப்படைத்த பின், அமைதியான, நிதானமான வாழ்க்கையை வாழ தலைப்பட்டார். கோல்ப் விளையாடுதல், பேரக்குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுதல், நாற்பதாண்டு கால கடும் உழைப்பின் பலன்களை அனுபவித்தல் போன்றவைகளை எதிர்நோக்கத் தொடங்கினார். அவர் ஒரு பெரும் வணிக சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்திருந்தார். இனி அதை வேறொருவர் முன்னெடுத்துச் செல்வார் என எதிர்பார்ப்பது நியாயமே!

ஆனால் 1990களின் பிற்பகுதியில், அவர் உருவாக்கிய அனைத்தும் கிட்டத்தட்ட சீர்குலைந்து போகும் நிலை ஏற்பட்டது. தொடர்ச்சியான பொருளாதார மந்த நிலை, அத்தொழிலை கடுமையாக பாதித்தது. உள் நிர்வாக குளறுபடிகள் பாதிப்பை மேலும் அதிகரித்தன. மேலும், அக்காலக்கட்டத்தில் நிலவிய அதீத ஊக வணிக வெறியின் உச்சத்தில் 'டாட்—காம்' (Dot-com) நிறுவனப் பங்குகளில் செய்யப்பட்ட பெரும் முதலீடுகள், சுமார் 300 மில்லியன் டாலர் இழப்பை ஏற்படுத்தின. லாரிக்கு லாரி, தசாப்தத்திற்கு தசாப்தம் என அவர் கட்டியெழுப்பிய 'ஹவுஸ் ஆஃப் படேல்ஸ்' சாம்ராஜ்யம் திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

57 வயதில், படேல் முன்னால் இரண்டு வழிகள் இருந்தன. நிறுவனத்தின் சிக்கல்களைப் பிறர் கவனித்துக்கொள்ள விட்டுவிட்டு, ஓய்வு வாழ்க்கைக்குச் சென்று எஞ்சியிருப்பதை மீட்க வல்லுநர்கள் முயற்சிப்பதை தூரத்தில் இருந்து வேடிக்கை பார்க்கலாம் அல்லது மீண்டும் வேலைக்குத் திரும்பலாம். அவர் மீண்டும் முழுமூச்சாக பணியில் ஈடுபட முடிவெடுத்து, வேலைக்குத் திரும்பினார். அப்போது, நிறுவனத்திற்குள் வந்ததும் எந்தவொரு ஆரவாரமான அறிவிப்போ அல்லது ஊக்கமளிக்கும் பேச்சோ இடம் பெறவில்லை. நிறுவனத்தை முதலில் கட்டியெழுப்ப உதவிய அதே அர்ப்பணிப்புடனும், ஒழுக்கத்துடனும் அவர் மீண்டும் தொழிலில் இறங்கினார். 1959க்குப் பிறகு உலகம் வெகுவாக மாறியிருந்தது. மின் அஞ்சலைப் பயன்படுத்துவது போன்ற அடிப்படை விஷயங்களைக் கூட அவர் புதிதாக கற்றுக்கொள்ள வேண்டி இருந்தது. தான் நிறுவிய வணிகத்தில் மீண்டும் செயல்பட தொடங்கவே அவர் எவ்வளவு கற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், எவ்வளவு தூரம் முன்னேற வேண்டியிருந்தது என்பதை உணர்த்தும் ஒரு சிறிய, ஆனால் முக்கியமான விஷயமிது. ஆனால் அவர் உறுதியாக பற்றிக் கொண்டிருந்த அடிப்படை விழுமியங்களை மாற்றவில்லை. கடின உழைப்பு, அதற்கும் மேலான மிகக் கடின உழைப்பு ஒன்றையே குறியாகக் கொண்டார். மற்றும் பிறர் மீது குறைசொல்வதையோ, பழிபோடுவதையோ அல்லது சுயபச்சாதாபத்தில் மூழ்கிப்போவதையோ தவிர்த்து, கடும் உழைப்பினை முன்னெடுத்தார்.

அடுத்த 5 ஆண்டுகள் கடும் உழைப்பு, சரியான முடிவுகள் எடுத்தல், கடன்களை அடைத்தல், வணிகச் செயல்பாடுகளைப் படிப்படியாக கட்டமைத்தல் என கடந்து சென்றது. இதற்கு எந்த ஒரு குறுக்கு வழியோ, திருப்புமுனையோ இருக்கவில்லை. பெரும்பாலானோர் பணி செய்து ஓய்வு பெறும் வயதில், இவர் நாள்தோறும் தொடர்ந்து மேற்கொண்ட உழைப்பின் வெற்றியை உணர்ந்தார். அவர் தனது முயற்சியை நிறைவு செய்தபோது, House of Patels நிறுவனம் மீண்டும்

நிதி ரீதியாக வலுப்பெற்றது மட்டுமன்றி, செழித்து வளர்ந்திருந்தது. இன்று இந்தியாவின் கூரியர், கோ–லோடிங் (Co-loading) சந்தையில் சுமார் 80% பங்கினை இந்நிறுவனம் கொண்டுள்ளது. மேலும் லாஜிஸ்டிக்ஸ் (சரக்கு கையாளுதல்) அந்நியச் செலாவணி, மற்றும் பணப் பறிமாற்ற சேவை ஆகிய துறைகளில் முன்னணியில் உள்ளது.

அஸ்கர் படேலின் வாழ்க்கை என்பது வீழினும் மீண்டும் எழும் மன உறுதி கொண்டிருந்தால், எந்த வயதிலும் வெற்றி பெறலாமென்பதை நமக்கு ஒரு வாழ்க்கைப் பாடமாக கற்றுக் கொடுக்கிறது என்பதே உண்மை!

✤ ✦ ✤

## இக்கரைக்கு அக்கரை பச்சை

முனைவர். வே. கிருஷ்ணகுமாரி

தன்னிடம் உள்ளதை விட அடுத்தவரிடம் இருப்பதோ அல்லது தூரத்தில் உள்ளதோ மிகச் சிறப்பாகவும், உயர்வானதாகவும் தோன்றும் மனநிலையைக் குறிக்க உருவான பழமொழியே ‘அக்கரைக்கு இக்கரை பச்சை’. இல்லாத பொருள் மீது எல்லோருக்கும் ஆசை வரும். அருமையான வாழ்வியல் உண்மையை சொல்லித் தரும் அனுபவ மொழி. எப்போதும் நம் கண்கள் அருகிலிருக்கும் பொருட்களைக் காணத் தவறிவிடும். தூரத்திலிருக்கும் பொருட்களை நாடி ஓடும். இது பொதுவான உண்மை. நதியின் ஒரு கரையில் மேயும் ஒரு மாட்டிற்கு, அக்கரையில் பசுமையான புல் நிறைய இருப்பது போல தோன்றுமென இப்பழமொழிக்கு விளக்கம் கூறுவர்.

சீதாவுக்கு எதிர்வீட்டில் இருக்கும் கீதாவைப் பார்த்து ஏக்க பெருமூச்சு. அவள் தினமும் மடிப்பு கலையாத சேலை கட்டி, Hand bag ஐ தோளில் தொங்கவிட்டு போவதைப் பார்த்து ஒரு ஏக்கம். ஆனால் கீதாவுக்கோ, சீதாவைப் பார்த்து ஹாயா வீட்டில் இருந்து, நன்றாக சமைத்து சாப்பிட்டு குடும்பத்துடன் நேரம் செலவிட்டு என்ன ஒரு அமைதியான வாழ்க்கை! என்னைப் போலவா எப்போதும் டென்ஷன், வீடு, ஆபீஸ் என்று ஒரே ஓட்டம்? என்ற ஏக்கம். இதுதான் பெரும்பாலும் மனித இயல்பாக காண்கிறோம். தன்னிடம் இருக்கும் வாழ்வின் அருமை தெரியாமல் அடுத்தவர் நிலை பார்த்து மனதில் துன்பம் கொண்டு ஏங்கி, தன் வாழ்வை வாழத் தெரியாமல் இருப்பது.

பேச்சாளர், ஓவியர், கவிஞர் நம்மிடையே இருப்பார். நாம் என்ன செய்வோம்; அவர்களை ஒரு பொருட்டாக எண்ணாமல், வெளியூரில் இருந்து பெரும் பேச்சாளர் என்று எண்ணிக்கொண்டு அவருக்கு பெரும் பொருள் கொடுத்து அழைத்து வருவோம். இதைத்தான் பெரியவர்கள் உள்ளூர் மாடு விலை போகாது என்பார்கள். நாம் எல்லோரும் பொதுவாக இறை நம்பிக்கை உள்ளவர்கள். எல்லாம் இறைவன் தந்தது என நம்புபவர்கள். அதனால் எல்லோருக்கும் ‘ஆட்டுக்கு வாலை அளந்து வைத்தது போல் சரியானபடிதானே அளந்து அமைத்திருப்பார். விரலுக்கேற்ற வீக்கம். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற மனநிலை நமக்கு வேண்டும்.

ஆலமரத்தடியினில் படுத்திருந்த ஒருவன், இவ்வளவு பெரிய மரத்திற்கு இவ்வளவு சிறியதாக பழத்தைப் படைத்திருக்கிறானே என நினைத்து சிரித்தானாம். எதுவரை? அந்த பழம் அவன் தலையில் விழும் வரை! இதுதான் எதார்த்தம். தூரத்து பச்சை கண்ணுக்கு அழகு. கிட்டே நெருங்கினால் தான் குறைகள் தெரியும். நம் வாழ்வும் அப்படித்தான். நாம் ஏன் இப்படி இருக்கிறோம்? நமக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? நம்மைச் சுற்றி இருப்பவர்கள் மிக மகிழ்ச்சியாக இருக்கிறார்களே என தோன்றும். மனம் குழம்பும். ஆனால் அவர்களுக்குத் தான் தெரியும் அவர்கள் வாழ்க்கை பற்றி. வீட்டுக்கு வீடு வாசல்படிதான், வெளி நாட்டு வாழ்க்கை குறித்து ஏங்குவது, சமூக வலைத்தளங்களில் பதிவுகள் பார்த்து பெருமூச்சு விடுவது; இப்படி செய்து கொண்டிருப்பின், நாம் எப்போது வாழ்வது?

எங்கு சென்றாலும், எப்படி இருந்தாலும் நிம்மதி எங்கே என்று தேடித் தேடி அலைவதை விட்டு, நமக்கு கிடைத்ததைக் கொண்டு சீராக, சிறப்பாக, வாழ முயலலாம் அல்லவா? அடுத்தவர் வாழ்க்கைப் பாதை வேறு; நம்முடையது வேறு. ஐந்து விரல்களும் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஒருவர் போல் மற்றொருவர் இருப்பதில்லை. எனவே இல்லாததை நினைத்து நேரத்தை வீணாக்கி, நமக்குள்ளதை அனுபவிக்க மறப்பது நியாயமாகாது. இது நம் வாழ்க்கை. இதை எப்படி சிறப்பாக, இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்வதுதான் புத்திசாலித்தனம். நம் எண்ணம், சொல், செயல் இவற்றால் யாரையும் காயப்படுத்தாத வாழ்க்கை வாழ்வதே திருப்தியானதாகும்; நிம்மதியானதாகும். மனிதர்கள் தங்களிடம் உள்ள வேலை, செல்வம், வாழ்க்கை ஆகியவற்றின் அருமை தெரியாமல், மற்றவர்களின் வாழ்க்கையைக் கண்டு ஏங்குவர். தங்களுக்கு கிடைத்த வாழ்க்கையைத் தாழ்வாக கருதி மற்றவர்களின் வாழ்வினை மேலாக கருதுவது ஒரு மாயையே ஆகும். நிச்சயம் நாம் புத்திசாலிகள். இப்படித்தான் இருக்கிறோம்! இருப்போம்! எண்ணம் போல் வாழ்க்கை! நன்றி!

✤ ✦ ✤

## அலைபேசியை பாதுகாப்பது - ஓர் அலசல்

T.M. நடராஜன்

இன்றைய உலகில் மொபைல் என்பது வெறும் பேசும் சாதனம் அல்ல. அதில் நமது வங்கி தகவல்கள், குடும்ப புகைப்படங்கள், OTPகள், சமூக வலைத்தள கணக்குகள், அலுவலக தகவல்கள், உறவினர்கள் நண்பர்களின் பிறந்தநாள், திருமணநாள் போன்ற முக்கிய தினங்கள் என வாழ்க்கையின் பெரும் பகுதி சேமிக்கப்பட்டுள்ளது. ஒரு மொபைல் திருடப்படுவது அல்லது ஹேக் செய்யப்படுவது என்பது வெறும் சாதன இழப்பு அல்ல; நமது தனி உரிமை மற்றும் பண பாதுகாப்பிற்கும் பெரிய ஆபத்தாகும். ஆகையால் ஒவ்வொருவரும் மொபைல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியமாகும்.

1. வலுவான Password/PIN பயன்படுத்துங்கள். **1234, 0000**, பிறந்த தேதி போன்ற எளிய PINகளைத் தவிர்க்கவும். குறைந்தது **6** அல்லது **8** இலக்க PIN பயன்படுத்தவும். Finger Print அல்லது Face Lock வசதியை இயக்கி வைத்திருக்கவும். ஒவ்வொரு Appக்கும் ஒரே Password பயன்படுத்தாதீர்கள். இது உங்கள் அலைபேசியை மற்றவர்கள் திறப்பதைத் தடுக்க உதவும்.

2. தெரியாத Appகளை பதிவிறக்கம் (Install) செய்யாதீர்கள். பலர் Whatsapp மூலம் வரும் Apk fileகளை install செய்கிறார்கள். இதுவே Malware மற்றும் வைரஸ் பரவுவதற்கான முக்கிய காரணியாகும். Google Play Store அல்லது Apple App Store போன்ற நம்பகமான இடங்களில் இருந்து மட்டுமே App Install செய்யுங்கள். தேவையற்ற அனுமதி கேட்கும் Appகளை தவிர்த்துவிடுங்கள். Free ofter, லாட்டரி, Cracked app போன்றவற்றில் எச்சரிக்கை அவசியம்.

3. Public Wi-Fi பயன்படுத்தும்போது கவனம் தேவை. ரயில்வே ஸ்டேஷன், விமான நிலையம், மால் போன்ற இடங்களில் இலவச Wi-Fi பயன்படுத்தும்போது, Banking Transaction செய்யாதீர்கள். Password Login தவிர்க்கவும். தெரியாத Wi-Fi Networkகளில் Auto Connect அமைப்பை நிறுத்தவும். பப்ளிக் Wi-Fi மூலம் Hack செய்பவர்கள் உங்கள் தகவல்களைத் திருட வாய்ப்பு உள்ளது.

4. Mobile update அவசியம். பலர் Software update-ஐ புறக்கணிக்கிறார்கள். ஆனால் அந்த Updateகளில் முக்கியமான Security Fixகள் இருக்கும். Mobile OS update செய்யுங்கள். (Operating System) Appsஐ புதுப்பித்து வைத்திருங்கள். பழைய version பயன்படுத்துவது ஆபத்தானது.

5. OTP மற்றும் Personal தகவல்களைப் பகிர வேண்டாம். இன்றைக்கு அதிகமான மோசடிகள் Phone call மற்றும் SMS மூலம் நடக்கின்றன. கவனிக்க வேண்டியது: Bank OTP யாரிடமும் சொல்லாதீர்கள். 'KYC' update, Reward, Income Tax Refund போன்ற பெயர்களில் வரும் Linkகளைத் திறக்க வேண்டாம். தெரியாத Linkகளை Click செய்யாதீர்கள். ஒரு Click கூட உங்கள் Bank accountஐ காலியாக்கி விடலாம்.

6. Find my device வசதியை On செய்யுங்கள். மொபைல் தொலைந்தால் கண்டுபிடிக்க: Android - Find my Device; I-Phone - Find my iphone இந்த வசதியை On செய்து வைத்தால் Mobile Location கண்டுபிடிக்கலாம். Remote Lock செய்யலாம். Data Delete செய்யலாம்.

7. முக்கிய தகவல்களுக்கு எப்போதும் Backup வைத்திருங்கள். மொபைல் சேதமடைந்தாலும் அல்லது தொலைந்தாலும் Google Drive / i cloud Backup பயன்படுத்துங்கள். முக்கிய புகைப்படங்கள் மற்றும் Documents பாதுகாப்பாக சேமியுங்கள். Backup இல்லையெனில், தகவல்களை நிரந்தரமாக இழக்க நேரிடலாம்.

8. Social Media பாதுகாப்பு: FaceBook, Instagram, Whatsapp போன்றவற்றில் Two factor Authentication பயன்படுத்துங்கள். Publicஆக Personal தகவல்களை பகிரவேண்டாம். Location sharing தேவையின்றி Onல் வைத்திருக்க வேண்டாம்.

9. Battery வேகமாக குறைவது, அதிக Ads வருவது எச்சரிக்கை தேவை. மொபைலில் திடீர் Pop-Up Ads, Battery விரைவாக drain ஆகுதல், Mobile slow ஆகுதல், தெரியாத apps தோன்றுதல், இவை Malware இருப்பதற்கான அறிகுறிகள் ஆகவிருக்கலாம். அப்படியானால் வைரஸ் scan செய்யுங்கள். சந்தேகமான Apps நீக்குங்கள். தேவையெனில் Factory Reset செய்யுங்கள்

10. குழந்தைகளின் மொபைல் பயன்பாட்டை கண்காணியுங்கள். இன்றைய குழந்தைகள் அதிக நேரம் U-Tube மற்றும் Games பயன்படுத்துகின்றனர். எந்த App குழந்தைகள் பயன்படுத்துகிறார்கள் என்பதை கவனிப்பது நலம். Perental Control வசதி பயன்படுத்துங்கள். Online-ல் புதியவர்களுடன் பேச வேண்டாம் என்று சொல்லிக்கொடுங்கள்.

மொபைல் என்பது நம் வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாகிவிட்டது. அதை பாதுகாப்பது என்பது நம் பணம், தனியுரிமை, குடும்பம் மற்றும் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு சமம். 'சிறு கவனம் பெரும் இழப்பைத் தடுக்கமுடியும்'. இன்றே உங்கள் அலைபேசியில் பாதுகாப்பு அமைப்புகளை சரிபார்த்து, பாதுகாப்பாக பயன்படுத்த தொடங்குங்கள். குழந்தைகளின் அலைபேசி பயன்பாட்டை கவனத்தில் கொள்ளவும். மேலே உள்ள தகவல்கள் மொபைல் பாதுகாப்பு குறித்த பொதுவான சைபர் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. நன்றி!

❖ ✦ ❖

## ஓர் அறிவியல் சாதனை - கல்பாக்கம்

உலகையே திரும்பிப் பார்க்க வைத்த நம்ம கல்பாக்கம்: ஒவ்வொரு இந்தியனும் நெஞ்சம் நிமிர்த்தி, பெருமைப்பட வேண்டிய வரலாற்றுத் தருணம்! நம் எதிர்காலத்தையே மாற்றப் போகும் ஒரு மாபெரும் மாயாஜாலம் சென்னைக்கு அருகில் உள்ள கல்பாக்கத்தில் சத்தமின்றி நடந்து முடிந்துள்ளது. ஆம்! ஜூன் 26, 2026 அன்று, இந்தியா உலக அறிவியல் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை எழுதியுள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வல்லரசுகள் பல கோடிகளைச் செலவழித்து, இது எங்களுக்கு சாத்தியமில்லை என்று கைவிட்ட ஒரு அதிநவீன அணுசக்தித் தொழில்நுட்பத்தை நமது இந்திய விஞ்ஞானிகள் சாதித்துக் காட்டியிருக் கிறார்கள். இந்தச் சாதனை வெறும் இயந்திரங்களின் வெற்றியல்ல; நமது விஞ்ஞானிகளின் பல தசாப்த காலத் தவம்!

இது குறித்து நாம் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், இது நமது வருங்கால சந்ததிகளின் எதிர்காலப் பாதுகாப்பிற்கான உத்தரவாதம். கடந்த ஏப்ரல் 6, அன்று கல்பாக்கத்தில் உள்ள PFBR (Prototype Fast Breeder Reactor) அணு உலை தனது முதல் 'கிரிட்டிக்காலிட்டி' (Criticality - தடையற்ற தொடர் அணுர் வினை) நிலையை அடைந்து வெற்றி பெற்றது, உலகளாவிய ஒரு சாதனை.

சாதாரண அணு உலைகளை ஒரு விறகு அடுப்பு என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அதில் 1 கிலோ விறகை வைத்தால், அது எரிந்து வெப்பத்தைக் கொடுத்துவிட்டுச் சாம்பலாகிவிடும். ஆனால் கல்பாக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த Fast Breeder Reactor ஒரு அட்சயபாத்திர அடுப்பு! இதில் நீங்கள் ஒரு கிலோ எரிபொருளைப் போட்டால், அது உங்களுக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுப்பதுடன், மீதமாக 1.2 கிலோ புதிய எரிபொருளை உங்களுக்கு உருவாக்கிக் கொடுக்கிறது. அதாவது தான் பயன்படுத்தும் எரிபொருளை விட அதிக எரிபொருளை இது உற்பத்தி செய்து கொடுக்கிறது என்பது நம்ப இயலாத உண்மையே!

நம் மண்ணின் வளம், நம் கையில்! இந்தியாவில் யுரேனியம் என்ற அணு எரிபொருள் குறைவாகவே உள்ளது. ஆனால் கேரளா, மற்றும் தமிழக கடற்கரை மணலில் 'தோரியம்' என்ற கனிமம் கொட்டிக் கிடக்கிறது. டாக்டர் ஹோமி பாபா, அப்துல்கலாம் போன்ற விஞ்ஞானிகள் கண்ட கனவு இதுதான். நமது மண்ணில் கிடைக்கும் தோரியத்தைப் பயன்படுத்தி, மின்சாரம் தயாரிக்க வேண்டும். "கல்பாக்கத்தின் இந்த வெற்றி, அந்த மாபெரும் கனவின் வாசற்படியைத் திறந்துள்ளது. இனி மின்சாரத்திற்காக யாரிடமும் கையேந்தாமல், இனி வரும் 300 ஆண்டுகளுக்கு இந்தியாவிற்குத் தேவையான மின்சாரத்தை நாமே தயாரித்துக் கொள்ள முடியும்!"

உலகை வியக்கவைத்த 'பசுமை ஹைட்ரஜன்' சாதனை (Green Hydrogen). ஜூன் 26ஆம் தேதி அன்று கல்பாக்கத்தில் உலகின் முதல் அணு ஆற்றல் உதவியுடன் செயல்படும் ஹைட்ரஜன் உற்பத்தி நிலையம் திறக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தின் எரிபொருள் ஹைட்ரஜன் தான். பெட்ரோல், டீசல், நிலக்கரி என அனைத்தையும் எரிப்பின், கரும்புகை வரும்; சுற்றுச்சூழல் சீரழியும். ஆனால் ஹைட்ரஜனை எரிபொருளாகப் பயன்படுத்தினால், புகைக்குப் பதிலாக வருவது சுத்தமான தண்ணீர் மட்டுமே! ஆனால் இதில் ஒரு பெரிய சிக்கல் இருந்தது. இந்த நல்ல ஹைட்ரஜனைத் தயாரிக்க, தண்ணீரை ($H_2O$) பிரித்து எடுக்க வேண்டும். அதற்கு மிகப்பெரிய அளவில் மின்சாரம் தேவைப்படும். அதைத் தயாரிக்க மீண்டும் நிலக்கரியை எரிக்க வேண்டும். இது 'சுத்தமான வீட்டிற்குள் குப்பையைக் கொண்டு வருவது' போன்று முரண்பாடாக இருந்தது.

ஆயின், நமது கல்பாக்கம் IGCAR (இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம்) விஞ்ஞானிகள் ஒரு அற்புதமான வழியைக் கண்டுபிடித்தனர். அணு உலையில் மின்சாரம் தயாரிக்கும் போது வெளிப்படும் அபரிமிதமான வெப்பத்தை வீணடிக்காமல், நேரடியாக பயன்படுத்தி 'காப்பர்–குளோரின் சுழற்சி' (Copper Chlorine cycle) என்ற முறையில் நீரைச் சூடாக்கி, பிரித்து ஹைட்ரஜனை உருவாக்கியுள்ளனர். அதாவது எந்த ஒரு மாசும் இல்லாமல், வளிமண்டலத்தில் ஒரு

துளி கார்பனும் வெளியிடாமல், உலகின் மிக சுத்தமான ஹைட்ரஜனை அணுசக்தி மூலம் தயாரித்து இந்தியா உலகிற்கே வழிகாட்டி உள்ளது. இந்த சாதனைகள் ஒரே இரவில் நடந்துவிடவில்லை.

சாதாரண அணு உலைகளில் வெப்பத்தைக் குறைக்கத் தண்ணீரைப் பயன்படுத்துவார்கள். ஆனால் இந்த Fast Breeder அணு உலையில் வெப்பத்தைக் குறைக்க ‘திரவ சோடியம்’ (Liquid Sodium) என்ற உலோகத்தைப் பயன்படுத்த வேண்டும். சோடியம் காற்றோடு கலந்தால் தீப்பிடித்து எரியும்; நீரோடு கலந்தால் வெடித்துச் சிதறும்! இப்படிப்பட்ட ஒரு ஆபத்தான திரவ உலோகத்தைக் கையாள்வது என்பது கண்கட்டி வித்தையை விடக் கடினமானது. பல வெளிநாடுகள் இந்த ஆபத்தினால், தங்கள் ஆராய்ச்சியை நிறுத்திவிட்டன. ஆனால் நமது இந்திய விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக இரவும், பகலுமாகச் சிந்தித்து பாதுகாப்பான தொழில்நுட்பங்களை உள்ளூரிலேயே (Indigenous Technology) உருவாக்கி, இந்த திரவ சோடியத்தை வெற்றிகரமாக கையாண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாராட்ட நமக்கு வார்த்தைகளே இல்லை எனலாம்.

சாமானியர்களான நமக்கு இதனால் என்ன பயன்? குறைந்த விலையில் மின்சாரம்; இந்தியா முழுவதும் தடையற்ற மலிவான மின்சாரம் கிடைக்கும். நிலக்கரித் தட்டுப்பாடு இருக்காது. வளைகுடா நாடுகளில் போர் நடந்தால் பெட்ரோல் விலை உயரும் எனபயப்படத்தேவையில்லை.நமதுசொந்தஹைட்ரஜன் எரிபொருள் மூலம் நமது தொழிற்சாலைகள் (எஃகு, உரம் போன்றவை) இயங்கும். மிக முக்கியமாக மாசுக் கட்டுப்பாடு. கார்பன் வெளியேற்றம் முற்றிலும் குறைந்து, நமது அடுத்த தலைமுறை மாசற்ற, தூய்மையான காற்றைச் சுவாசிக்கும் சூழ்நிலை ஏற்படும். தேசியப் பாதுகாப்பு பலப்படும். எரிசக்தியில் நாம் யாரையும் சாராமல் தற்சார்பு (Self-reliance) அடையும்போது, உலக அரங்கில் இந்தியாவின் வல்லரசுப் பிடி இன்னும் பலமடங்கு இறுகும்.

கல்பாக்கம் என்பது இந்தியாவின் அறிவியல் தன்னம்பிக்கையின் அடையாளம். இன்று அணுசக்தி மற்றும் பசுமை ஆற்றல் துறையில் நமது பாரதம் உலகின் சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்து உள்ளது. இந்நிலையை உருவாக்கிய விஞ்ஞானிகளுக்கு நமது நெஞ்சார்ந்த பாராட்டுகள்!

திரு. வாகீசன்
WhatsApp செய்தி

## எங்கள் கிராமம்

நான் எனது தாத்தாவின் அதாவது எனது தாயார் திருமதி சம்பூர்ணா இனியன் அவர்களின் தந்தையார் திரு பி. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்களின் கிராமத்தைப் பற்றி என் தாத்தா கூறுவது போல் எழுதுகிறேன்.

நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத்தரணியில் இருக்கும் எண்ணற்ற செழுமையான வளமையான ஊர்களில் ஒன்று எங்களது அழகான சின்ன கிராமம்.

மக்களின் எண்ணிக்கையை விட, வீடுகளின் இருப்புகளை விட, வயல்வெளிகள், வாழை தென்னை தோப்புகள், மா பலா கொல்லைகள், வெற்றிலைக் கொடி கால்கள் என எங்கள் ஊரை இயற்கை அள்ளி அரவணைத்து இருந்தது. மூன்று போகங்களும் அதாவது சம்பா, குறுவை, தாளடி என விளையக்கூடிய வயல்வெளிகள். கும்பகோணத்திற்கு பெருமை சேர்க்கும் எங்கள் கிராம வெற்றிலைகள். முக்கனிகளில் ஒன்றான பலாப்பழத்திற்கு பலம் சேர்க்கும் வேர்ப்பலா மரங்கள். சுட்டெரிக்கும் அக்னி வெயிலிலும் தரையில் கொஞ்சம் கூட வெளிச்சம் படாத வண்ணம் மிக அடர்த்தியாக அடர்ந்து நெடுந்து உயர்ந்து வளர்ந்து இருக்கும் தென்னை வாழை தோப்புகள். இந்த இயற்கையே எங்கள் ஊரின் பெருமை சொல்லும். இவ்வளவு பெருமையையும் தன்னகத்தே கொண்டிருந்தாலும் அமைதியான நல்வாழ்வு தரும் ஊராக இருப்பிடமாக எங்கள் உயிர் மூச்சாக இருந்தது எங்கள் பூர்வீகமான **நெடுந்தெரு** என்று அழைக்கப்படும் ரெகுநாதபுரம். தஞ்சை குடந்தை பிரதான சாலையில் நடு நாயகமாக விளங்கும் அழகான ஊர். தேசிய நெடுஞ்சாலையின் அருகிலேயே அமைந்திருக்கும் ஊர். நீண்ட நெடிய ஒற்றைத் தெரு அதில் தெற்கு பார்த்த வீடுகள்; வடக்கு பார்த்த மாட்டுக்கொட்டில்கள் என்று இருந்தது ஒரு காலத்தில். ஒவ்வொரு வீடும் குறைந்தபட்சம் 5 ஆயிரத்தில் இருந்து 8000 சதுர அடி பரப்பளவு கொண்ட அவ்வளவு பெரிய மூன்று கட்டு நான்கு கட்டு வீடுகள். கூட்டுக்குடும்பத்திற்கு இலக்கணமாக திகழ்ந்த வீடுகள். நம் கார்குலத்திற்கே உரிய விருந்தோம்பலைப் பறைசாற்றும் விதமாக ஒவ்வொரு வீட்டு வாசலிலும் மிகப்பெரிய நீண்ட நெடிய திண்ணைகள். வீட்டுக் கொல்லைப்புறத்தில் ஆறு ஓடிக் கொண்டிருக்கும். அதில் ஒவ்வொரு

வீட்டிற்கும் துறைகள் உண்டு. கிட்டத்தட்ட 5 லிருந்து 10 மாடுகள் பராமரிக்கும் அளவிற்கு மிக பெரிய மாட்டுத்தொழுவங்கள். கூடுதலாக எங்கள் வீட்டில் குதிரைத் தொழுவம் இருந்தது. குதிரைகளையும் வளர்த்தோம் குதிரை வண்டியிலும் வளர்ந்தோம்.

ஊரின் ஆரம்ப எல்லையில் எங்களால் பிள்ளையார் கோயில் என்று அழைக்கப்படும் பெரியநாயகி உடனுறை கைலாசநாதர் கோயில், சிறு கோயிலாய் அமைந்திருக்கும் எல்லோரையும் அன்பாய் வரவேற்க. ஊரின் மையப்பகுதியில் காளியம்மன் கோயில். ஊரின் இன்னொரு எல்லைப் பகுதியில் கிருஷ்ணன் பாமா ருக்மணி சஹிதமாக அழகாக காட்சி கொடுத்துக் கொண்டிருப்பார். அக்கோயிலைச் சுற்றி ஐயங்கார் அக்ரஹாரமும் எங்கள் வீதியினூடே இணைந்திருக்கும். ஒருபுறம் அரனும் இன்னொரு புறம் அரியும் எங்களைப் பாதுகாப்பது எங்கள் ஊர் பெற்ற பெரும்பாக்யம்.

காலமாற்றத்தால் கல்வியின் நோக்கமாய், திரவியத்தின் தேவையாய்ப் பலர் பல இடத்திற்குப் புலம் பெயர்ந்தாலும் எங்கள் மண்ணின் பெருமையும் மகத்துவமும் எங்களின் உள்ளே எப்போதும் இருந்து கொண்டே இருக்கும், உயிர் வாழும் வரை. பல ஆசிரியர்கள், வங்கி மேலாளர்கள், பொறியாளர்கள், மருத்துவர்கள் என்று எங்கள் ஊரின் மைந்தர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கிறார்கள். அது எங்கள் ஊருக்குக் கிடைத்த மிகப்பெரும் பெருமை. மேலும் 108 சிவாலயம், சப்தஸ்தான தலங்கள், பாப விமோசன பெருமாள், கஜேந்திர மோட்ச பெருமாள், மச்சபுரீஸ்வரர் என்று எங்கள் ஊருக்கு ஒரு ஐந்து கிலோமீட்டர் முதல் 10 கிலோமீட்டர் தொலைவிற்கு உள்ளேயே புராதன கோயில்கள் பல உள்ளன.

மேலும் அக்காலத்தில் கார்குல ஏழு ஊர் என்று அழைக்கப்படும் நாதன் கோயில், மாடாகுடி, கிளியூர், வலங்கைமான், புத்தூர், அவளி வனல்லூர், நெடுந்தெரு ஆகிய ஊர்களுக்குள்ளேயே பெண் கொடுத்து பெண் எடுக்கும் பழக்கம் இருந்தது. அதை எங்கள் ஊர் கட்டுப்பாடாகவே பாவித்து எங்கள் தலைமுறை வரை பின்பற்றிக் கொண்டிருந்தோம். பின்பு காலசூழல், கல்வி, வேலைவாய்ப்பு என்று செல்ல ஆரம்பித்ததும் வெளி ஊர் கார்குல மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் ஏழு ஊர்களுக்குள்ளே சங்கமிக்கலாயினர். இப்போது எங்கள் 7 ஊர் அனைத்து ஊர் கார்குலங்களையும் அரவணைக்கத் தொடங்கிவிட்டது. இத்தகைய செழுமையான பழக்கங்கள் உடைய இயற்கை வளங்கள் உடைய எங்கள் ஊருக்கு வாய்ப்பு கிடைக்கும் போது நம் கார்குல சொந்தங்கள் அனைவரும் வந்து சிறப்பிக்குமாறு இக்கட்டுரையின் வழியே கேட்டுக் கொள்கிறேன்.

எப்படி இருந்தது எங்கள் தாத்தாவின் மொழி. நம் கண் முன்னே அவர்களின் ஊரைக் காட்சிப்படுத்தி விட்டார்கள் அல்லவா? அவ்வளவு சிறப்பு மிக்க என் தாத்தாவின் ஊரை அனைவரும் காண வாருங்கள்! அன்பாய் காத்திருக்கிறோம் உங்கள் வருகைக்காக!

நன்றி!

நிலாஸ்ரீநிதி இனியன்,
இளையபெருமாள்நல்லூர்
4ஆம் வகுப்பு,
கோகிலாம்பாள் சிபிஎஸ்இ பள்ளி,
குழவடையான்

❖ ✦ ❖

## குத்தங்குடி பெருமாள்

(கொத்தங்குடி)

புராண காலத்தில் திருக்கயிலையில் அரியும் சிவனும் சொக்கட்டான் விளையாடினார்கள். இந்த ஆட்டத்துக்கு அம்பிகை நடுவராக இருந்தாள். விளையாட்டின் நிறைவில் தன் சகோதரராகிய திருமால் வென்றதாக அறிவித்தாள் லோகமாதா. அஞ்ஞானத்தின் மேலீட்டால் சகோதர பாசம் தலைதூக்கிய நிலையில் அம்பிகை தவறு செய்ததாக ஈசன் கோபித்தார். தவறாக அளித்த தீர்ப்பென்று ஈஸ்வர சாபத்திற்கு ஆளானாள் அம்பாள். அஞ்ஞானத்தின் குறியீடாக பசு வடிவம் தாங்கியவளாய் கயிலையை விட்டு நீங்கினாள்.

இங்ஙனம் சாப நிவர்த்தி வேண்டியவளாய் பூலோகத்தில் அம்பிகை பூஜித்த காவிரிக்கரைத் தலங்கள் ஏராளம். பூவுலகம் சுபிட்சம் பெறவேண்டும், அன்னையின் திருவடிகள் இந்த தலங்களில் படவேண்டும் என்பதாலேயே நிகழ்த்தப்பட்ட ஈசனின் திருவிளையாடல் என பெரியவர்கள் சொல்வார்கள். அவ்வாறு பூலோகம் வந்த அம்பாளுடன் திருமகள், கலைமகள் முதலான ஏனைய சக்திகளும் பசுவடிவம் எடுத்து வந்தார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்காக திருமாலும் 'கோஸகர்' எனும் மேய்ப்பர் வடிவம் தாங்கியவராக வந்தாராம்.

மயிலாடுதுறையை மையமாகக் கொண்டு அமைந்துள்ள ஏராளமான தலங்கள் மேற்கண்ட புராணக் கதையுடன் தொடர்புகொண்டவை. தேரழுந்தூர், அசிக்காடு, கோமல், மாந்தை, திருவாடுதுறை முதலான தலங்களின் வரிசையில் கோமல் எனும் ஊருக்கு அருகில் உள்ள குத்தங்குடி ஸ்ரீநிவாசப் பெருமாள் ஆலயமும் ஒன்று.

குத்தன் என்ற தமிழ்ச் சொல்லுக்கு பாதுகாப்பவர் என்று பொருள். பசுவுரு நாயகிக்கு பாதுகாவலனாக வந்த மகாவிஷ்ணு இத்தலத்தில் நின்று அருளியதால் குத்தங்குடி என்கிற பெயர் உண்டானது என்பார்கள். வழக்கில் கொத்தங்குடி என வழங்கப்படுகிறது. இவ்வூர் மக்களால் போற்றி வணங்கப்பட்ட தெய்வம் ஸ்ரீநிவாசப்பெருமாள். புராணக் காலத்தில் பசு உருவில் வந்த அம்பிகையுடன் சகல தேவர்களும் வந்து தங்கிய புண்ணிய பூமி என்பதால் அவர்கள் வேண்டியதின் பேரில் திருமால் ஆனவர் இங்கு எட்டு திசைகளிலும் எட்டு வடிவங்களாகக் காட்சியளித்து அருள்புரிந்தார். ஒரு காலத்தில் கிருஷ்ண பக்தி செழித்து வளர்ந்த பூமியாக விளங்கியிருக்கிறது.

கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவில். ராஜகோபுரம் இல்லை. பிரதான வாயிலைக் கடந்தால் சிறு மண்டபத்தில் கருடாழ்வார், கைகூப்பியவராய் எதிரேயுள்ள பெருமாளை சேவித் திடும் கோலம். எதிரே மையக்கோயில் மூலஸ்தா னத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் நின்ற கோலத்தில் ஸ்ரீநிவாசப் பெருமாள் அருள்புரிகிறார். பெருமாள் மேலிரு திருக்கரங்களில் சங்கு சக்கரம், முன்னிரு திருக்கரங்களில் அபய–வரதம் எனப் பேரழகுடன் சேவை சாதிக்கிறார். தேவியர் இருவரும் கரங்களில் தாமரை ஏந்தியவர்களாய் காட்சியளிக்கிறார்கள். கருவறையில் இவருக்கு முன்பாக உள்ள உலோகத் திருமேனியரும் இந்த அமைப்பு உடையவர்கள். கூடுதலாக குழந்தை கிருஷ்ணர் திருமேனி ஒன்றும் உள்ளது. ஆலிலையில் அறிதுயில் கொள்ளும் குழந்தையாக இருக்கும் இந்த கிருஷ்ணரை மடியில் வைத்துப் பிரார்த்தனை செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும் என்கிற நம்பிக்கை நிலவுகிறது இங்கு.

கருவறைக்கு முன்பாக உள்ள அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் அக்காலத்தில் கருங்கல் வேலைக்கு சாட்சியாக இன்றும் பழைய உறுதி குலையாமல் நிற்பது ஆச்சர்யம்தான். இந்த மொத்த அமைப்புமே நல்ல உயரமான மாடக்கோயிலாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. நின்ற நிலையில் காட்சி தரும் தும்பிக்கை ஆழ்வார், மிகப் பெரிய உருவினர். கூப்பிய கரங்களுடன் காட்சி தரும் அனுமார் திருமேனியும் வெகு அழகு.

கருவறையில் அருளும் பெருமாள் மட்டுமன்றி மற்றொரு பிரம்மாண்டமான தேவியர் சகிதம் பெருமாள் அர்த்தமண்டபத்தில் காட்சி தருவது வியப்பு. இதற்கு சுவாரசியமான கதை உண்டு. முன்னொரு காலத்தில் இவ்வூரில் வாழ்ந்த கார்குல வேளாளர் குடும்பத்தை சேர்ந்த மாமியார், மருமகள் இருவரும் பெருமாளின் தீவிர பக்தைகள். மகன் பெருமாளுக்காக கோவில் கட்டி வந்த வேளையில், மகன் மரணமடைய, சிலைகளை மண்ணுக்கடியில் மாமியார் புதைத்துவிட்டார். மருமகளோ கணவரின் கடைசி ஆசையாக இருந்த கோவிலை நிறுவ வேண்டுமென அது போன்றே சிலைகளை உருவாக்க சிற்பியிடம் கூறி, அவற்றை கருவறையில் பிரதிஷ்டை செய்தார். அதைக் கண்ட மாமியாரும் மனம் திருந்தி மண்ணில் புதைத்த சிலைகளை மீட்டு அர்த்தமண்டபத்தில் நிறுவினார். இரண்டும் ஒன்றே போன்று மிகவும் அழகான பெருமாள்களாக சேவை சாதிக்கின்றனர். அதற்கு சாட்சியாக அதே திருமேனிகளுடன் இந்த தலத்தில் அர்த்தமண்டபத்தில் நிலைத்தும் இருக்கிறாராம்.

கொத்தங்குடி கிராமம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட அழகிய கிராமம். யாவரும் தீவிர விவசாயிகள். 110 வருடங்களுக்கு முன்பு எங்கள் மூதாதையர்களால் உருவாக்கப்பட்ட இந்த பெருமாள் கோவில் 1917ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1923ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வூரில் 1200 வருடங்கள் பழமையான ஸ்ரீபிரகன் நாயகி சமேத ஸ்ரீ கோடீஸ்வர சுவாமி அருளும் சிவன் கோவிலும் காளியம்மன் கோவிலும் உள்ளது. ஆலிலை கிருஷ்ணரால் குழந்தை பாக்யமும் பெருமாள் அருளால் குடும்ப ஒற்றுமை ஏற்படவும் இக்கோவில் விசேடமாக வணங்கப்படுகிறது. விரைவில் கும்பாபிஷேகம் காண இருக்கும் பெருமாளை சேவித்து பயனடையுமாறு கொத்தாங்குடிவாசியான நான் கேட்டுக்கொள்கிறேன். பெருமாள் கும்பாபிஷேகம் ஆன பின்பு மீண்டும் இந்த கிராமம் பொலிவுடன் விளங்க பிரார்த்திக்கிறேன்.

தாரிணி தியாகராஜன்
மயிலாடுதுறை

## சங்கப்பலகை

**பங்கேற்போர்:** கோமதி, தீபிகா, பிரியா, மீனா, மீரா, ஆண்டாள், வசுமதி, கௌரி, சித்ரா.

**இடம்:** அடையாறில் உள்ள கோமதியின் இல்லம்.

தோழிகள் அனைவரும் மாலை சுமார் 4 மணி அளவில் கூடுகின்றனர்.

கோமதி: வாங்க! வாங்க! உட்காருங்க. ஜில்லுன்னு ரோஸ்மில்க் போட்டு வெச்சிருக்கேன். குடிச்சுட்டு நம்ம கச்சேரியை ஆரம்பிக்கலாம்.

பிரியா: ஏய்! ரொம்ப நல்லாருக்கு. சியா விதைகள் போட்டிருக்கியா?

கோமதி: அது உடம்புக்கு குளிர்ச்சின்னு சொன்னாங்கப்பா. அதனால் போட்டிருக்கேன். அக்கா ஆரம்பிங்கக்கா!

ஆண்டாள்: ஐந்தாவது மாதமான ஆவணி மாதம், மடங்கல், கார் என்ற பெயராலும் அழைக்கப்படும். இம்மாதத்தில் இருந்து நமக்கு பண்டிகைக் காலமாகும். ஆவணி மாதம் கலைகளின் மாதமாக போற்றப்படுகிறது.

மீரா: அக்கா! என்னென்ன தேதிகளில் நமது பண்டிகைகள் வருதுன்னு சொல்லுங்க.

ஆண்டாள்: ஆகஸ்ட் 23ஆம் தேதி ஆவணி மூலம், 26ஆம் தேதி ஓணம், ஆகஸ்ட் 27 ஆவணி அவிட்டம், 28 வரலட்சுமி விரதமும், ரக்ஷாபந்தனும், செப்டம்பர் 4ஆம் தேதி கோகுலாஷ்டமியும், 14ஆம் தேதி பிள்ளையார்சதுர்த்தியும் வருகிறது. செப்டம்பர் 11ஆம் தேதி பாரதியாரின் நினைவுநாள் வருகிறது.

மீரா: ஆவணி மாதம் சிதம்பரம் நடராஜருக்கு கனகசபையில் மாலையில் அபிஷேகம் நடைபெறும். தேவர்களுக்கு ஆவணி இரவு நேரம் ஆகும்.

ஆண்டாள்: மதுரையில் ஆவணி மூலம் மிகவும் முக்கியமாகும்.மதுரைசொக்கநாதப்பெருமான்நடத்திய 64 திருவிளையாடல்களில் சில முக்கியமானவை ஆவணி மூலத் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. பிட்டுக்கு மண் சுமந்த கதையை விழாவாகவே மதுரையில் கொண்டாடுகின்றனர்.

கோமதி: அக்கா எனக்கு மலையாளிகள் ஓணம் கொண்டாடுவது பிடிக்கும். அது மட்டுமல்ல கேரளாவின் இரண்டு முக்கியப் பண்டிகைகளான ஓணம் மற்றும் விஷு ஜாதி, மத பேதமின்றி எல்லா இனத்தாராலும் கொண்டாடப்படுவது எவ்வளவு நல்லா இருக்கு!

வசுமதி: ஆமாம்பா! எனக்கும் கேரளாவின் அந்த உணர்வு மிகவும் பிடிக்கும். உலக விஷயத்திற்கு திரும்புவோம்பா. மத்திய கிழக்கு நாடுகளில் அமைதி எப்போது திரும்பும் என்றே தெரியவில்லை. ஆர்டிக் பகுதியில் உள்ள உலகின் மிகப் பெரிய தீவான கிரீன்லாந்து, டென்மார்க்கின் தன்னாட்சி பிரதேசமாகும். இதைச் சுற்றியுள்ள கடற்பகுதி ரஷ்யா, சீனக்கப்பல்களால்நிரம்பியுள்ளதால்,அமெரிக்காவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக அமெரிக்க அதிபர் கூறுவதுடன், அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக கிரீன்லாந்தை இணைக்கும் மசோதாவையும் பல மாதங்களுக்கு முன் தாக்கல் செய்தார். ஆனால் கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ்பிரடெரிக் நீல்சன், நாங்கள் ‘நேட்டோ’வையும்,ஐரோப்பிய யூனியனையுமே விரும்புகிறோம் என திட்டவட்டமாக கூறி உள்ளார்.

மீனா: ஏன் இப்பவும் ஆதிக்க மனப்பான்மை வல்லரசுகளிடையே உள்ளது என்பதே ஆச்சரியமாக உள்ளது. காலை நேர சூரிய ஒளி நமக்கு வைட்டமின் ‘D’யைத் தருகிறதுன்கிறது நாம் அறிந்ததே. ஆனால் பகல் நேர சூரிய ஒளி நம்மைச் சுறுசுறுப்பாக்குவதுடன் மூளையின் கவனிக்கும் திறனை அதிகரிப்பதாக மான்செஸ்டர் பல்கலைக்கழகம் கண்டறிந்துள்ளது.

பிரியா: காலையில் உடற்பயிற்சி செய்வது ரொம்ப நல்லது. உடற்பயிற்சி தசை முதுமையைத் தள்ளிப்போடும் என்கின்றனர் சிங்கப்பூர் ஆய்வாளர்கள். உடற்பயிற்சி செய்வதனால் தசை மூப்பினைத் தூண்டும் மரபணு செல்லின் செயல்பாடு மந்தமடைகிறது. சேதமடைந்த புரதங்களை நீக்கி, திசுக்களைப்புதுப்பிக்கவும்உதவுவதால்,முதுமையிலும் தசைகள் வலிமையாக இருக்க உதவுகிறது.

கௌரி: விண்வெளிப் பயணம் பற்றி சொல்றேன்பா. 49 வயதான இந்திய வம்சாவளி டாக்டர் அனில் மேனன் தனது விண்வெளிப் பயணத்தை ஜூலை 14ஆம் தேதி தொடங்கினார். ரஷ்யா, மத்திய ஆசிய நாடான கஜகஸ்தானில் உள்ள பைகோனூர் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து, ரஷ்யாவின் சேரயுஸ் எம்.எஸ். 29 விண்கலம் மூலம் ஜூலை மாதம் 14ஆம் தேதி மூன்று பேர் புறப்பட்டனர். இதில் அமெரிக்காவின் நாசாவைச்சேர்ந்த இந்திய டாக்டர் அனில் மேனனுடன், ரஷ்யாவின் விண்வெளிவீரர் பியோத்தர் துப்ரோவ் மற்றும் விண்வெளி வீராங்கனை அன்னா கிகினா

பயணம் மேற்கொண்டு உள்ளனர். அனில் மேனனின் மனைவி அன்னா மேனன், கடந்தாண்டு நாசாவின் பயிற்சி திட்டத்தில் பங்கேற்றார். அதற்கு முன் 2024ல் தனியார் நிறுவனத்தின் சார்பில் விண்வெளிப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

சித்ரா: இதில் என்ன விசேஷம்னா, இந்த விண்கலம் குறுகிய கால அளவில் அதாவது 3 மணி நேரத்தில் சர்வதேசவிண்வெளிநிலையத்தை அடையும். இவர்கள் 8மாதங்கள் அங்குதங்கியிருந்துபல்வேறுதொழில்நுட்ப மற்றும் மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளனர். நீண்டகால விண்வெளிப்பயணம், மனித உடலின் ரத்த ஓட்டம் மற்றும் நரம்புகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதை தன் உடலையே ஒரு சோதனைப் பொருளாக கொண்டு ஆய்வு நடத்த உள்ளதாக கூறப்படுகிறது. மேலும் பூமியின் உதவியின்றி, விண்வெளி வீரர்களே தங்களுக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்ய உள்ளனர்.

தீபிகா: நானும் அது குறித்தே சொல்றேன். ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து, நாட்டின் முதல் தனியார் ராக்கெட்டான விக்ரம்–1 விண்ணில் பாய்ந்தது. தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தைச் சேர்ந்த 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' நிறுவனம், முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தால் இந்த ராக்கெட்டை உருவாக்கி உள்ளது பாராட்டுக்குரியதே. ஆனால் இஸ்ரோவிலிருந்து 25% விஞ்ஞானிகள் வெளியேறி உள்ளனர். கடந்த 2020ல் மத்திய அரசின் விண்வெளித்துறை விதிகளை மாற்றி தனியாரும் விண்வெளித் திட்டங்களில் பங்கேற்க வாய்ப்பளித்தது. இதையடுத்து சுமார் 400 நிறுவனங்கள் விண்வெளி ஆய்வில் இணைந்துள்ளன. தன்னிச்சையாக சாதிக்கத் துடிக்கும் இளம் விஞ்ஞானிகள் இஸ்ரோவிலிருந்து வெளியேறி, தனியார் நிறுவனங்களில் இணைந்துள்ளனர் என்று செய்தி கூறுகிறது.

மீரா: நல்லதுதானே! நமது இளைஞர்கள் ஏரோஸ்பேஸ் பிரிவில் சேர்ந்து பயின்றால், வேலை easyஆக கிடைக்குமல்லவா ?

மீனா: 2024க்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறந்த படமாக ஆர்டிகிள் 370 (இந்தி) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிறந்தநடிகர்விருது இருவருக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. பிரம்மயுகம் படத்திற்காக மம்முட்டியும், சந்து சாம்பியனில் நடித்த கார்த்திக் ஆர்யனும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், சிறந்த நடிகையாக ஆர்டிகிள் 370ல் நடித்த யாமிகவுதமும், சிறந்த இயக்குநராக தமிழ்ப்படமான அமரனை இயக்கிய ராஜ்குமார் பெரியசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பிரியா: சிறந்த தமிழ்ப்படம் ராயன்; சமூக அக்கறைக்கான படம். தனுஷ் நடித்த கேப்டன் மில்லர், சிறந்த நடிகருக்கான சிறப்பு பிரிவில் நடிகர் தனுஷும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வசுமதி: ஆமாம்பா! இசைஅமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், சிறந்த படத்தொகுப்பாளர் கலைவண்ணன் இருவரும் அமரன் படத்துக்காக விருதுகள் பெற்றுள்ளனர். சிறந்த ஒலிக்கலவை மெய்யழகன் படத்திற்கும், சண்டைப் பயிற்சியாளராக மஹாராஜா படத்தின் அனல்அரசுவிற்கும் விருதுகள் கிடைத்துள்ளது. ஆவணப் படத்துக்கான சிறந்த ஒலி வடிவமைப்பு ஹரிஹரசுதனுக்கு, ப்ளூ படத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அனைவரையும் நமது குழு மனமார பாராட்டுகிறது.

ஆண்டாள்: சரிப்பா! நாம சாப்பாட்டுக்குத் திரும்புவோம். மாம்பழம், வாழைப்பழம், பலா, சப்போட்டா நீரிழிவுள்ளவர்கள் எடுத்துக்க கூடாது என்று சொல்லுவாங்க. ஆனால் தினமும் மாம்பழம் உண்பது, நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும் என்று அமெரிக்காவிலுள்ள ஜார்ஜ் மேசன் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு காரணம் மாம்பழத்தில் உள்ள கரோட்டினாய்ட், அஸ்கார்பிக் அமிலம், பீனால் சேர்மம், கேலிக் அமிலம், நார்ச்சத்து ஆகியவை தானாம்.

மீரா: நான் பேரிக்காய் பத்தி சொல்றேன். இதன் தாயகம் மத்திய ஆசியா. 3000 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்க, ரோமானிய உணவுகளில் பயன்படுத்தியதாக வரலாற்றுச் செய்தி உள்ளது. பேரிக்காயில் வைட்டமின் C, K மற்றும் பொட்டாஷியம், நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளன. நடுத்தர அளவிலான 180 கிராம் எடையுள்ள பேரிக்காய் உண்பதால், 100 கலோரிகள் கிடைக்கும். இது செரிமானத்தை மேம்படுத்தி, மலச்சிக்கலைத் தடுக்கும். இதிலுள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் இதய மற்றும் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கும். பொட்டாஷியம் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும். இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும். நீரிழிவால் பாதிக்கப்பட்டோருக்கு உகந்த உணவு ஆகும். தோலுடன் சாப்பிட்டால் நல்லது.

சித்ரா: நான் நம்ம விளையாட்டுக்கு வரேன். இந்திய மகளிர் கிரிக்கெட் அணி லார்ட்ஸ் டெஸ்டில் கோப்பை வென்று, நமது இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளது. அணியின் பயிற்சியாளர் அமோல் மஜூம்தார், தேவையான நேரத்தில் ஆக்ரோஷம், சில நேரங்களில் நிதானம் என இரண்டும் கலந்த அணுகுமுறையே வெற்றிக்கு முக்கிய காரணம் என கூறியுள்ளார். யஸ்திகாவின் ரன் குவிப்பும் (113 ரன்), கிராந்தியின் பவுலிங்கும், வீராங்கனைகளின் ஃபீல்டிங்கும் சேர்ந்து வெற்றியை பரிசளித்துள்ளது.

தீபிகா: 25ஆம் தேதி ஆஷாட ஏகாதசி பண்டர்பூரில் விட்டல பாண்டுரங்கனுக்கு வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. அது போன்றே புட்டபர்த்தியில் சத்யசாயியின் பிரசாந்தி நிலையத்தில் மராட்டிய மாநில பக்தர்களால் மிகவும் சிறப்பாக இரு தினங்கள் கொண்டாடப்பட்டது. டிண்டி யாத்திரை என வர்க்காரியின் பல்லக்கு நிகழ்ச்சி, பஜன், நாட்டியத்துடன் கலந்த நாடகங்களென மிகவும் சிறப்பாக நடந்தேறியது. மகாராஷ்டிரா, கோவா இரண்டு மாநிலங்களும் சேர்ந்து இந்நிகழ்ச்சியை நடத்தின. சுமார் 200 குழந்தைகள் பங்கேற்ற நாடகம் 25ஆம் தேதி மாலை அரங்கேற்றினர். என்ன ஒரு ஒத்துழைப்பு; அவரவர் ஊரில் சொல்லிக் கொடுத்து, இங்கு இரு தினங்கள் ஒத்திகை பார்த்து குழந்தைகள் அதி அற்புதமாக அரங்கேற்றினர். மாணவர்களுக்கும், குருமார்களுக்கும் ஒரு ராயல் சல்யூட்!

கோமதி: தென்னிந்திய இசைக்குயில் S. ஜானகியின் மறைவு மனதிற்கு வருத்தத்தைத் தருகிறது. 1938ல் குண்டூரில் பிறந்த இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, ஒரியா உட்பட 17 இந்திய மொழிகளில் 40,000க்கும் அதிகமான பாடலைப் பாடியவர். 2026, ஜூலை 11ஆம் தேதி மைசூரில் தனது 88ஆம் வயதில் காலமானார். நான்கு தடவை தேசிய விருது பெற்றவர். 1957ல் பாட ஆரம்பித்தவர் 2018ல் பின்னணிப் பாடுவதை நிறுத்தினார். சிங்காரவேலனே தேவா, மச்சானைப் பாத்தீங்களா போன்ற பாடல்கள் மறக்க இயலாதவை. அவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தி இன்றைய நாளை நிறைவு செய்வோம்.

மசால் வடை, அசோகா அல்வா, காபியுடன் கூட்டம் நிறைவுற்றது. அடுத்த மாதம் அண்ணா சமாதியில் சந்திக்கலாமென முடிவெடுத்து தோழிகள் கலைந்தனர்.

நன்றி! வணக்கம்.

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

சென்னை சூளைமேடு கார்காத்தார் இல்ல வளாகத்தில் செயல்பட்டு வரும் கார்காத்தார் ஒப்புரவு அலுவலகத்தில் பணியிடம் நிரப்பப்பட உள்ளது. கணினியில் பயிற்சி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஓய்வு பெற்ற அலுவலர்களும் விருப்பமிருப்பின் விண்ணப்பிக்கலாம். வெளியூரிலிருந்து வரும் மகளிர்க்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட நமது சங்க முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

**- கைலை. சண்முகம்**
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

முகவரி: **கார்காத்தார் இல்லம்**, 64, சௌராஷ்டிரா நகர்,
10–வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி: 044–24724882 அலைபேசி: 82484 49204

## கல்லாதது உலகளவு

Dr. D. Kalyanakumar, Trichy-18

உலகில் நன்றாக படித்துப் பட்டம் வாங்க வேண்டும் என்று பலரும் ஆசை கொள்கின்றனர். அதற்காகத்தான் பட்டப் படிப்பினை நிறைவு செய்கின்றனர். சிலர் ஒரு பட்டத்துடன் மட்டும் நின்று விடாமல் பல பட்டங்களையும் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு எத்தனை பட்டங்கள் பெற்றாலும் அனைத்தையும் கற்று விட்டோம் என்று எவராலும் கூற முடியாது. ஏனெனில் ஒரு துறையில் புலமை வாய்ந்தவருக்கு இன்னொரு துறையில் புலமை இருக்க வாய்ப்பு குறைவு. இதனால்தான் கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு என ஔவையார் கூறியுள்ளார். எத்தனை உண்மையான / சத்தியமான வரிகள். இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் அறிந்தது கை மண்ணளவு மட்டும் தான். நாம் பல விஷயங்களை கற்று அறிந்து இருக்கலாம். அதற்காக நமக்கு எல்லாம் தெரியும் என்று தலைக்கனம் கொள்ளக்கூடாது. கல்வி கடல் போன்றது. நமக்குத் தெரியாத, நாம் அறிந்திராத பல விஷயங்கள் உள்ளன. மணலை அள்ளினால் நமது கைப்பிடியில் எவ்வளவு மணல் இருக்குமோ அந்த அளவுக்குத்தான் நாம் கற்றுள்ளோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பட்டறிவு சில நேரங்களில் கல்வியால் பெற்ற அறிவைவிட கை கொடுத்து உதவுவதாக இருக்கும்.

நம் வாழ்க்கையில் கற்றலுக்கான தேடல் எப்போதுமே இருந்து கொண்டேதான் இருக்கும். ஒவ்வொரு நொடியிலும் புதிதாக ஏதோ ஒன்றை கற்று தெரிந்து கொண்டேதான் இருக்கிறோம். அதற்கான அவசியமும் நம் வாழ்வில் இருந்து கொண்டேதான் இருக்கிறது. நம் வாழ்க்கையில் நாம் கற்றதை விட நமக்கு தெரியாத விஷயங்கள் நிறையவே இருக்கிறது. ஒரு சிங்கத்தை நேருக்கு நேர் எதிர்கொள்ளும்போது எப்படி தப்பிப்பது என்பதை எந்த பித்தகோரஸ் தியரத்தை வைத்தும் தீர்த்து விட முடியாது அந்த தருணத்தில் நாம் இதுவரை கற்ற அனைத்தும் ஒன்று மில்லாமல் போய்விடும். ஒரு மரைன் இஞ்சினிய ருக்கோ, கம்ப்யூட்டர் இஞ்சினியருக்கோ அவரவர் துறையிலே அவர்கள் கோலோச்சினாலும் அதை தவிர்த்து வேறு என்ன தெரியும் என்று வரும்போது கேள்விக்குறியாகி விடுகிறது.

எப்போதும் வாழ்க்கையில் Comfort Zone–லேயே இருந்து விட முடியாது. கஷ்டங்களை எதிர்கொண்டால் தான் தேவையான நேரத்தில் அதற்கு தகுந்தாற்போல நம்மை மாற்றிக்கொண்டு வாழ முடியும். கற்றல் என்பது புத்தகத்தில் இருப்பதை மட்டும் பயில்வதில்லை. அதை தாண்டி வாழ்வில் அவசர தேவைகளுக்காக நாம் புதிதாக என்ன கற்றுக்கொண்டோம் என்பதிலும் உள்ளது. மனிதனை அறிவுலகத்துக்கு இழுத்துச் செல்வது நல்ல புத்தகங்களே. அவை மனிதனைப் புனிதனாக்கிப் பண்படுத்துகின்றன. புத்தகங்களே மனிதனின் நல்ல நண்பர்கள். தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களை எல்லாம் ஒருவர் கணக்கெடுத்தால் அவையனைத்தையும் கற்றறிய ஒரு வாழ்நாள் போதாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியெனப் புலப்படும். இன்று பொதுவாக மக்கள் மத்தியிலும், குறிப்பாக இளைய தலைமுறையினராகிய மாணவர் மத்தியிலும் நூலகப் பயன்பாடு குறைவடைந்து வருகிறது. இது ஆரோக்கியமானதல்ல. மாணவர்களிடம் வாசிக்கும் வழக்கம் வளர்ச்சி பெறும் போது தான் அறிவு விசாலமாகிறது. அவர்தம் கல்வியும் செழுமை பெறுகிறது. ஒருவன் நூலகங்களைப் போல நிறையப் புத்தகங்களை வைத்துக்கொண்டிருப்பதால் எந்தப் பயனுமில்லை. அவற்றை வாசித்து உள்வாங்கிக் கொள்வதனாலேயே அவன் அறிவாளி ஆகிறான்.

நாம் பெரிய புத்திசாலின்னு காட்டிக்கிறதுக்காக அடுத்தவரை கேலி செய்யறதும், நக்கல் பண்றதும் எவ்வளவு பெரிய தப்பு? “உருவுகண்டு எள்ளாமை வேண்டும். உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து” என்கிறது திருக்குறள். அச்சாணி ஒரு சாண்தான். ஆனா அதுதான் பெரிய தேர் ஓடுறதுக்குத் துணை புரியது. ஒரு பெரிய இயந்திரத்துல இருக்கிற ஒரு சின்ன நட்டு கழண்டு போனாலும், இயந்திரம் மக்கர் பண்ணும். ஒரு சின்ன ‘சிப்’புக்குள் (CHIP) ஆயிரம் ஆயிரம் தகவல்களைப் பதிஞ்சு வைக்க முடியுற கணினி யுகத்துல இப்ப நாம் வாழ்ந்துட்டிருக்கோம்! ஆக, யாரையும் எதையும் உருவத்தைப் பார்த்துக் கேலி செய்யறதுக்கோ, இவனுக்கு இவ்வளவுதான் தெரியும்னு ஜட்ஜ் பண்ணுவதற்கோ நமக்கு யோக்கியதை உண்டா?

ஒவ்வொரு புதிய நாளிலும் ஒரு புதிய படிப்பினை இருக்கிறது. நாளும் ஏதோ ஒன்று கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். புத்தகப்படிப்பு மட்டும் படிப்பு இல்லங்க... நாளும் பார்க்கிற... கேட்கிற... செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலிலும் ஏதோ ஒரு புதிய செய்தி நாம் அறியாதது இருக்கும். அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பது புத்திசாலித்தனம். “கல்வி கரையில கற்பவர் நாள்சில” என்கிறது நாலடியார். ஆமாங்க... கல்வியில் கரை கண்டவர் எவருமிலர்.

## பிராணாயாமம்" அல்லது "வாசி யோகம்"

By திருமந்திரம் அரிமா பா. அழகேசன், நெய்வேலி

திருமூலர், திருமந்திரத்தில் "பிராணாயாமம்" அல்லது "வாசி யோகம்" எனப்படும் மூச்சுப் பயிற்சியை மிகவும் விரிவாக பாடியுள்ளார்.

நமது உடலில் இயல்பாக ஓடும் மூச்சை, ஒரு குறிப்பிட்ட கணக்கின்படி கட்டுப்படுத்தி இயக்கும்போது, அது உடலையும் மனதையும் தூய்மையாக்கி, ஆயுளை நீட்டிக்கும் என்கிறது திருமந்திரம்.

இதோ, திருமூலர் காட்டும் வாசி யோகத்தின் எளிய நல்வாழ்வு முறை:

திருமூலரின் பிரசித்தி பெற்ற வாசி யோகப் பாடல் (பாடல் 572)

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நினையவல் லார்க்குச்
சிறுப்புடை யாதிச் சீவனு மாகிக்
கலப்பற்ற காலம் கடந்துநின் றாரே.

விளக்கம்: வெளியில் சென்று, பின் உள்ளே வந்து அலைந்து கொண்டிருக்கும் இந்த மூச்சுக் காற்றை, நெறிப்படுத்தி (முறையாக) உள்ளே செலுத்த வல்லவர்களுக்கு. அதுவே ஜீவ ஆற்றலாக மாறும். அவர்கள் காலத்தைக் கடந்து (நீண்ட ஆயுளுடன்) வாழ்வார்கள்.

**மூச்சுப் பயிற்சியின் கால அளவு** (Mathematical Ratio)

திருமூலர் மூச்சை உள்ளே இழுப்பது, உள்ளே நிறுத்துவது, வெளியே விடுவது ஆகிய மூன்றிற்கும் ஒரு தெளிவான விகிதாசாரத்தைக் (Ratio) குறிப்பிடுகிறார். இதை 1:4:2 என்ற கணக்கில் செய்ய வேண்டும் என்பார்கள்.

பூரகம் (உள்ளே இழுத்தல்): 16 மாத்திரை அளவு (சுமார் 4 விநாடிகள்) இடது நாசி வழியாக மூச்சை மெதுவாக உள்ளே இழுக்க வேண்டும்.

கும்பகம் (உள்ளே நிறுத்துதல்): 64 மாத்திரை அளவு (சுமார் 16 விநாடிகள்) மூச்சை உள்ளே அடக்கி வைக்க வேண்டும்.

ரேசகம் (வெளியே விடுதல்): 32 மாத்திரை அளவு (சுமார் 8 விநாடிகள்) வலது நாசி வழியாக மூச்சை மிக மெதுவாக வெளியே விட வேண்டும்.

(குறிப்பு: ஆரம்பக் காலத்தில் 64 விநாடிகள் அல்லது 16 விநாடிகள் நிறுத்துவது கடினம் என்பதால், உங்களால் இயன்ற அளவு 1:2:2 அல்லது 1:1:2 என்ற எளிய விகிதத்தில் தொடங்கி, படிப்படியாக அதிகரிக்கலாம். உடலை வருத்தக் கூடாது).

**நாடி சுத்தி (இடைகலை, பிங்கலைச் சமநிலை) செய்யும் முறை**

இதை அமர்ந்த நிலையில், முதுகெலும்பை நேராக வைத்துக்கொண்டு செய்ய வேண்டும்.

இடது நாசி (சந்திர நாடி / இடைகலை): வலது நாசியை மோதிர விரலால் மூடிக்கொண்டு, இடது நாசி வழியாக மூச்சுக் காற்று உள்ளே செல்லும்படி மெதுவாக இழுக்க வேண்டும் (பூரகம்) இது உடலைக் குளிரூட்டும்.

உள்ளே நிறுத்துதல் (கும்பகம்); இரண்டு நாசிகளையும் மூடிக்கொண்டு, கவனத்தை உந்தி (தொப்புள்) அல்லது புருவ மத்தியில் வைத்து மூச்சை உள்ளே நிறுத்த வேண்டும்.

வலது நாசி (சூரிய நாடி / பிங்கலை): இப்போது இடது நாசியை மூடிக்கொண்டு, வலது நாசி வழியாக மூச்சை மெதுவாகவும் சீராகவும் வெளியேற்ற வேண்டும் (ரேசகம்) இது உடலுக்கு வெப்பத்தையும் ஆற்றலையும் தரும்.

மாற்றிச் செய்தல்: அடுத்து, எந்த நாசி (வலது) வழியாகக் காற்றை வெளியே விட்டீர்களோ, அதே வலது நாசி வழியாக மீண்டும் காற்றை உள்ளே இழுத்து, நிறுத்தி, இடது நாசி வழியாக வெளியே விட வேண்டும்.

இது ஒரு சுற்று (One Round) ஆகும்.

**இந்த வாசி யோகத்தினால் கிடைக்கும் நன்மைகள்:**

ஆயுள் கூடும்: மனிதன் ஒரு நிமிடத்திற்குச் சராசரியாக 15 முதல் 18 முறை சுவாசிக்கிறான் வாசி யோகத்தின் மூலம் சுவாசத்தின் வேகம் குறையும் போது, உடலின் தேய்மானம் குறைந்து ஆயுள் நீடிக்கும்.

மன அமைதி மற்றும் தெளிவு: மூச்சு அடங்கினால் மனம் அடங்கும் சொற்பொழிவுகள் ஆற்றுபவர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும் இது மிகச்சிறந்த மன ஒருமைப்பாட்டையும், குரல் வளத்தையும் தரும்.

அக ஒளியின் தரிசனம்: மூச்சுக்காற்று சுழுமுனை நாடி (நடு நாடி) வழியே மேலேறும் போது, உள்ளுக்குள் ஆன்மீகப் பேரொளி தோன்றும்.

**நினைவில் கொள்ள வேண்டியது:**

இப்பயிற்சியைக் காலை அல்லது மாலை வேளையில், வெறும் வயிற்றில், அமைதியான சூழலில் செய்வது நல்லது. அவசரப்படாமல், மூச்சின் ஓட்டத்தை ரசித்துச் செய்வதே திருமூலர் காட்டும் நெறியாகும்.

"தினம் ஒரு திருமந்திரம்"
வாட்ஸ் அப் இணைய 7904206008

---

## ஞான வாழ்க்கை

A. RAJARETHINAM

மனிதன் அமைதியாகவும், சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என்றால் சுயகட்டுப்பாடு, நேர்மை, நேரம் தவறாமை, சொல்வதைச் செய்தல், நல்ல நடத்தை போன்ற உயர்ந்த பழக்கங்கள் மிகவும் அவசியம். நம் நாட்டு வேதங்கள், மூவாயிரம் முதல் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டவை. கௌதம புத்தர் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கள் முன்பு ஞான வழியை வாழ்ந்து காட்டினார். கபீர்தாஸ், குருநானக், துளசிதாஸ் போன்றவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சிறந்த வாழ்க்கை முறைகள் பற்றி எழுதி இருக்கிறார்கள்.

லூயி பாஸ்டர், ஆல்பர்ட் ஐன்ஸ்டின், அரிஸ்டாடில், திருவள்ளுவர், திருமூலர், வள்ளலார் போன்ற தலைசிறந்த ஞானிகள் மனித வாழ்க்கை மேம்படுவதற்கான விஞ்ஞானத்தையும் அறிவுரைகளையும், வாழும் முறைகளையும், தத்துவங்களையும் கொடுத்து இருக்கிறார்கள்.

இத்தகைய ஞானம் பற்றி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், யாரும் போதனை செய்வது இல்லை. இன்றைய காலகட்டத்தில் உலகில் பல இடங்களில் நடக்கும் அட்டகாசங்கள், விதிமீறல்கள் இவற்றைக் காணும்போது ஞானம் எவ்வளவு தேவை என்பது தெரிகிறது. அதை எப்படி எங்கு எப்போது கற்றுக்கொள்வது ? ஞானம் சிலருக்கு சொந்த அனுபவங்களால் கிடைக்கிறது. சிலர் மகான்களின் உபன்யாசங்களைக் கேட்டு ஞானம் பெறுகிறார்கள். சிலர் பல புத்தகங்களைப் படித்து அறிந்து கொள்கிறார்கள். உங்களுடைய நல்ல பழக்க வழக்கங்கள், சிந்தனைகள் உங்களுடன் பழகும் மற்றவர்களுக்கும் நல்ல ஞான மார்க்கத்தைப் போதிக்கிறது.

உங்களுக்கு செல்வம் பெருகி, வசதிகள் பெருகும் போது ஞான சிந்தனைகள் பெருகுமானால் தானாக மன அமைதி உண்டாகும். மாறாக செல்வம் பெருகியபின் கர்வமும், செருக்கும் அதிகமானால் உங்களுக்கே உங்கள் வாழ்வில் அதிருப்தி அதிகமாகும். தேவையில்லாத சிக்கல்களில் விழுவீர்கள். மக்கள் உங்களை மதிக்க மாட்டார்கள். மேலை நாடுகளில் மக்கள் பின்பற்றும் நேரம் தவறாமை, பாதைகளில் சுத்தம், வாகனப் போக்குவரத்து சட்டங்களைப் பின்பற்றுதல், பேச்சில் நேர்மை போன்றவற்றை கடைப்பிடித்தால் நாம் மேலும் முன்னேறலாம்.

நம்நாட்டில்பண்டைகாலங்களில்குருகுலவாசம் என்றிருந்தது. குழந்தைகளை குருகுலங்களில் சேர்ப்பார்கள். அவர்கள் அங்கு பல வருடங்கள் தங்கி ஒரு குருவிடம் எல்லா பாடங்களையும் கற்பார்கள். அவர்களுக்கு நல்ல வாழ்க்கை முறைகளும், ஞான மார்க்கமும் சொல்லிக் கொடுக்கப்படும். இப்போது உள்ள கல்விமுறையில் அதற்கு வழியில்லை. ஆகையால் நாம்தான் நமது குழந்தைகளுக்கு ஞான வழிகளை கற்றுத்தர வேண்டும். இந்தப் பொறுப்பை பெற்றோர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆன்மிகத்தையும், தேசப்பற்றையும், பிறருக்கு உதவும் பழக்கத்தையும் போதிக்க வேண்டும். நம் குழந்தைகள் நல்லவர்களுடன் பழகுகிறார்களா என்று கவனிக்க வேண்டும். குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை அவர்களது முதுமைப் பருவத்தில் நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை சிறுவயதில் இருந்தே சொல்லிச் சொல்லி வளர்க்க வேண்டும்.

வீட்டில் உள்ள பெரியவர்கள் சிறுவர்களுக்கு நல்ல, அன்பு நிறைந்த, ஆன்மிகம் நிறைந்த நம்பிக்கை நிறைந்த சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகள் பெரியவர்களாக வளரும் போது சுயநலமின்றி சமுதாயத்துக்கு சேவை செய்யவேண்டும். நமது பூமியில் பல கோடிக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. இறைவனது படைப்பில் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதமான குணம் இருக்கிறது. அதில் மனிதன் மட்டும்தான் சிந்தித்து செயல்படக் கூடியவன். அவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தில் எல்லாவற்றையும் புரிந்துகொள்ளக் கூடியவனாக இருக்கும் மனிதன் எவ்வளவு பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும் ?

ஞான நூல்களைப் படித்தல், பிறரையும் படிக்கச் செய்தல், அதன் பொருளைப் பிறரையும் கேட்க வைத்தல் மிகவும் அவசியம். இங்ஙனம் கேட்டது, படித்தது ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்தலே எழில் ஞான பூசை. இதைத் திருமந்திரம் உணர வைக்கிறது. திருமூலர் எழுதிய திருமந்திரம் அனுபவ ஞானத்

திருநூல். மோனத்தில் இருந்து எழுந்து வந்த தவ மொழிகளே திருமந்திரப் பாடல்கள். தான் பெற்ற இறை அனுபவங்களைப் பிறரும் பெற வேண்டும் என்ற கருணையின் வெளிப்பாடுதான் திருமந்திரம். இது தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும் விளங்குகிறது. தெய்வத்தன்மை வாய்ந்த மறைபொருள் என்ற பொருளில் திருமந்திரம் விளங்குகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை நெறிகளையும், ஞான வாழ்க்கைக்கான நெறிமுறைகளையும் இந்த நூல் கூறுகிறது. இந்நூலின் போக்கும் நடையும் ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. இந்த நூலில் உள்ள ஒன்பது தந்திரங்கள் 1) நல்லொழுக்க நிலை 2) முழுமுதல் நிலை 3) அருள்நிலை 4) ஒலி முழுக்க நிலை 5) திருநெறி நிலை 6) குருவருள் நிலை 7) தவச்சிறப்பு 8) திருவருள் நிலை 9) சிவநிலை என்ற ஒன்பது நிலைகளைத் தெரிவிக்கும். சைவத்திரு நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பயிற்சி முறைகளும் விளக்கப்படுகின்றன.

கண்களை மூடிக்கொண்டு நீங்கள் அனுபவிக்கும் காற்று, தண்ணீர், சூரியஒளி, காய்கறிகள், பழங்கள், உறவுகள், விஞ்ஞானம் போன்ற எல்லாவற்றையும் பற்றி எண்ணிப் பாருங்கள். ஞான வாழ்க்கையை உணர்வீர்கள். ஞானம் இல்லாத செழிப்பு அர்த்தமற்றது என்பதை மக்கள் உணர்ந்தால் நாடு சிறக்கும். நம் சமுதாயம் முன்னேறும்.

✤ ✦ ✤

## தமிழ் இலக்கியம்

தமிழ் இலக்கியம் பரந்து விரிந்த ஒன்று. அது ஒரு பெருங்கடல். அதில் மூழ்கி முத்தெடுப்பது என்பது எல்லோராலும் இயலாதது. ஆனால் ஓரளவுக்கு வாசகர்களுக்கு தெரிவிக்கும் ஆசையில் இலக்கியத் தொடரை கார்காத்தார் ஒப்புரவில் வெளியிட முயற்சிக்கிறோம்.

எட்டுத்தொகை நூல்கள்: 1) நற்றிணை 2) குறுந் தொகை 3) ஐங்குறுநூறு 4) அகநானூறு 5) புறநானூறு 6) பதிற்றுப்பத்து 7) பரிபாடல் 8) கலித்தொகை.

பத்துப்பாட்டு நூல்கள்: 1) திருமுருகாற்றுப்படை 2) சிறுபாணாற்றுப்படை 3) பெரும்பாணாற்றுப்படை 4) பொருநராற்றுப்படை 5) முல்லைப்பாட்டு 6) மதுரைக் காஞ்சி 7) நெடுநல்வாடை 8) குறிஞ்சிப்பாட்டு 9) பட்டினப்பாலை 10) மலைபடுகடாம்.

பதினென்கீழ்க்கணக்கு: 1) திருக்குறள் 2) நாலடியார் 3) நான்மணிக்கடிகை 4) இன்னா நாற்பது 5) இனியவை நாற்பது 6) கார் நாற்பது 7) களவழி நாற்பது 8) ஐந்திணை ஐம்பது 9) திணைமொழி ஐம்பது 10) ஐந்திணை எழுபது 11) திணைமாலை நூற்றைம்பது 12) திரிகடுகம் 13) ஆசாரக்கோவை 14) பழமொழி 15) சிறுபஞ்சமூலம் 16) முதுமொழிக்காஞ்சி 17) ஏலாதி 18) இன்னிலை.

ஐம்பெருங்காப்பியங்கள்: 1) சிலப்பதிகாரம் 2) மணிமேகலை 3) சீவகசிந்தாமணி 4) வளையாபதி 5) குண்டலகேசி.

இலக்கண நூல்கள்: அகத்தியம், தொல் காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல், பன்னிரு பாட்டியல் மற்றும் இறையனார் களவியல் உரை.

வழிநூல்: கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம்.

சிற்றிலக்கியங்கள்: முத்தொள்ளாயிரம், முக்கூடற்பள்ளு, நந்திக்கலம்பகம், கலிங்கத்துப்பரணி, மூவருலா போன்ற எண்ணற்ற சிற்றிலக்கியங்கள்.

பக்தி இலக்கியங்கள்: 1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருமந்திரம் 4) திருவிசைப்பா 5) பெரியபுராணம் 6) நாலாயிர திவ்ய பிரபந்தம் 7) திருப்புகழ் 8) கந்தர் கலிவெண்பா 9) கந்தபுராணம் 10) திருவிளையாடல் புராணம் 11) கந்தரனுபூதி 12) கந்தர் அந்தாதி போன்ற பல நூல்கள்.

தமிழின் செம்மொழிக்கான 11 தகுதிகள்: 1) தொன்மை 2) தனித்தன்மை 3) பொதுமைப்பண்புகள் 4) நடுவுநிலைமை 5) தாய்மைத்தன்மை 6) கலை பண்பாட்டுத் தன்மை 7) தனித்தியங்கும் பண்பு 8) இலக்கண வளம் 9) உயர்சிந்தனை 10) இலக்கிய வளம் 11) மொழிக்கோட்பாடு.

ஆசிரியர் குழு

### நற்றினை

சங்க இலக்கியங்கள் என்று கூறப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் 18 நூல்களும் சங்க இலக்கியங்கள் ஆகும். கபாடபுரத்திலிருந்து தப்பித்து வந்த பாண்டிய மன்னன் முடத்திருமாறன் மதுரையில் கடைச்சங்கத்தை நிறுவினார். அப்போது எழுதப்பட்ட நூல்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்று வகுக்கப்பட்டன.

எட்டுத்தொகை நூல்கள் அகம், புறம், அகப்புறம் என பிரிக்கப்பட்டன. அகத்தைக் கூறும் நூல்களாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை,

அகநானூறு. புறத்தைக் கூறும் நூல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகும். அகப்புறப் பாடலாக அமைந்தது பரிபாடல் ஆகும். இனி இந்நூல்களின் அறிமுகம் காண்போம்.

1) நற்றிணை: எட்டுத்தொகையுள் ஒன்றான நற்றிணை என்பது ஒன்பது முதல் பன்னிரண்டு அடி வரையிலுள்ள நானூறு அகவற்பாக்களின் தொகுதியாகும். குறுந்தொகை, நெடுந்தொகை இரண்டிற்கும் இடைப்பட்டு அளவான அடிகளை உடையதால், இது நற்றிணை என்றும், 400 பாடல்களைக் கொண்டதால் நற்றிணை நானூறு என்றும் வழங்கப்படுகிறது. திணை அடிப்படையில் ஆராய்ந்தால்,

குறிஞ்சித்திணைப் பாடல்கள் – 132, பாலைத்திணைப் பாடல்கள் – 104, நெய்தல் திணைப் பாடல்கள் – 102, மருத திணைப் பாடல்கள் – 32, முல்லைத்திணைப் பாடல்கள் – 30. நற்றிணைப் பாடல்கள் மூலம் அக்கால மக்களின் பழக்கவழக்கங்களை அறியலாம். தலைவன் பிரிவால் வாடும் தலைவி, தன் தலைவனின் வரவைச் சுவரில் கோடிட்டுக் கணக்கிடும் பழக்கமும், காதலன் வரவைப் பல்லி சப்தமிடும் ஓசையை வைத்து சகுனம் பார்க்கும் வழக்கமும், மேலும் பிற்காலத்தில் சிறந்து விளங்கிய தூது போன்ற சிற்றிலக்கித்திற்கு வழிகாட்டியாக குருவி, கிளி, நாரை போன்றவைகளைத் தூது விடும் பாங்கினையும் காணலாம்.

மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, கொடைத்திறம், இவற்றை பின்பற்றி மக்கள் வாழ்ந்த அறவாழ்வினை அறியவும், நற்றிணைப் பாடல்கள் துணைபுரிகின்றன.

'நீரின்றி அமையாது உலகு' என்பது நற்றிணை பாடல் வரியாகும்.

நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர்
என்றும் என் தோள் பிரிவு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீம் தேன் போலப்
புரைய மன்ற, புரையோர் கேண்மை,
நீர் இன்றி அமையா உலகு போலத்
தம் இன்று அமையா நம் நயந்து அருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ ? செய்பு அறியலரே.

இப்பாடல், பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி கூறுவது போல புலவர் கபிலர் பாடியுள்ளார்.

பாடலின் பொருள்: அவர் சொல்லிய சொல்லில் மாறுபடாதவர்; பெரிதும் இனிமையாக பழகும் தன்மையுடையவர்; என்றும் எனை விட்டு பிரிந்து அறியாதவர்; வண்டானது தாமரைப் பூவின் குளிர்ச்சியான மகரந்தத்தை எடுத்து, உயர்ந்து நிற்கும் சந்தனமரத்தின் உச்சியில் சேர்த்து வைத்த இனிய தேனைப் போல, உறுதியாக (தாமரைத்தாது = தலைவனின் உள்ளம்; சந்தனமரம் = தலைவியின் உள்ளம்; தேன் = இருவரின் அன்பு) உயர்வினை உடையது உயர்ந்தோராகிய தலைவனின் நட்பு, நீரின்றி இவ்வுலகமானது இருக்க இயலாது; அதுபோல அவரின்றி நாம் சிறப்பதில்லை. கருணையோடு நடப்பவர்; பிரிவதனால் மணம் வீசும் நெற்றியில் ஏற்படும் பசலை படர்வதற்கு அஞ்சும் அவர் பிரிதல் எனும் செயலைச் செய்ய நினைப்பாரோ ? அவ்வாறு செய்வதற்குக் கூட அறியாதவர் அவர். நற்றிணையில் மேலும் பல சிறப்பு குறிப்புகளும் உண்டு. எடுத்துக்காட்டாக எரிநட்சத்திரம், பல்லி சப்தத்தின் பலன், விடிவெள்ளி போன்றவையாகும். எனவே எட்டுத்தொகை நூல்களில் முதலாவதாக வைத்து நற்றிணை போற்றப்படுகிறது.

திருமதி. செல்வி மணிவாசகன்

(தொடரும்)

❖ ✦ ❖

## மரியாதை - இருவழிப்பாதை

ஞான. அம்புலி, சிதம்பரம்

'Respect Brings Respect' என்பது ஒரு அழகான ஆங்கிலப் பொன்மொழியாகும். சுவர் பந்து விளையாட்டில், நாம் அடிக்கும் பந்தின் வேகத்தைவிட அதிக வேகத்தில் அப்பந்து திரும்பி வருதல்போன்று நாம் செய்யும் மரியாதைக்கு பல மடங்கு அதிகமாக நாம் பெற்றிடுதல் கண்கூடான காட்சியாகும். உண்மையான மரியாதையானது பணத்தாலும், பட்டங்களாலும் கிடைத்திடாது. போலியான மரியாதை நெடுநாள் நிலைத்திருக்காது. மரியாதையை மதிப்பவனே மாபெரும் அறிவாளியாய் பரிணமிப்பான் என்பார்கள். இக்குணம் கேட்டுப் பெறுவதல்ல! பிறர் சொல்லியும் மரியாதை வந்துவிடாது.

உதாரணத்திற்கு தனது முன்னாள் ஆசிரியரைக் கண்டவுடன் தன்னையறியாமைலேயே வணக்கம் சொல்லி நலம் விசாரிப்பது தானாகயெழும் சிறந்த மரியாதை செயலாகும். வாழ்க்கையின் எந்த நிலையில் இருந்தாலும் நாம் அறிந்தோரை மரியாதை செய்வது ஒரு உயர்ந்த பண்பாகும். அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை தம்முன் நிகர்இல் குரவர்

இவ் ஐவர் மரியாதை பெறுதலின் முதன்மையானவர் என ''ஆசாரக்கோவை'' தெரிவிக்கிறது.

மரியாதை செய்வதற்கான காரணங்கள் பல பல; மரியாதை செய்வது தனிக் கலையாகும். மரியாதையில் ஒன்றான சுயமரியாதை (Self Respect) என்பது சொந்த வாழ்க்கையில் நிலைத்து நிற்பதற்கும் முன்னேறுவதற்கும் உதவும் ஒரு ஆயுதமாகும். சுயமரியாதை இல்லாத மனிதர்கள் மதிக்கப்பட மாட்டார்கள். சுயமரியாதை உள்ளவர்கள் சுலபமாக கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக மாட்டார்கள். சுய மரியாதையானது ஒருவரது பேச்சில் மட்டுமல்லாமல் அவர் உடை அணிவது, தலைசீவுவது போன்ற காரணங்களாலும் தெரிந்துகொள்ளலாம். மற்றவர்களுடைய உழைப்பாலும் உணர்வுகளாலும் பெற்றிட முடியாத பெறும் செல்வம் சுயமரியாதை ஆகும். சுயமரியாதை மனித பண்புகளில் உயர்ந்தது என சொல்லப்படுவதால் இக்குணம் உள்ளவர்களை மற்றவர்கள் தானாக முன்வந்து மரியாதை செய்வார்கள். மரியாதை செய்தல் தனிமனித உரிமை. மற்றவர் நம் செயலை பிரதிபலிக்காமல் இருந்தாலும் நமது நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டாம்.

நாம் பணி செய்யும் இடங்களில் அனைவரும் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுப்பார்களானால் அனைவரும் தங்கள் பணியை முழு ஈடுபாட்டோடு சிறப்பாக செய்வார்கள். மரியாதை நிலவும் இடங்களில் அரசியல், தனிநபர் விளம்பரம் போன்றவைகள் பேசப்படாததால் அதிகப்படியான உற்பத்தி கிடைத்திடும். மரியாதை நிலவும் இடங்களில் போட்டி, பொறாமை போன்ற பண்புகள் தலையெடுக்காததால் சிறப்பாக உழைக்கின்ற சூழ்நிலை உருவாகி உற்பத்தி பெருகிடும். மரியாதை நிறைந்த சூழ்நிலைகளில் தனிமனித திறமைகள் மேம்பட உதவும் பணியிடங் களில் ஒப்பிடுதலை தவிர்த்து விட்டோமானால் உற்சாகமாக உழைத்திட மரியாதை துணை போகும்.

மரியாதைஎன்னவென்பதைபுரியும்படிசொல்லச் சொன்னால் சிரித்த முகத்தோடு 'வாங்க' என்றோ 'நலம்தானா ' எனக் கூப்பிடுவதாகும், சந்திப்பவரின் நெருக்கத்தை, சூழ்நிலையை பொறுத்து மாலை அணிவது, பரிசுப்பொருள் அளிப்பது, கைகொடுப்பது போன்ற செயல்களை செய்யலாம். நாம் செய்யும் பணி நமக்கு அதிகாரபலத்தை கொடுத்திருந்தாலும் நம்முடைய நடத்தை ஒன்றே மரியாதையை பெற்றுத் தரும். நட்பும் நலம் சார்ந்த செயலும் மரியாதையை பெற்றுதருவதோடுஇப்பண்புபெருகிட உதவும்.நேரமும் வாய்ப்பும் கிடைக்கும் போதெல்லாம் மற்றவர்களை மதிக்கின்ற பண்பினால் நமக்கு பெருமை கிடைக்கும். கிடைக்கும் மரியாதையை காப்பாற்றிட வாய்ப்பு பெறும்போதெல்லாம் உதவிசெய்தல் நலமாகும். தூரத்து பச்சை பயன் தராது, ஆதலின் நம்மை சுற்றி கிடைக்கும் மரியாதையே போற்றுவதற்கு உதவும். ஔவையார் சொன்னது ''மதியாதார் முற்றம் மதித்து ஒருகால் சென்று மிதியாமை கோடி பெறும்'' இக்குறள் வழி நடப்போம்.

நிலையான மரியாதையை தக்க வைத்துக்கொள்பவர்கள் மற்றவர்கள் பேசுவதை காதுகொடுத்து கேட்க வேண்டும், நமது வேலை பளு காரணமாகவும் சுய சோகத்தின் காரணமாகவும் மற்றவர்கள் கருத்தினை கேட்டுத்தெரிந்து கொள்ளாமல் இருப்பதால் பலன் இல்லை. குறைந்தபட்சம் மரியாதையோடு மற்றவர்களது துயரத்தில் பங்குகொள்வது நலம் தரும் பண்பாகும். அதிகப்படியான பணிவுடன் இருந்தாலும் அதிகமாய் அடிக்கடி நம்மை பற்றியே பேசிக்கொண்டு இருந்தாலும் செய்த தவற்றை முழுமையாய் மறைத்தாலும் நல்ல பழக்கம் இல்லையென சொல்வார்கள். நம்மைவிட வயதில் குறைந்துள்ளவர்களையும், நமக்கு கீழ்ப் பணி செய்பவர்களையும் மரியாதையோடு நடத்துதல் உயர்ந்த பண்பெனச் சொல்வார்கள்.

கிரேக்க நாட்டில் பிறந்த தத்துவஞானிகளான சாக்ரட்டீஸ், பிளாட்டோ, மற்றும் அரிஸ்டாட்டில் ஆகியோர் மரியாதையானது மகிழ்ச்சி, சமாதானம் போன்றவற்றை கொடுக்குமென சொல்லியுள்ளார்கள். இதற்கு நேர்மாறாக கொடூரமாக நடப்பவர்களால் கலவரம், எதிர்மறை செயலெல்லாம் உருவாகிவிடும். ஜாதி மத இன மொழி ஆகியவற்றால் ஏற்படும் மனக் கசப்புக்கள், கருத்து முரண்பாடுகள் வராமல் தடுக்க கேடயமாய் மரியாதையை எடுத்துக்கொள்ளலாம். அடிப்படை மரியாதை பெற்றிடாத காரணத்தால் மாபெரும் போர்கள் நடந்துள்ளதை சரித்திரத்தின் மூலம் நாமறியலாம்.

இறைவன் படைத்த உயிரினங்களில் மரியாதை என்கின்ற பண்பு மானிட வர்க்கத்திடம் மட்டும்தான் உள்ளது. இந்த பண்பானது குடும்பத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். நமது மூதாதையர்கள் குடும்பத்திற்குள் உள்ள உறுப்பினர்களின் மரியாதை செயல்கள் எப்படியென்று வகுத்து சென்று உள்ளார்கள். அதேபோல் சமுதாயத்தில் மரியாதை எப்படி இருக்க வேண்டுமென்றும் தெளிவுப்படுத்தியுள்ளனர். இந்த நல்லோர்கள் விட்டுச் சென்ற நற்பண்புகளை மனித சமுதாயம் மறந்த காரணத்தால் குடும்பத்திற்குள்ளும்

சமுதாயத்திற்குள்ளும் கலவர நிலவரங்கள் தலைதூக்கி உள்ளன. இந்த தீய பண்புகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். மரியாதையை கடைப்பிடிக்காத மனிதர்கள் வாழ்க்கையில் அனைத்து சுகங்களையும் இழந்து நிற்பார்கள். மரியாதையின் மகிமை தெரியாதவர்கள் தனி மரமாகவே தங்களது முழு வாழ்க்கையை கழிக்க வேண்டியிருக்கும். அன்பு, மரியாதை, கவனம் என்று எதையும் எவரிடமும் திரும்பத்திரும்ப போய் யாசிக்காதீர்கள். மற்றவர்களின் பாசிட்டிவ் விஷயங்களை மட்டும் பாருங்கள். வெளிப்படுத்தும் உறவுகள் வாழ்நாள் முழுவதும் நிலைத்திட முயலுங்கள். மரியாதை தந்திடும் பலன்களில் அடுத்தவர்களை ஊக்கப்படுத்துவது ஒன்றாகும். உயர்ந்திடும் வாய்ப்புகள் பெற்றிட, தனித்துவம் மேம்பட, வந்தவைகள் நிலைத்திட, மரியாதை தந்து பெற்றிடும் வாழ்க்கையை திட்டமிடுவோம். செயற்கரிய செயல் செய்தோரையும், சாதனை புரிந்தோரையும், தனக்கென வாழா வகுப்பினரையும் அனைத்துலகமும் மரியாதை செய்யும்.

❖ ✦ ❖

## ஆன்மிக விஞ்ஞானம்

சு. போஸ் என்ற பழனிவேலாயுதம், NTC

நம் பாரத தேசம் சுதந்திரம் அடைவதற்கு முன்பு பேரரசர்கள், பிரிட்டிஷ் ஆங்கிலேயர்கள், முகமதியர்கள் ஆதிக்கத்தில் அடிமையாக இருந்தது. நம் நாட்டு இயற்கை கனிம வளங்களை எடுத்துச் சென்றார்கள். பின்பு நமது முன்னோர்கள் கப்பம் கட்டமுடியாது என்று போராடி உயிர் நீத்தார்கள். சுதந்திரம் கிடைப்பதற்காக பற்பல அறப்போராட்டங்கள், பல இன்னல்களை அனுபவித்தார்கள். 1947ல் நம் நாடு சுதந்திரம் அடைந்தது. பலரும் உயிர் தியாகம் செய்தது எல்லோரும் அறிந்ததே.

ஆன்மிகம் என்றால் என்ன? விஞ்ஞானம் அறிவியல்மூலம் அதாவது ஆன்மிகமும் விஞ்ஞானமும் சேர்ந்து அறிவியல் அடிப்படையில் நம் நாடு சுதந்திரத் திற்கு பிற்பகுதி ஐம்பது ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியும், கலாச்சார மாற்றங்களும் தொன்றுதொட்டு நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற கம்பராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, பைபிள், குரான், சமண கோட்பாடுகள் மூலம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. விஞ்ஞான அடிப்படையில் தொலைக்காட்சி, வானொலி, விவசாயத்தில் புரட்சி, தொழிலில் தரமான உற்பத்தி அதிகமாக இருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம் நம் முன்னோர்கள் நடந்து வழிகாட்டியதை மறுக்க முடியாது. சமயங்களில் ஜாதி வேறுபாடுகள் இருந்தபோதிலும் வேற்றுமையில் ஒற்றுமை என்ற மந்திரத்தை கடைபிடிக்கிறோம்.

இந்துக்கள் கோவில்கள் செல்வது, ஆலய வழிபாடு, கிறிஸ்துவர்கள் சர்ச் வழிபாடு முகமதியர்கள் மசூதி செல்வது, மதசார்பற்று அவரவர்கள் இறைவழிபாடு செய்கிறார்கள். ஆன்மிக சொற்பொழிவுகள், சத்சங்கங்கள் செல்வது, அறிவியல் மூலம் வேதங்கள் உபநிஷத்துகள், திருக்குறள், கவிஞர்கள் படைப்பு, இதிகாசங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் அருளிய ஆன்மிக நூல்களை பின்பற்றுவது, இலக்கியங்கள் மூலம் ஆன்மிக அறிவியலை செயல்பாடுகளை நடத்துவது.

கோவிட் 19ன் பயங்கர பாதிப்பிலிருந்து நமது விஞ்ஞானிகள் முயற்சியில் வெற்றி பெற்று உயிரிழப்பினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது மட்டுமின்றி அயல்நாடுகளுக்கு மருந்தை உடனடியாக ஏற்றுமதி செய்து உயிரிழப்பை குறைத்து நம் நாடு நல்ல பெயர் எடுத்தது ஆன்மிக விஞ்ஞானச் செயல். இறைவன் ஆறு அறிவு படைத்த மானிட பிறவிகளுக்கு விஞ்ஞான அறிவை கணினி மூலம் அருள் செய்தது இது இயற்கையாக இறைவன் கொடுத்தது. நம்முடைய விஞ்ஞானிகள் செயற்கை யாக இன்று வழிமுறைப்படுத்தி பயன்பாட்டிற்கு கொண்டுவருகிறார்கள்.

விஞ்ஞானம் வளர்ந்த அளவுக்கு நம்முடைய கலாசாரங்களில் பின்னடைவு தொடர்ந்து வருகிறது. மேலைநாட்டு நாகரிகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆக்கப்பூர்வ செயல்பாட்டிலிருந்து விலகி அழிவுப்பாதைக்கு சென்று கொண்டிருக்கிறோம்.

இளைஞர்களை நல்வழிப்படுத்த பெற்றோர்கள் முயற்சி செய்தால் நல்லது. விஞ்ஞானத்தினால் முன்னேற்றம் ஏற்பட்டது நல்லது. ஆனால் கண்டுபிடிப்புகள் அழிவிற்காக பயன்படுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. இது மனித அழிவிற்கும் பொருளாதாரப் பின்னடைவிற்கும் வித்தாக உள்ளது. அலைபேசி இல்லாத எவரையும் இன்று பார்க்க முடியாது. ஆன்மிக அறிவியல் விஞ்ஞான மூலம் இன்னும் கண்டுபிடிக்க வேண்டியதை நாம் கருத்தில் கொள்வோம். செல்போனை அதிகம் உபயோகித்தால் கண் எரிச்சல், மனநலம் பாதிப்பு, உடல்நலக்குறைவு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். ஆரோக்ய வாழ்விற்கு நல்லதையே நாடுவோமாக!

❖ ✦ ❖

# விட்டலனின் அடியார்கள் - சாந்த சக்குபாய்

திருமதி. லலிதா வேலாயுதம்

திருத்தலமான பண்டரிபுரத்தின் அருகில் உள்ள சிஞ்சிருணிபுரம் எனும் கிராமத்தில், செல்வந்தரான கங்காதராவ் மற்றும் அவரது மனைவி கமலாபாயும் வாழ்ந்து வந்தனர். பக்தியில் சிறந்த அத்தம்பதியருக்கு, பண்டரி நாதனின் அருளால் அழகிய பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சக்குபாய் எனும் நாமத்தைப் பெற்றோர் சூட்டினர். மழலைப் பேசும் பருவத்திலேயே பகவானின் பஜனை, கீர்த்தனங்களையும், பக்திப்பாடல்களையும் ஸ்ரீ சக்குபாய் பாடலானாள். ஒருநாள் தோழிகளுடன் மணல்வீடு கட்டி விளையாடிக்கொண்டிருந்தாள். அவ்வமயம் பஜனைப் பாட்டுக்களைப் பாடியபடியே அவ்வீதி வழியாக வந்த முதியவர் ஒருவரின் கால்பட்டு அவளின் மணல் வீடு அழிந்து விட்டது. அம்முதியவர் வேறு யாருமல்ல; அவளை ஆட்கொள்ள விரும்பிய பண்டரிநாதனே முதியவராக வந்தார்.

மணல் வீட்டை இடித்த பின்னும், கண்டும் காணாமல் முன்னேறினார். அதைக் கண்டு கோபமுற்ற சக்குபாய், ''தாத்தா, நில்லுங்கள்! நான் எவ்வளவு ஆசையா இந்த மணல் வீட்டைக் கட்டினேன் தெரியுமா? ஒரு நிமிடத்தில் நீங்கள் நாசமாக்கி விட்டீர்களே! இது நியாயமா'' என்று கேட்க, அம்முதியவர், ''பகவான் நாமத்தில் லயித்து இருந்தபடியால், கவனிக்கவில்லை; தவறு நடந்து விட்டது'' என்று கூறியதுடன் மன்னிப்பும் கேட்டார். சிறுமியோ என் மணல் வீட்டுக்குப் பதிலாக உங்கள் கையிலிருக்கும் தம்புராவைக் கொடுத்து, அதை எப்படி மீட்டுவது என்றும் கற்றுக்கொடுக்குமாறு கூறினாள். இறைவனும் குழந்தைக்குத் தம்புரா மீட்ட கற்றுக்கொடுத்ததுடன் அதை மீட்டியவண்ணம் பக்திப் பாடல்களைப் பாடுவாயாக! என அருள்புரிந்தார். மேலும் அஷ்டாக்ஷர மந்திரத்தை அவள் காதில் உபதேசித்து, எந்நேரமும் மஹாமந்திரத்தை ஜபம் செய்துவந்தால் பகவானைத் தரிசிக்கும் பாக்கியம் பெறுவாய்'' என திருவாய் மலர்ந்தருளினார். மேலும் கஜேந்திர மோட்சம் கதையையும் கூறி, 'ஓம் நமோ நாராயணாய' மகிமையையும் விளக்கினார். சக்குபாய்க்கு அப்பெரியவரிடம் அன்பு மீதூற, அவரிடம் நீங்கள் எங்கு போகிறீர்கள்? மீண்டும் எப்போது வருவீர்கள்? என வினவ, அவர், ''நான் பண்டரிபுரம் போகிறேன். ஐந்து தினங்களுக்கு பிறகு மீண்டும் வருவேன்'' என்று கூறி விடைபெற்றார்.

தனது குருதேவர் வரவு நோக்கி சக்குபாய் காத்திருந்தாள். நாட்கள் மாதங்களாகின; மாதங்கள் ஆண்டுகளாகின. அவர் வரவில்லை. சக்குபாய்க்கு திருமணவயதுவந்தது. அவளோ, தனக்குத்திருமணமே வேண்டாமென பகவானின் தியானத்திலேயே மூழ்கி, ஒரு பற்றற்ற நிலையில் இருந்தாள். அவ்வமயம் சிந்து தேசத்தில் இருந்து மித்ருராவ் என்ற வாலிபன் வேலை நிமித்தமாக அவ்வூருக்கு வந்தான். சக்குபாயை மணக்க விரும்பி, கங்காதர்ராவைச் சந்தித்து தனது குலம், கோத்திரம் கூறி பெண் கேட்க, அவரும் சம்மதித்து இருவருக்கும் திருமணம் முடித்தார். புக்ககம் வந்த அவளுக்கோ குருதேவர் நினைவாகவே இருந்தது. அவள் பித்து பிடித்தவள் போலவே, யாருடனும் பேசாமலும் பழகாமலும் இருந்தாள். புக்ககத்தினர் அவளை வெறுத்து ஒரு வேலைக்காரி போல நடத்தினர். அவள் எதைக் குறித்தும் கவலை கொள்ளாமல் பகவத் தியானத்திலேயே லயித்தாள்.

அதைக் கண்ட கணவரும், அவரது குடும்பத்தினரும், அவளுக்கு பேய் பிடித்து விட்டது என்று ஒரு அறையில் வைத்து பூட்டி விட்டனர். அவளுக்கு அது மிருந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அநுதினமும் பகவானைத் தியானித்து, ஒரு பேரொளியில் அவள் லயித்திருந்தாள். ஒரு நாள் ராமநாமத்தின் சுந்தர கீதம் காற்றினிலே மிதந்து வந்தது. சிறு வயதில் அவள் கண்ட முதியவர், ஜன்னல் வழியே 'குழந்தாய்' என்று விளித்தார். அறைக்குள்ளேயே அவள் பலமுறை கீழே விழுந்து நமஸ்கரித்தாள். அவர் அவளை ஆசிர்வதித்து உன் குறை தீர்க்கவே வந்துள்ளேன் என்று கூறியபடி வாசலுக்கு வந்து பிச்சை கேட்க, இல்லத்தில் உள்ள அனைவரும் அவரை விரட்ட, உங்களுக்கென்ன கவலை? நான் தீர்க்கிறேன் என்கிறார். மித்ருராவ் தன் மனைவியைக் குறித்து அவரிடம் புலம்ப, என்னுடைய மந்திர சக்தியால் பல பேய்களை விரட்டியுள்ளேன். உமது மனைவியிடம் அழைத்துச் செல்லும்; பரிகாரம் கூறுகிறேன் என்று கூறவும், அவளின் அறையில் முதியவரை அனுமதிக்கின்றனர். அவரைக் கண்ட சக்குபாய், பாண்டுரங்கா! பாண்டரிநாதா என பிரார்த்திக்க, அவர் மித்ருராவிடம் சக்குபாயை குளக்கரைக்கு அழைத்து வரச் சொல்லி செல்கிறார். சக்குபாயும், மித்ருராவும் குளக்கரைக்கு வந்ததும், மித்ருராவை தள்ளியிருந்த ஒரு மரத்தடிக்கு அனுப்பியபின், அவளிடம், ''பக்தி மார்க்கத்திற்குப் பதிசேவையால் எவ்வித பங்கமும் ஏற்படாது. தம்பதிகள் இல்லற தர்மம் உணர்ந்து ஞான மார்க்கத்தில் வாழ்க்கை நடத்த வேண்டும். அப்போது அவர்களுக்குப் பேரின்ப வீட்டிற்கு வழி சுலபமாக கிடைக்கிறது. அதனால் உன் கணவரைக் கடவுளாகக் கொண்டு பதி சேவையால் உயர்ந்து, பேரின்ப வீட்டை அடைவாயாக! என உபதேசித்தார். அப்படியே இருப்பதாக வாக்குக் கொடுத்த சக்குபாய், கணவரிடம்

இனிமையாகப் பேசியதுடன் குடும்பத்தினருடனும் இன்முகத்துடன் நடந்து கொண்டாள். இவர்களின் இல்லறத்தைப் பார்த்து ஊரே வியந்தது.

சக்குபாய்க்கு திரும்பவும் அம்முதியவரைக் காணவேண்டும் என்ற ஆவல் தோன்றி நாளுக்கு நாள் அதிகரித்தது. இதனால் மனநிலை பாதித்து கிணற்றில் குதித்தாள். பக்தரின் வடிவில் வந்து காப்பாற்றிய பகவான் நல்ல வார்த்தைகள் கூற, இருவரும் சகஜமாக சிரித்துப் பேசியதைக் கண்ட சிலர், மித்ருராவிடம் தவறாக சக்குபாயைச் சித்தரித்தனர். கோபமாக வந்த அவன் இருவரையும் திட்ட ஆரம்பித்து, மாய பக்தனைப் பார்க்க அவர் அந்த முதியவராக காட்சி அளித்தார். சக்குபாய் கால் தவறி கிணற்றில் விழுந்ததாகவும், தான் காப்பாற்றியதாகவும் கூறிச் சென்றார். பழையபடி இல்லற வாழ்க்கை இனிமையாகச் சென்றது.

ஒருமுறை சக்குபாய் தண்ணீர் எடுக்க குளக்கரைக்கு வந்தபோது, அவ்வழியே கபீர்தாஸர், ராமதாஸர், நாமதேவர் போன்ற விட்டல அடியார்கள் பஜனை செய்தவண்ணம் பண்டரிபுரம் சென்றுகொண்டிருந்தனர். அவர்களை வணங்கிய அவள், தன்னையும் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டாள். அவர்கள் கணவரிடம் அனுமதி பெற்று வருமாறு கூறினர். மித்ருராவோ, தற்போது செல்ல வசதியில்லை. அடுத்த வருடம் செல்வோம் எனக் கூற, சக்குபாய் பிடிவாதம் பிடிக்கவே அறையில் வைத்துப் பூட்டினார். அறையில் இருந்தபடி மனம் உருகி வேண்ட, பகவான் சக்குபாயாக அறைக்குள் வந்து, அவள் கட்டுகளை அவிழ்த்து விட்டு, தன்னைத் தூணில் கட்டும்படி கூறினார். யாருக்கும் சந்தேகம் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். தைரியமாக நீ பண்டரிபுரம் சென்று வா' என அனுப்பி வைக்கிறார்.

தன் ஞானக்கண்ணால் நடந்ததை அறிந்த கபீர்தாஸ் சந்தோஷத்துடன் அவளைத் தன் பஜனை கோஷ்டியில் சேர்த்துக்கொண்டார். சக்குபாய்க்காக இறைவனே அறையில் இருக்கிறான் என்றறியாத கணவன் கட்டுக்களை அவிழ்க்க, அவள் எல்லா வேலைகளையும் இன்முகத்துடன் செய்து வந்தாள். பண்டரிபுரம் சென்ற சக்குபாயோ, தனக்குப் பதிலாக அங்கு ஒரு பெண் இருக்கிறாள் என்பதையே மறந்து பகவானின் சந்நிதியிலேயே நாட்களைக் கழிக்க, ஒருநாள் பூக்களைப் பறிக்கும் போது அரவம் தீண்டிட அவள் சந்நிதியிலேயே மயங்கி வீழ்ந்தாள். அங்கு வந்திருந்த மித்ருராவின் உறவினர், அவளைப் பார்த்து அவள் கணவருக்கு சேதி சொல்ல, அவரோ என் மனைவியைக் குறை கூறுவதே உங்கள் வேலையாகிவிட்டது என்று கூறி துரத்தினார். மயங்கிய சக்குபாயை இறைவனே வைத்தியராக வந்து காப்பாற்றி, ஊருக்குத் திரும்புமாறு கூறி, அவரே ஊர் வரைக்கும் அழைத்து வந்து மறைந்தார்.

ஊர்க்குளத்தில் தண்ணீர் எடுக்க வந்த, தான் கட்டிப்போட்ட பெண்ணைப் பார்த்து, உடனே வருவதாக கூறி பல நாட்களாகிவிட்டதே என மன்னிப்பு கேட்டாள். உடனே அந்த பெண் சங்கு சக்கரதாரியாக காட்சி கொடுத்து, இன்னும் சில காலம் இல்லறத்தில் இருந்து, அவரது திருவடியை அடைய ஆசிர்வதித்தார். வீடு திரும்பிய சக்குபாய், இவ்வளவு நாட்கள் இங்கிருந்தது பகவானே என்று கூறி, தான தருமம் செய்து தம்பதிகள் வாழ்ந்ததுடன், பல க்ஷேத்திரங்களுக்கும் சென்று வணங்கினார். தங்கள் வாழ்நாளை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்து, இறைவனடி சேர்ந்தனர்.

விட்டல! விட்டல! பாண்டுரங்க விட்டல!!

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம். இப்பதிவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கட்டுரை பற்றி பின்வருமாறு கொடுத்துள்ளேன். நம்முடைய முன்னோர்களின் காலத்தில் சுற்றுச்சூழல் பாதிப்படையாது. ஏனென்றால் அந்த காலத்தில் எல்லாம் வாகனங்கள் பயன்படுத்தவில்லை. ஆனால் இன்றைய காலத்தில் வீட்டில் 4 பேர் இருந்தாலும் அவர்கள் எல்லோரிடமும் வாகனங்கள் இருக்கிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது. நாம் மற்றும் நம் சந்ததி ஆரோக்கியமாக வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது நம் சற்றுச்சூழல் ஆகும்.

அப்படிப்பட்ட இயற்கையை பாதுகாப்பது பற்றியும், பள்ளி குழந்தைகள் மற்றும் கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் சுற்றுச்சூழலை எப்படி பாதுகாப்பது என்பது பற்றிய விழிப்புணர்வை கட்டுரை வடிவில் இந்த பதிவில் அறிந்து கொள்ளலாம் வாங்க.

முன்னுரை:

சுற்றுச்சூழல் என்பது இந்த பூமியை சுற்றியுள்ள இயற்கை மற்றும் செயற்கை பொருட்களின் ஒரு தொகுப்பே ஆகும். இப்பொழுது இருக்கும் அறிவியல் வளர்ச்சியில் ஒரு பக்கம் நன்மைகள் இருந்தாலும் மறுபக்கம் தீமைகள் சற்று அதிகமாகவே இருக்கிறது என்று சொல்லலாம்.

சுற்றுச்சூழல் மாசடைவதற்கான முக்கிய காரணிகள்:

1) நில மாசு 2) நீர் மாசு
3) ஒலி மாசு 4) காற்று மாசுபாடு

***நில மாசு:***

* நாம் இந்த பூமியில் வாழ்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு தாவரங்களும்,

விலங்குகளும் இந்த நிலப்பரப்பில் வாழ்வது அவசியம். பாலிதீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை நிலத்தில் கொட்டுவதாலும், புதைப்பதாலும் நிலம் மாசடைகிறது.

* நாம் தயாரிக்கும் ரசாயன பொருட்களில் இருந்து வெளிவரும் ரசாயன கழிவுகள் மற்றும் தாவரங் களில் கலக்கப்படும் யூரியா, பூச்சிக்கொல்லிகள் போன்ற செயற்கை உரங்கள் நிலத்தின் தன்மையை மாசுபடுத்துவது மட்டும் இன்றி அதை உண்ணும் மனிதர்களுக்கும் பல நோய்கள் உருவாகுகின்றன.

**நீர் மாசு:**

இப்புவியில் நீரின் அளவு **1.386** billion km$^3$. அதில் 97.5% உப்பு நீர் மற்றும் 2.5% நிலத்தடி நீர் ஆகும். நீர் மாசுபடுவதற்கான முக்கிய காரணம் நீரை சேமிப்பதற்கான வடிகால் வசதி இல்லாமல் இருப்பதே ஆகும். தொழிற்சாலை கழிவுகள் மற்றும் வீட்டு கழிவுகள் குளம், குட்டை, ஏரி போன்ற நீர் நிலைகளில் கலப்பதானாலும், விவசாயத்திற்கு பயன்படுத்தபடும் நீரில் கிருமி நாசினிகளை பயன்படுத்துவதாலும் நீர் மாசு அடைகிறது.

**ஒலி மாசு:**

* பெரும்பாலான ஒலி மாசு மனிதர்கள் பயன்படுத்தும் வாகனங்கள், பேருந்து, தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கிகள், வீட்டில் உபயோகப்படுத்தப்படும் இயந்திரங்கள், பொழுது போக்கு இயந்திரங்கள் மற்றும் மனிதர்கள் பேசும்போது வெளிப்படும் ஒலியென இப்புவி பல ஒலிகளால் மாசுபட்டுக் கொண்டு இருக்கிறது.

**காற்று மாசு:**

தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் வெளியேற்றும் புகையால் காற்று மாசுபடுகிறது. தற்போது அறிவியலில் மின்சார வாகனங்கள், ஹைட்ரஜன் ரயில் திட்டம் போன்றவை முன்னெடுக்கப் படுவது வரவேற்கத்தக்கதாகும்.

**மாசினைக் கட்டுப்படுத்த:**

* பிளாஸ்டிக் (நெகிழிகள்) உபயோகத்தை மிகவும் குறைத்துக்கொள்ளுதல்; மழைநீரை சேமித்தலும், நீரை வீணாக்காமல் உபயோகித்தலும், மரம் வளர்த்தலும் ஆகும். ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினமாக கொண்டாடப் படுகிறது. 'சுத்தம் சுகம் தரும்' என்பதை உணர்ந்து, இயற்கையைப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

* சூரியனிடமிருந்து தேவையான ஆற்றலை பூமி பெறுகிறது. நீராவி கார்பன்–டை–ஆக்ஸைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற வாயுக்கள் வாயு மண்டலத்தில் பரவியுள்ளன.

* இந்த வாயுக்கள் கிரீன்–ஹவுஸ் வாயுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. இதில் வெளிப்படும் வாயுக் களை பூமி பாதி அளவு எடுத்துக்கொள்கிறது.

**புவி வெப்பமயமாதல்:**

* இப்பொழுதெல்லாம் அந்தந்த பருவநிலைக்கு ஏற்ப மழை பொழிவதில்லை. அதற்கான முக்கிய காரணம் மாறிவரும் வெப்பநிலையே ஆகும்.

* வெப்பத்தின் அளவு அதிகரிப்பதால் நில வறட்சி, கடல் மட்டம் அதிகரிப்பது, வெள்ளம், பனிக்கட்டி உருகுவது அதிகரித்துள்ளது. அதனால் புயல், சூறாவளி போன்ற இயற்கை சீற்றங்களுக்கு காரணமாக உள்ளது.

* அதிக வெப்பத்தின் காரணமாக கடல் நீர் மட்டம் அதிகரித்தால் நில அரிப்பு, வெள்ள அபாயம் மற்றும் நீர் நிலைகள் உவர்ப்பாவதற்கான அபாயம் உள்ளது.

**ஓசோன் படலம்:**

* ஓசோன் படலம் விரிசல் அடைவதற்கான முக்கிய காரணம் காற்றில் வெளிப்படும் குளோரோ ஃபுளோரோ கார்பன், மீத்தேன் ஆகும். இந்த வாயு குளிர்சாதனப் பெட்டி மற்றும் Automatic Vending Machines போன்ற இயந்திரங்களில் இருந்து வெளிப்படுகிறது.

* புற ஊதா கதிர்களில் இருந்து பூமியை பாதுகாக்கும் ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்படுவதால் தோல் புற்றுநோய் போன்ற நோய்கள் உருவாவதற்கான வாய்ப்பு உள்ளது.

முடிவுரை:

* வளர்ந்து வரும் சந்ததியிடம் மற்றும் மக்களிடம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவசியத்தை எடுத்துரைப் பது மிக அவசியம்.

* நாம் செய்யும் எந்த ஒரு செயலும் சுற்றுச்சூழலை பாதிக்காமல் செய்து நம் வருங்கால சந்ததியிடம் ஒப்படைப்பது நம் அனைவரின் கடமை என்பதை நினைவில் வைத்து கொள்வது அவசியம்.

* மரம் நடுவோம்! மழை பெறுவோம்! மாசு இல்லா சுற்றுச்சூழலை உருவாக்குவோம்!

அர்ச்சனா சுவேதாரண்யம்
செல்: 9948702054

## காந்தலூர் (கேரளா) சுற்றுலா

நம்பிக்கை, ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியை மையமாகக் கொண்டு இயங்கி வரும் நமது நங்கநல்லூர் வட்டார கார்கத்தார் சங்கம் சார்பில் உறுப்பினர்களின் மன அமைதிக்காகவும் நெகிழ்வான சுற்றுலாவுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்ட அருமையான சுற்றுலா பயணம் தான் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள காந்தலூர் என்ற மிக அற்புதமான மலைப்பிரதேச பயணம். கடந்த ஜூலை 17ஆம் தேதி இரவு 9.30 மணிக்கு நமது சங்க உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுடன் உற்சாகத்துடன் எதிர்பார்ப்புடனும் சென்னையிலிருந்து ரயிலில் பயணத்தை தொடங்கினோம். இரவோடு இரவாக அமைதியான ரயில் பயணம் தொடர மறுநாள் ஜூலை 18ஆம் தேதி காலை 7 மணிக்கு இயற்கை எழில் கொஞ்சும் உடுமலைப்பேட்டை நகரத்தை சென்றடைந்தோம். உடுமலைப்பேட்டையில் நமக்காக SM டிராவல்ஸ் நிறுவனம் நேர்த்தியாக ஏற்பாடு செய்திருந்த தங்குமிடத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்து பின்னர் பயணத்தை தொடங்க தயாரானோம். அங்கிருந்து சிறிது தூரத்தில் அமைந்துள்ள தேஜஸ் மஹாலில் காலை சிற்றுண்டி நிறைவு செய்த பிறகு நமது குழுவை சேர்ந்த 35 (7 வயது முதல் 81 வயது வரை) உறுப்பினர்களும் ஒரு சொகுசு பேருந்து மற்றும் ஒரு Innova காரில் காந்தலூர் நோக்கி புறப்பட்டோம். செல்லும் வழியில் உடுமலை திருப்பதி ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயில் மற்றும் திருமூர்த்தி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் தரிசனம் செய்தோம். அமராவதி அணை, அமராவதி முதலைப் பண்ணை மற்றும் தூவானம் அருவி முதலியவற்றை பார்த்து மகிழ்ந்தோம். Zip line விளையாட்டு விளையாடியும் பார்த்தும் மகிழ்ந்தோம். காந்தலூர் sandal Casa Resortக்கு மாலை 6:00 மணியளவில் சென்றடைந்தோம். அன்று இரவு Resort ஏற்பாடு செய்திருந்த Camp Fireரில் நடனமாடி மகிழ்ந்தோம். அடுத்த நாள் ஜூலை 19ஆம் தேதி ஜீப்பில் பயணத்தை தொடங்கி முதலில் காந்தலூரில் உள்ள ஆப்பிள், ஆரஞ்சு, ஸ்ட்ராபெரி, பேரிக்காய் போன்ற பலவிதமான பழங்கள் நிறைந்த பழத்தோட்டத்தை பார்த்து மகிழ்ந்தோம். அடுத்து பிரமரம் வியூ பாயிண்ட் காந்தலூர் Water Falls, Honey Rock, Sandal wood Forest மற்றும் Lakkom நீர்வீழ்ச்சியில் குளித்து மகிழ்ந்தோம். அன்று இரவும் Camp fire-ரில் ஆடி மகிழ்ந்தோம். அடுத்த நாள் 20ஆம் தேதி மறையூரில் உள்ள வெல்லம் தயாரிக்கும் இடங்களை பார்வையிட்டு பொருட்கள் வாங்கிவிட்டு மாலையில் ஊர் திரும்ப புறப்பட்டோம். 21/7/2026 அன்று அனைவரும் பாதுகாப்பாகவும் மனநிறைவோடும் சென்னை வந்து சேர்ந்தோம்.

மறக்க முடியாத பயணம்! அனைவருடனும் இணைந்து பயணித்த இந்த காந்தலூர் சுற்றுலா, என்றும் நெஞ்சில் நிலைத்திருக்கும் அளவற்ற மகிழ்ச்சியையும் இனிய நினைவுகளையும் வழங்கி இனிதே நிறைவடைந்தது.

R. ஸ்ரீதேவி சுரேஷ் குமார்
**9840366495**

## கூட்டுக் குடும்பம்

நிர்மலா ராஜவேல்
**9841198088**

இன்றைய நாளில் கூட்டுக் குடும்பமென்பது கணவன்,மனைவி,பிள்ளைகளெனச்சேர்ந்திருந்தாலே கூட்டுக் குடும்பமென பேசப்படுகின்ற நிலைமையாகி விட்டது. கூட்டுக் குடும்பம் இன்று பிரிந்திருப்பதால், பல உறவுகளின் பெயர்களும் மறக்கடிக்கப்படும் சூழல் உருவாகி உள்ளது. குடும்பச் சூழலால், பொருளாதாரச் சூழலாலெனப்பிரிந்து,உறவுகளின்நெருக்கம்குறைந்து விரிசல்கள் அதிகரிக்கின்றது. குடும்பத்திலுள்ள பெரியவர்கள் நம்முடைய குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தையும், அன்பையும் கற்றுக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை கொள்ளவேண்டும். அனைவரும்இணைந்துஉறுதுணையாக,ஒற்றுமையாக வாழும் வாழ்க்கையையும், அறிவுரைகளையும், அனுபவங்களையும் பகிர்ந்து, நம்மை வழிநடத்திடப் பெரியோர்களின் அருகாமை அவசியம் தானே!

ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமான அடிப்படை ஆதாரம் குடும்பம் மட்டுமே. சிறு, சிறு சண்டைகள், சமாதானங்கள், மகிழ்ச்சிகள், இன்ப, துன்பங்களென அனைத்தும் அடங்கிய அற்புதமான ஒரு அமைப்பு கூட்டுக் குடும்பம் மட்டுமே. காலையில் கலைந்து மாலையில் கூடு வந்தடையும் பறவைகள் போல வீடு வந்தடையும் மனிதர்களின் வாழ்க்கையே மகிழ்ச்சி நிரம்பியதாகும். கூட்டுக் குடும்பங்களே வாழ்க்கைக்கு அழகான அர்த்தங்களைத் தருகின்றன. ஒரு காலத்தில் குடும்பங்களே கோயில்களாய் இருந்த தேசம் நம் தேசம். ஆனால் இன்றைக்குக் காணாமல் போன சிட்டுக்குருவிகள் போல் கூட்டுக்

குடும்பம் போன்ற அமைப்பு தனித்தனியாக சிதைந்து போய்விட்டது.

இன்றைக்குக் கதை சொல்லும் தாத்தா, பாட்டிகளே கிடையாதென்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம். தலைமுறைகளின் பெயர்களும், மூ தாதையர்களின் பெயர்களும் மறந்து போய் விடும் நிலையாகி விட்டது. நமது குலம், கோத்திரம் இவற்றின் பெருமைகளைக் காக்க மறந்து விடுகிறோம். இன்றைய இளைஞர்கள் நாளைய முதியவர்கள். இதை மனதில் இருத்தினாலே, முதியவர்களுக்கென தனி இல்லம் உருவாக்கம் கொள்ளாது. பத்து பிள்ளைகள் இருந்தாலும், எந்த பெற்றோரும் பிள்ளைகளைத் துரத்துவதில்லை. தங்கள் சக்தியை மீறி காப்பாற்ற துடிக்கின்றனர். ஆனால் அந்த பத்தும் பிள்ளைகளும் பெற்றோரைக் காப்பாற்றுவார்களா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.

நம் மேல் அக்கறை கொண்டு, நமக்கு வழி காட்டுகின்ற நல்ல உறவுகளைப் பிரிந்து எதனைச் சாதிக்க போகிறோம் ? கணவனும், மனைவியும் விண்ணிலிருந்து பூமிக்கு வந்து விடவில்லையென்பதை உணரவேண்டும். இதற்கு என்னதான் தீர்வு ? பெற்றோர்களுக்கு வயதானால் அவர்கள் குழந்தைகள் போல மாறி விடுகின்றனர். அவர்களையும் அவர்களின் வயதினையும் மதித்து முதலில் ஏற்றுக்கொள்ளப் பழக்கிக்கொள்ள வேண்டும். வயதாகும் போது உடலாலும், மனதாலும் சோர்ந்து போய்விடுகின்றனர் என்பதை நாம் உணர வேண்டும்.

அவர்களின் பேச்சுக்களை யாராவது நேரம் ஒதுக்கி கேட்க மாட்டார்களாவென்று ஏக்கம் கொள்கின்றனர். தன்னையும்மதித்துகலந்தாலோசிக்க வேண்டுமென விரும்புகின்றனர். தன்னைக் கவனிக்க வேண்டுமென்பதற்காகவே சில நேரம் பிடிவாதம் பிடிப்பார்கள். இதனை எல்லாம் பிள்ளைகள் நினைவில் கொண்டு, அவர்களுடனும் அமர்ந்து பேச நேரம் ஒதுக்கி முழு ஈடுபாட்டுடன் பேச்சினைக் கேட்க வேண்டும். தனது பிள்ளைகளுடன், பெற்றோரையும் நேசிப்பதுவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொள்வதும் கூட்டுக் குடும்பத்தினைத் திறம்பட கொண்டாட தேவையான மந்திரங்களாகும். இத்தகைய மனப்பான்மையை கணவன், மனைவி, பிள்ளைகளென அனைவரும் கொண்டிருந்தால் மட்டுமே கூடி வாழ முடியும்.

இளையவர்கள் தான் விட்டுக் கொடுக்க வேண்டுமா ? பெரியவர்களுக்கு அந்த விதிமுறை பொருந்தாதா ? நிச்சயம் பெரியவர்களுக்கும் அமைதி யான கூட்டுக் குடும்ப வாழ்வில் பங்குண்டு. தான் கட்டிக்காத்த குடும்ப பாரம்பரியம் சிதையாமல் இருக்க வேண்டுமெனில், முதலில் தலைமுறை இடைவெளியை உணர்ந்து அவர்கள் கூறுவதை கவனித்து கேட்க வேண்டும். தாங்கள் சொல்வதை மட்டுமே அவர்கள் கேட்க வேண்டுமென்று எண்ணாமல், அவர்களின் ஆலோசனைகளுக்கும், வார்த்தைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். நம்முடைய வேலைகளை நாமே செய்துகொள்ள பழக்கிக் கொள்ள வேண்டும். இருக்குமிடம் தேடி அனைத்தும் வரவேண்டும் என்று நினைப்பது சரியன்று. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்ததோடு திருப்தி கொள்வது நலம் பயக்கும். இக்காலத்தில் இளையோர் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக் கொள்கின்றனர். அவர்களை வளர்ப்பது குறித்தும் கணவன் மனைவிக்குள் ஒரு புரிதல் உண்டு. அதனால் பேரப் பிள்ளைகளை வளர்ப்பது நம் வேலையன்று என சற்றே தள்ளி நிற்க தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால் அதே சமயம் தாத்தா, பாட்டி குழந்தைகளுக்கு கதை சொல்லுதல் அவசியம் ஆகும். அது போன்ற ஒரு எல்லைக் கோடு உங்களுக்கென போட்டுக் கொள்ளுங்கள்.

அறிவுரைகளையும், அனுபவங்களையும் எவருக்கும் இலவசமாக வழங்காதீர்கள். உங்கள் வயதொத்தவர்களிடம் மனம் விட்டு உரையாடுங்கள். நண்பர்களின் அருகாமையை உணருங்கள். தேவை யற்ற உணவுகளை நிராகரியுங்கள். சூழ்நிலையை உணர்ந்து சிந்தித்து. பேசுங்கள். இரண்டு உள்ளங்கள் இணைந்தால்தான் இல்லறம் என்பது போல அரவணைத்துச் சென்றால் தான் கூட்டுக் குடும்பநாக கூடி ஆனந்தமாக வாழ முடியும்.

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதனினும் அரிது உறவுகளுடன் பிறத்தல். அதனினும் அரிது கூட்டுக் குடும்பமாக வாழ்வது. பண்டிகை, விழாக் காலங்களில் ஒன்று கூடி களிப்போம். நம் பெற்றோரிட்ட வழியில் தடம் பதித்து நம் குழந்தை களின் விரல் பிடித்து நடந்திடுவோம். ஆலமரத்தின் விழுதுகள் போல் பிள்ளைகளும், மறைந்திருந்து தாங்கிப் பிடிக்கும் வேர்களாகப் பெற்றோர்களும் இணைந்திருந்தால் என்றென்றும் மகிழ்ச்சியே! கூடி வாழ்வோம்! இன்புறுவோம்!

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/8** செல்வி **P. தேவதர்ஷினி**<br>விசாகம் 3ம் பாதம்<br>செஞ்சலுட<br>பூர்வீகம் : திருவிடைமருதூர் | 19.7.2002<br>175 cm | B.E. (ECE) | ZOHO Company,<br>Chennai | திரு. R. பொன்னரசன்,<br>90/A, தெற்கு வீதி, திருவிடைமருதூர்,<br>தஞ்சாவூர் மாவட்டம் – 612 104.<br>Cell : 88380 01039,<br>94428 61136 (W) |
| **B 2/8** செல்வி **K. சரண்யா**<br>உத்திரட்டாதி<br>தொழுவுட | 25.5.2003<br>161cm | B.E.<br>(EEE) | Control Soft<br>Engineering<br>Pvt. Ltd.,<br>Chennai<br>Rs. 35,000/PM | திரு. G. குமரேசன்,<br>14B/3, North Street, Seppakkam,<br>Veppur Taluk,<br>Cuddalore - 606 302.<br>Cell : 63824 73531, 94448 41014,<br>91591 97980 |
| **B 3/8** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | 7.5.98<br>154 cm | B.Tech. (CS) | Software<br>Professional,<br>EPSILON<br>Bangalore,<br>Rs. 12 Lakhs / PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : 79041 97546, 99416 20355 |
| **B 4/8** செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை 3ஆம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்) | 21.11.98<br>165cm | B.E.<br>(ECE) | Senior Software<br>Engineer,<br>Freshworks,<br>Chennai | திரு. T. Ramesh,<br>11, SNR Flats,<br>Kodambakkam, Chennai - 600 024.<br>Cell: 94445 56972, 90801 87596 |
| **B 5/8** செல்வி **T. Subhashini**<br>Swathi<br>Meenavaraya<br>பூர்வீகம் : திருவாரூர்<br>விருப்பம் : சென்னையில் உள்ள வரன் | 9.4.2001<br>5' - 5" | B.E.<br>(ECE) | | திரு. S. Thiyagarajan,<br>55, Dr. Koushik Enclave,<br>Nava Shakthi Nagar, Meppur,<br>Chennai - 600 123.<br>Cell : 80560 59794 |
| **B 6/8** செல்வி **A. Swetha**<br>சதயம்<br>பல்லவராய<br>பூர்வீகம் : மணிக்கிராமம், மயிலாடுதுறை<br>விருப்பம் : சென்னையில் பணியில் உள்ள வரன் | 27.1.2001<br>168 cm | B.Com.,<br>M.B.A., | Renault Group<br>Executive<br>Rs. 3.5 Lakhs / PA | திரு. வை. அன்பழகன்,<br>மனை எண். 75,<br>சுதர்சன் நகர் விரிவாக்கம்,<br>காஞ்சிபுரம் – 631 501.<br>Cell: 98427 37409 |
| **B 7/8** செல்வி **சு. கோகிலா**<br>பூரம்<br>புதுவுட<br>பூர்வீகம் : சேத்தூர் (வைத்தீஸ்வரன் கோவில்) | 01.06.98<br>176cm | B.B.A. | Nat West Groups<br>Chennai<br>Rs. 5.5 Lakhs / PA | திரு. நட. சுந்தரராசன்,<br>F3, DCC Agalya Apartmenmts,<br>6th Street, STV<br>Thirumullaivoyal, Chennai - 600 062.<br>Cell: 86108 38091<br>E-mail : kokipad@gmail.com |
| **B 8/8** செல்வி **ரூபவள்ளி. S**<br>சுவாதி<br>கனகராய<br>பூர்வீகம் : திருப்பூர் | 21.12.2000<br>5' - 3" | B.Tech<br>EEE | Software<br>Testing<br>Rs. 5 Lakhs / PA | திரு. R. செல்வம்,<br>சக்தி ஜிப்பர்ஸ், 572,<br>பொன்மணி காம்பவுண்ட்,<br>எவரஸ்ட் ஹோட்டல் அருகில்,<br>புஷ்பா தியேட்டர், திருப்பூர் – 641 602<br>Cell: 93451 41198, 93630 00007 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/8** செல்வி **ஜெ. ஐஸ்வர்யா**<br>விசாகம்<br>விளந்துட<br>பூர்வீகம் : பாங்கல்<br>விருப்பம் : அரசு அல்லது தனியார் துறையில் நல்ல வேலையில் உள்ள வரன் | 22.01.98<br>163 cm | B.E.<br>(CSE) | Software Developer<br>Bangalore | திரு. S. Jayakumar<br>Coimbatore,<br>Cell : **94423 45210** |
| **B 10/8** செல்வி **ஆ. சசிகலா**<br>பூரட்டாதி<br>தென்னவராய<br>பூர்வீகம் : திட்டக்குடி<br>விருப்பம் : அரசு அல்லது தனியார் துறையில் நல்ல வேலையில் உள்ள வரன் | 7.3.2000<br>152 cm | MBA | ICICI Bank,<br>Chennai<br>Rs. 60,000/PM | திரு. R. ஆறுமுகம் பிள்ளை,<br>ஸ்ரீராம் நகர்,<br>வட்டாட்சியர் அலுவலகம் எதிரில்,<br>திட்டக்குடி, கடலூர் மாவட்டம்,<br>Cell : **88384 65308** |
| **B 11/8** செல்வி **M. சுவாதி**<br>சுவாதி<br>மாருடையான்<br>பூர்வீகம் : இளையபெருமாள் நல்லூர்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | 8.1.2002<br>5' - 5" | B.Com.,<br>LLB | | திரு. G. மோகன்,<br>C7, இன்ஜினியர் சாலை,<br>வட்டம் 25,<br>நெய்வேலி – 607 803.<br>Cell: **94429 12749, 63813 19603** |
| **B 12/8** செல்வி **S. துர்காதேவி**<br>சித்திரை 4ம் பாதம்<br>பூவனுட<br>பூர்வீகம் : பூவிழந்தநல்லூர் | 13.8.2002<br>162 cm | B.E.<br>(CSE) | Software Developer<br>Coznizant,<br>Chennai<br>Rs. 4 Lakhs / PA | திரு. சுவாமி நாதன் .N,<br>13/34, ஐயப்பன் கோவில் தெரு,<br>பெருமாள் கோவில் தெரு விரிவு,<br>வேலப்பாடி, வேலூர் – 632 001.<br>Cell: **96299 53478, 98947 55943** |
| **B 13/8** செல்வி **B. பிரியதர்ஷினி**<br>பரணி<br>கரம்பகுட<br>பூர்வீகம் : கிளிமங்கலம் – விருத்தாசலம்<br>விருப்பம் : டாக்டர் வரன் மட்டும் | 02.06.97<br>160 cm | MBBS,<br>M.S (DNB), | தனியார்<br>Rs. 3 Lakhs / PA | முனைவர் திரு. P. பாலபாஸ்கர்,<br>301/152, குறிஞ்சிப்பூ தெரு,<br>தெற்கு பெரியார் நகர்,<br>விருத்தாசலம் – 606 001.<br>Cell : **98657 03537, 97906 03497 94880 46348** |
| **B 14/8** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | 09.09.98<br>160 cm | M.E.<br>(Ph.D) | Asst. Professor (IT)<br>Rajalakshmi<br>Engineering<br>College, Chennai | திரு. P.G. ராமமூர்த்தி,<br>55/18, வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம் – 606 105.<br>கடலூர் மாவட்டம்<br>Cell: **99761 77910, 91596 54000** |
| **B 15/8** செல்வி **S. Sivasangari**<br>Sadayam<br>Kothanuda<br>பூர்வீகம் : Kothatai<br>விருப்பம் : IT துறையில் பணிபுரியும் வரன். | 20.9.2002 | B.Tech (IT)<br>. | Associate Software<br>Developer in<br>Accenture<br>Chennai | திரு. T. Sivanesan,<br>No. 2, North Street,<br>Srimushnam,<br>Cuddalore District - 608 703.<br>Cell : **76676 66897** |
| **B 16/8** செல்வி **R. புவனேஸ்வரி**<br>புனர்பூசம் – 4<br>நெப்புகுட | 23.6.2001<br>5.6' | B.E. (Comp) | Schneider<br>Electric,<br>Bengaluru<br>Rs. 9.6Lakhs/PA | திரு. R. இராஜசேகரன்,<br>58, VSR நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 96295 03222, 94427 80650 |



| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 1/8 செல்வன் **R. அரவிந்த்**<br>பரணி 2ம் பாதம்<br>பில்லாலுட<br>பூர்வீகம் : திருமாந்துறை | 03.07.94<br>5' - 6" | M.Tech., | IT, Net Access India Ltd.,<br>Chennnai<br>Rs. 13 Lakhs | திரு. R. ரமேஷ்,<br>நெ. 64, காவேரி சதுக்கம்,<br>தந்தை பெரியார் நகர்,<br>விழுப்புரம் – 605 401.<br>Cell : 94427 41245, 94890 12545 |
| G 2/8 செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம் 4ம் பாதம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 21.6.99<br>172 cm | B.Tech (ECE)<br>M.Tech (NIS) | Network Engineer (RAN) LMJ Innovations Amertum<br>Bangalore | திரு. குமார் (எ) சிவசிதம்பரம்,<br>1, பங்களா தெரு,<br>தேவானூர் சாலை, வரிச்சிக்குடி,<br>காரைக்கால் Dt.,<br>Cell : 97873 10010, 91509 16765 |
| G 3/8 செல்வன் **ஸ்ரீ அஸ்வத்**<br>உத்திரட்டாதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : ராகு, கேது உள்ளது / தகுதியான வரன் | 11.11.97<br>178 cm | B.E. (EEE) | Lead Test Engineer<br>QBurst Technologies<br>Chennai<br>Rs. 12,00,000/PA | திரு. கோ. குஞ்சிதபாதம்,<br>20/2, மேற்கு ரத வீதி,<br>பெண்ணாடம் – 606 105.<br>Cell : 88705 55569 (Whatsapp)<br>98423 57920 |
| G 4/8 செல்வன் **யோகேஸ்வரன்**<br>ஆயில்யம்<br>வேளா<br>பூர்வீகம் : சாத்துக்குடல்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன் | 28.06.98<br>160 cm | MBA,<br>Shipping & Logistics | Sea Horse Ship Agencies (P) Ltd., Chennai<br>Rs. 7 Lakhs/PA | திரு. சி. ரவி,<br>115, வடக்கு தெரு,<br>சாத்துக்குடல் மேல்பாதி,<br>விருத்தாசலம் வட்டம்,<br>கடலூர் மாவட்டம் – 606 110.<br>Cell : 99656 35742, 98420 22958 |
| G 5/8 செல்வன் **த. பிரசாந்த்**<br>விசாகம்<br>வில்வராய<br>பூர்வீகம் : ரெட்டிக்குடிகாடு (பெரம்பலூர் மாவட்டம்) | 13.08.94<br>180 cm | DCE (Civil) | UAE (Abudhabi)<br>Rs. 40,000/PM | திரு. தங்கவேல் பிள்ளை,<br>1/47, ரெட்டிக்குடிகாடு,<br>தெற்கு தெரு,<br>வசிஷ்டபுரம் அஞ்சல்,<br>குன்னம் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் – 621 716.<br>Cell : 96264 02298, 78068 37289 |
| G 6/8 செல்வன் **P. கௌதம்ராஜ்**<br>அஸ்தம் 1ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : கரையவெட்டி | 15.02.98<br>5' - 6" | B.E. (EEE) | Foxconn Manufacture (Mobile Co)<br>Chennai<br>Rs. 35,000/PM | திரு. T. பாலகிருஷ்ணன்,<br>கரையவெட்டி,<br>அரியலூர் மாவட்டம்.<br>Cell : 96554 92053 |
| G 7/8 செல்வன் **J. முரளிதரன்**<br>பரணி<br>மழுவதரிய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : படித்த பெண் (அ) படித்து சென்னையில் வேலை பார்க்கும் பெண். | 26.06.92<br>173.5 cm | B.E. (ECE) | Cloud Speclialist in Space Tech<br>Chennai<br>Rs. 50,000/PM | திரு. R. ஜவஹர்,<br>102, முதல் மாடி,<br>1A, பெரியாழ்வார் தெரு,<br>சானிடோரியம், கிழக்கு தாம்பரம்<br>சென்னை – 600059,<br>Cell : 94429 36710, 88257 11845 |
| G 8/8 செல்வன் **R. சிவகிருபா**<br>அவிட்டம்<br>கொளத்துட<br>பூர்வீகம் : வரவுகுடி<br>விருப்பம் : வேலைக்கு செல்லும் குடும்ப பாங்கான பெண் | 25.02.98 | B.E. (Mech) | Rs. 40,000/PM | திருமதி. அனுராதா ரவிக்குமார்,<br>C/o. K. ஜெயலெட்சுமி,<br>3/51, வடபாதி தெரு,<br>சோழம்பேட்டை, மயிலாடுதுறை<br>Cell : 94439 66945 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/8** செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>பூர்வீகம் : கோட்டவம், காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு | **30.01.96**<br>180 cm | B.Tech.,<br>MBA., | Analyst -<br>Accenture, Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. ராமதாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், இலாசுப்பேட்டை,<br>புதுச்சேரி – 605 008.<br>Cell : 94425 80571, 86108 73478 |
| **G 10/8** செல்வன் **ர. ராஜா மணிகண்டன்**<br>திருவாதிரை<br>கொழுமுடையான்<br>பூர்வீகம் : காட்டுமன்னார்கோயில்<br>விருப்பம் : படித்த அழகான, வேலைக்கு செல்லும், சுத்த சைவ பெண் | **17.06.96**<br>165 cm | (Mechanical<br>Engineering) | B.E, Manager -<br>Private Company,<br>Chennai<br>Rs. 7.5 Lakhs/PA | Mrs. Revathi Ravichandran,<br>F2, Sri Andal's Lilly Apts.,<br>111, Priyadharshini Nagar,<br>TNHB Colony Road,<br>Sithalapakkam, Chennai - 600 126.<br>Cell : 94456 38756 |
| **G 11/8** செல்வன் Gangadharan Sivakumar<br>Kettai<br>Veludayan<br>பூர்வீகம் : Virudhachalam | **10.11.99**<br>168 cm | B.Tech., | Tata Consultancy<br>Service, Chennai<br>Rs. 10 Lakhs/PA | திரு. V. Sivakumar,<br>Plot No. 50, Venba Avenue,<br>2nd Street, Sithalapakkam,<br>Chennai - 600 126.<br>Cell : **94445 08005, 94445 08001**<br>E-mail : sivasivasiva199@gmail.com |
| **G 12/8** செல்வன் **B. விக்னேஷ்**<br>பூரம்<br>குருவிலராய<br>பூர்வீகம் : திருவிளையாட்டம்/மயிலாடுதுறை | **29.4.96**<br>185 cm | B.Com.,<br>CA | Financial Professional<br>Uravu Labs Pvt. Ltd.<br>Bangalore<br>Rs. 10-12 Lakhs/PA | Mr. S. Baskaran,<br>Flat No. 102, Vijay Elite,<br>Hanam Konda,<br>Telangana<br>Cell : 80194 41428 |
| **G 13/8** செல்வன் **K. செல்வகணபதி**<br>சுவாதி (3ம் பாதம்)<br>விச்சுட<br>பூர்வீகம் : இராஜேந்திரபட்டிணம், கடலூர் மாவட்டம் | **14.9.99**<br>185 cm | B.Tech.,<br>EEE., | DNV Company<br>Chennai | திரு. ம. கார்த்திகேயன்,<br>மனை எண். 15, சிவ சிவ நகர்,<br>சத்திரம் கருப்பூர் (PO),<br>கும்பகோணம் – 612 501.<br>Cell : 94867 67923, 94429 03302 |
| **G 14/8** செல்வன் **A. சந்தோஷ்குமார்**<br>அஸ்வினி<br>காலிங்கராயர்<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர்/சிதம்பரம்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **01.12.98**<br>172 cm | M.Com., | Grocery Shop<br>Chennai<br>Rs. 4 Lakhs/PA | திருமதி. A. சிவகாமசுந்தரி,<br>282/3, வடக்கு தெரு,<br>மதுராந்தகநல்லூர் & PO,<br>சிதம்பரம் Tk,<br>கடலூர் Dt. – 608 201.<br>Cell : 90038 32934, 88255 62021 |
| **G 15/8** செல்வன் **R. அருண்குமார்**<br>அவிட்டம்<br>காருட<br>பூர்வீகம் : ராஜமன்னார்குடி<br>குறிப்பு : ராகு, கேது தோஷம் உள்ள வரன் | **10.09.92**<br>5' - 5" | B.E.<br>Mechanical | Production Support<br>Analayst Employee<br>Transunion Global<br>LLC<br>Rs. 70,000/PM | திரு. R. அருண்குமார்,<br>Oyster A1, முல்லை தெரு,<br>லெனின் நகர், அம்பத்தூர்,<br>சென்னை – 600 053.<br>விவேகானந்தர் பார்க் எதிரில்<br>Cell : 94885 08486, 96779 59798 |
| **G 16/8** செல்வன் **R. ஆதித்யா**<br>பூரம்<br>மாயலுட<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நன்கு படித்த வேலைக்குச் செல்லும் பெண் | **6.4.2001**<br>188 cm | B.Tech (EC), | CIS CO System<br>Private Ltd.<br>Bangalore | Mr. N. Rajesh Kanna,<br>B 902, Tween Tower,<br>TP 10 Road, Pal,<br>Surat, Gujarat.<br>Cell : 95584 66848 / 97243 02253 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 17/8** செல்வன் **B. சுரேஷ்**<br>அசுபதி<br>சாத்தனுட<br>பூர்வீகம் : கழனிவாசல்<br>விருப்பம் : 10th, +2 or any degree படித்த ஏழ்மையான பெண் | 10.6.88<br>5' - 7" | B.E.,<br>(Mechanical) | 30 ஏக்கர் நிலம்<br>Rs. 15 Lakhs/PA | திரு. M. பாஸ்கரன்,<br>கீழ வீதி, கழனிவாசல்,<br>மயிலாடுதுறை மாவட்டம்–609404.<br>Cell : **90924 27885, 94881 17102** |
| **G 18/8** செல்வன் **ஸ்ரீதர்**<br>சுவாதி<br>நெப்புகூட<br>பூர்வீகம் : கொடிக்களம் | 31.10.97<br>6' | MBBS<br>(Russia-FMGE<br>MCI Passed | சென்னையில்<br>மருத்துவராக<br>உள்ளார் | திரு. வீ. ஆறுமுகம் பிள்ளை,<br>நடுத் தெரு, கொடிக்களம்,<br>திருவட்டதுறை PO,<br>திட்டகுடி Tk., கடலூர் Dt.<br>Cell : **99761 93269, 95146 55379** |
| **G 19/8** செல்வன் **M. Vishnukumar**<br>Rohini<br>Pennamuda<br>பூர்வீகம் : Meyyathur<br>விருப்பம் : Equally Qualified bride working in the US on H IB Visa | 02.04.98 | B.E.<br>Com.Sci.<br>MS | Data Engineer<br>University of<br>Phoenix, USA | திரு. K. Madhavan,<br>192 - 4th Cross, Bharathi Salai,<br>Muthiah Nagar, Annamalai Nagar PO,<br>Chidambaram<br>Cell : **9442441090, 9042407326** |

## போரூர் கார்காத்தார் சங்கம் நடத்தும் கார்குல மங்கல சந்திப்பு

அன்புடையீர் வணக்கம்

போரூர் கார்காத்தார் சங்கத்தின் சார்பில் நடத்தப்படும் மங்கல சந்திப்பு நிகழ்வு போரூர் மதனந்தபுரம் **SAK** ஜெய் மாருதி மஹாலில் புரட்டாசி 3ம் தேதி **20.09.2026** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **2.30** மணி முதல் தொடங்கி மாலை **5.00** மணி வரை நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுகிறோம்.

பதிவுக்கட்டணம் ரூ. 200/–ஐ **GPay QR**ல் செலுத்தவும்.

குறிப்பு: Online பதிவு செய்ய உதவி தேவைப்படுவோர் கீழ்கண்ட அலைபேசி எண்களை தொடர்பு கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### பதிவு செய்யும் வழிமுறைகள்

மணமகன்/மணமகள் விவரங்களை **Google Form QR** மூலம் 10.09.2026க்குள் அனுப்பிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பதிவு உதவி எண் – மணமகன்
T. கல்யாணசுந்தரம் – 9840697100

பதிவு உதவி எண் மணமகள்
S. சந்திரமோகன் 9444349940

### மாதிரி விண்ணப்பம்

(கீழ்கண்ட தகவல்கள் மட்டும் (Online) பதிவு செய்ய போதுமானது)

| | |
|---|---|
| Email | |
| மணமகள் / மணமகன் பெயர் | |
| பாலினம் (ஆண் /பெண்) | |
| பிறந்த தேதி | |
| உயரம் (சென்டி மீட்டர்) | |
| நட்சத்திரம் | |
| கோத்திரம் | |
| கல்வித் தகுதி | |
| பணி விபரம் | |
| ஊதியம் | |
| தந்தை பெயர் | |
| பூர்வீகம் | |
| பணி விபரம் | |
| தாயார் பெயர் | |
| பூர்வீகம் | |
| பணி விபரம் | |
| உடன் பிறந்தோர் (ஆண்/பெண்) | |
| விருப்பம் & இதர தகவல்கள் | |
| தபால் முகவரி & பின்கோடு | |
| தொடர்பு எண் – 1 | |
| தொடர்பு எண் – II (WhatsApp) | |
| G-Pay-Name & Transaction No. & Date | |



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

நம்பிக்கையை கைவிடாதே! அதுதான் வெற்றியின் முதல்படிக்கட்டு!

ஒழுக்கம் என்பது வெள்ளைக் காகிதம் போன்றது ஒரு முறை கறைபட்டால் மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியாது.

**எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர்!**

எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர். மக்களின் எண்ணத் தொகுதிதான் ஒரு நாட்டின் வளர்ச்சியாக முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறது. ஒரு நாடு முன்னேறுகிறதா பின்னேறுகிறதா என்பது அந்த நாட்டின் பல்வேறு துறைத் தலைவர்களையும் மக்களையும் பொறுத்தது. இங்கே நல்லவர்கள் இருக்கிறார்களா? சுயநலக்காரர்கள் இருக்கிறார்களா? என்பதைப் பொறுத்தது.

    

ரோம ராஜ்யம் அழியுமுன் அது குடி போதையிலும் இன்பப் போதையிலும் காலங் கழித்ததைப் பற்றிச் சரித்திராசிரியர்கள் எழுதுகிறார்கள். அசோக சாம்ராஜ்யத்தின் முக்கியத்துவத்தை அங்கே அன்று நிலவிய எண்ணங்கள் மூலம் இன்று நாம் உணர்கிறோம். நமது நாடு மகத்தான தலைவர்களை வழங்கியிருக்கிறது.

அன்னை தெரசா, காந்தி, நேரு, பாரதி, வல்லபாய் படேல், டாக்டர்.அம்பேத்கார், அண்ணா, காமராஜர், டாக்டர்.அப்துல்கலாம் இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.... இவர்கள் வழங்கிய எண்ணங்கள் எல்லாம் புனிதமானவை. உயர்ந்தவை. உண்மை, நேர்மை, வீரம், இனிமை எல்லாம் மகத்தான எண்ணங்கள். நாம் இதை நினைவில் கொள்ளவேண்டும். புத்தரின் எண்ணங்களால் சரித்திரம் எப்படி மாறியது? ஆபிரகாம் லிங்கன், காந்தி என்று இவர்களெல்லாம் எப்படிச் சில எண்ணங்களுடன் வந்து, உலகின் சரித்திரத்தை மாற்றி அமைத்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். திடமான எண்ணங்களை கொள்ளுங்கள். உற்சாகம், ஊக்கம் என்னும் ஒளியைத் தூண்டிவிடுங்கள். நம்பிக்கை விடிவெள்ளியாய் சுடர் விடட்டும். அது உங்களை லட்சியப்பாதையில் கொண்டு சேர்க்கும்.

**கேள்வியை நன்கு படித்து பதில் கூறுங்கள்**

ஒரு அரண்மனையில் 2 காவலாளிகள் இருந்தனர். 5 புலிகள் இருந்தன. ஒவ்வொரு புலிக்கும் தனி அறையும் 5 குட்டிகளும் இருந்தன. இப்போது அரண்மனையில் எத்தனை கால்கள் உள்ளன? கூறுங்கள் பார்ப்போம்!

***நேரத்தோடு செயல்படு:*** அடுப்பில் கொதிக்கும் சோறு உலையைக் கூடக் காலத்தோடு கவனித்து வடிக்காமற் போனால் பரிமாறப்படும் போது சோறு சோறாக இருக்காது, கூழாக மாறியிருக்கும். ஆகவேதான் நேரத்தோடு செயல்படு, நிலை மறந்து சோம்பிக் கிடக்காதே! என்று குறிப்பிடுகின்றார் வள்ளுவர். வினை, விதி எல்லாவற்றையும் நிர்ணயிப்பது ஒரு மனிதனின் மனஉறுதியே தவிர மற்றைய எல்லாம் அதற்குப் பிறகுதான் எனவும், நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றல், வலிமையான எண்ணங்களைக் கொண்டவர்களுக்கு வாய்க்கப்பெறும் என்பதாக எளிமையாகக் கூறுகின்றார்.

திருக்குறள்

***அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை***
***எண்ணி இடத்தால் செயின்.*** – குறள்

செயலை ஆராய்ந்து தக்க இடத்தோடு செய்தல் வேண்டும். அச்செயலுக்கு மனவுறுதியைத் தவிர வேறு துணை வேண்டா.



## கை விளக்கு ஏந்திய காரிகை



1820–ஆம் ஆண்டு ஃபிளாரன்ஸ் என்ற நகரில் பிறந்த ஓர் பெண் தமக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்தார். ஃபிளாரன்ஸ் என்ற ஊரின் பெயரையே பெற்றோர் இவருக்கு வைத்தனர். தனது 17–வது வயதிலேயே பெற்றோர் விருப்பத்தையும் மீறி செவிலியர் கல்வி ப டிக்க ஜெர்மெனி சென்றார். சிறந்த முறையில் தேர்ச்சிபெற்று இங்கிலாந்து திரும்பினார். இலண்டனில் உள்ள மருத்துவமனையில் செவிலியர் பணியில் சேர்ந்தார். அப்போது துருக்கி நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இதை எதிர்த்து இங்கிலாந்தும் போரில் குதித்தது. இப்போரில் கலந்து கொண்ட இராணுவ வீரர்கள் பலர் காயத்தாலும், நோயினாலும் மடிந்தனர். இராணுவ மருத்துவ முகாம்களில் போதிய சுகாதாரம் இல்லாமையே அதற்கு முக்கிய காரணம் எனக் கண்டறிந்தார்.

எனவே 38 செவிலியர்களுடன் நாடுகள் பல கடந்து ஃபிளாரன்ஸ் அந்த மருத்துவமனைக்குச் சென்று சீர்திருத்தங்கள் பல செய்தார். மருத்துவ சேவை மட்டுமின்றி நோயாளிகளின் குடும்பங்களுக்குக் கடித ம் எழுதுவது, அவர்கள் வீட்டிற்கு பணம் அனுப்புவது போன்ற உதவிகளையும் செய்தார். இரவெல்லாம் கண்விழித்து ஒரு லாந்தர் விளக்குடன் மருத்துவமனை வார்டுகளை சுற்றிவந்து உதவி செய்தார். இதனால் கை விளக்கு ஏந்திய காரிகை எனப் போற்றப்பட்டார்.

செவிலியர்களுக்கென இலண்டனில் தானே ஒரு கல்லூரியைத் தொடங்கினார். செவிலியர் கல்விக் குறிப்புகள், மருத்துவமனைக் குறிப்புகள் என்பதாக இரு நூல்களை எழுதினார். தன்னலமற்ற சேவையால் தரணிக்கே வழிகாட்டிய அம்மையார் 1910–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இயற்கை எய்தினார்.

## நம்பிக்கை இழக்காதீர்கள்! (படித்ததில் பிடித்தது)

நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. மெலிதாய் காற்று வீசிக் கொண்டிருந்தது. காற்றைக் கண்டதும் அமைதி என்ற முதல் மெழுகுவர்த்தி ஐயோ காற்று வீசுகிறது நான் அணைந்துவிடுவேன் என்று பலவீனமாகச் சொன்னது. காற்று பட்டதும் அணைந்துவிட்டது. அன்பு என்ற அடுத்த மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்க்கமுடியாது என்று அணைந்தது. அறிவு என்ற மூன்றாவது மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்க்க முடியாமல் அணைந்தது. நான்காவது மெழுகுவர்த்தி மட்டும் காற்று வீசிய சில நொடிகள் போராடி ஜெயித்து விட்டது. அப்போது அந்த அறையில் ஒரு சிறுவன் நுழைந்தான். அடடா மூன்று மெழுகுவர்த்திகளும் அணைந்துவிட்தே என்று கவலையுடன் சொன்னான். அதற்கு எரிந்து கொண்டிருந்த நான்காவது மெழுகுவர்த்தி சொன்னது. வருத்தப்படாதே நான் இருக்கிறேன், என்னை வைத்து மற்ற மூன்றையும் பற்றவைத்துக்கொள் என்றது. சிறுவன் உடனே நான்காவது மெழுகுவர்த்தியைப் பார்த்து உன் பெயரென்ன ? என்று கேட்டான். நம்பிக்கை என்றது மெழுகுவர்த்தி. நாம் எப்போதும் வாழ்வில் நம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது.

## பொதுவாகப் பயன்படுத்தப்படும் இக் கருவிகளின் பெயர்களைக் கூறுங்கள்!

1. கண்ணுக்குப் புலப்படாத மிகச்சிறிய பொருட்களைக் காணுதற்குப் பயன்படும் கருவி.
2. பால் சுத்தமானதா என்பதனை கொழுப்பின் அளவுகொண்டு கண்டறியும் கருவி.
3. ஒரு வாகனம் எவ்வளவு தூரம் கடந்து வந்துள்ளது என்பதனைக் கண்டறியும் கருவி.
4. வர இருக்கும் பூகம்பத்தைக் கண்டறியும் கருவி.
5. மின் ஆற்றலை அளவிடும் கருவி.
6. இரத்த அழுத்தத்தைக் கண்டறியும் கருவி.
7. தாவரங்களின் வளர்ச்சியை அளவிடும் கருவி.
8. இதய இயக்கத்தைக் கண்டறியும் கருவி.
9. காற்றின் வேகத்தைக் கண்டறியும் கருவி.
10. கடல் ஆழத்தைக்கண்டறியும் கருவி.

கேள்வியை நன்கு படித்து பதில் கூறுங்கள்
அரண்மனையில் (ர) கால் ஏதும் இல்லை.

### ஆகஸ்ட் முக்கிய தினங்களில் சில...

| | |
|---|---|
| 01 | உலக தாய்ப்பால் தினம் |
| 07 | உலக நட்பு தினம் |
| 15 | இந்திய சுதந்திர தினம் |
| 29 | தேசிய விளையாட்டு தினம் |
| 31 | தேசிய ஒருமைப்பாட்டு தினம் |

## அறிவுரைகள்

- ✦ எண்ணம், சொல், செயல் மூன்றாலும் யாருக்கும் தீங்கு செய்யாதீர்கள். நற்செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். உங்களுக்கு மட்டுமில்லாமல் உங்களைச் சார்ந்த மற்றவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டுங்கள்.
- ✦ எந்த நிலையிலும் மற்றவருடைய உதவியை எதிர்பார்ப்பது கூடாது. சொந்தக் காலில் நின்று பிரச்சனை களுக்குத் தீர்வு காண்பவனே சிறந்த வெற்றியாளனாகத் திகழ்வான்.
- ✦ ஒரு நாளிலோ அல்லது தற்செயல் நிகழ்வாகவோ மன உறுதியை உங்களால் அடைய முடியா து. முறையான பயிற்சியும், விடாமுயற்சியும் இருந்தால் மட்டுமே மனதை சீர்படுத்த முடியும்.
- ✦ உறவினர், நண்பர்கள் செய்யும் உதவியைவிட ஒருவனுக்கு அதிகமான உதவிகளை மனம் செய்துவிடும். அதனால் புத்தியுள்ளவர்கள் மனதைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.
- ✦ உண்மையை மறைக்கும் சக்தி உலகில் யாருக்கும் இல்லை. – பரமானந்தர்.

## இரண்டொரு ஊர் சிறப்பு அறிவோம்!



**மதுரை:** மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானைகட்டிப் போரடிக்கும் அழகானத் தென்மதுரை என வர்ணிக்கப்பட்ட மதுரை மாநகர் தமிழகத்தின் கோவில் நகரம், விழாக்களின் நகரம், உறங்கா நகரம் என்று பல்வேறு அடைமொழிகள் கொண்டது. மதுரையம்பதி, கூடல் நகர், கடம்பவனம் என்ற சிறப்புப் பெயர்களும் எள்ளன.

இம்மதுரை பொற்றாமரைக் குளச் சுவற்றில் 1330 குறள்கள் பதிக்கப்பட்டுள்ளன. ராணி மங்கம்மாள் சத்திரத்தில் அமைந்துள்ள காந்தி அருங்காட்சியகத்தில், விடுதலைப் போரின் முக்கிய நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மதுரை அலங்கா நல்லூார் ஜல்லிக்கட்டு உலகப் புகழ் பெற்றது.

**வேலூர்:** இங்குள்ள காவலூர் வைனு பாப்பு வானியல் மையத்தில் ஆசியாவிலேயே மிகப்பெரிய தொலைநோக்கி அமைந்துள்ளது. பிரபலமான வேலூர் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி (விஐடி), ஆசியாவிலேயே புகழ் பெற்ற சி.எம்.சி மருத்துவமனை, சிறப்புமிக்க எஸ்.எல்.ஆர். மற்றும் டி.சி தொழுநோய் ஆய்வு மையம் போன்றன இம்மாவட்டத்திலேயே அமைந்துள்ளன.



வாணியம்பாடி தோல் பதனிடும் ஆலை, தமிழ் நாடு வெடி பொருள் ஆலை, எம்.ஆர்.எஃப். டயர் தொழிற்சாலை குறிப்பிடத்தக்கவை. இம்மாவட்டத்திலேயே கரும்பு ஆராய்ச்சி நிலையம் (மேலத்தூர்), விவசாய (விரிஞ்சிபுரம்) ஆராய்ச்சி நிலையம், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம் (ராணிப்பேட்டை) உள்ளது. இயற்கை எழில் மிகுந்த ஜவ்வாது மலை, ஏலகிரி மலைகளும் உள்ளன.

### கருவிகளின் பெயர்கள்–விடை

1. மைக்கிராஸ்கோப் 2. லக்டாஸ்கோப் 3. ஓடோமீட்டர் 4. சீஸ்மோகிராஃப் 5. அம்மீட்டர் 6. ஸ்பிக்மோ மோனோமீட்டர் 7. கிரஸ்கோ கிராஃப் 8. கார்டியோகிராம் 9. அனிமோ மீட்டர் 10. ஃபேத்தோ மீட்டர்

## ✶✦✦✦✦✦ இவை தெரியுமா? ✦✦✦✦✦✦✶

**தேசிய சின்னங்கள்**



இந்தியாவின் தேசியச் சின்னம் சாரநாத்தில் உள்ள அசோகர் ஸ்தூபியில் இருந்து எடுக்கப்பட்ட அசோகச் சக்கரம் ஆகும். அதில் இருக்கும் நான்கு சிங்கங்களில் ஒன்று மறுபுறத்தில் இருப்பதால் நம்மால் பாக்க முடிவதில்லை. அவற்றின் கீழே ஒரு சக்கரமும், இடையே சீறிப்பாயும் குதிரைகளும், காளைகளும் பொறிக்கப்பட்டுள்ளன. பீடத்தின் கீழே முண்டக உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்ட வாய்மையே வெல்லும் என்னும் பொருள் கொண்ட சத்ய மேவ ஜயதே என்ற வார்த்தைகள் தேவநாகரி எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளன. 1950ஆம் ஆண்டு இது இந்தியாவின் தேசியச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது.

**தேசியக் கொடி**

மிகை காவி, மிகை பச்சை, மத்தியில் தூய வெண்மை ஆகிய மூன்று நிறங்களும், வரையறுக்கப்பட்ட நீள அகலங்களும் கொண்ட மூவர்ணக் கொடியே இந்தியாவின் தேசியக் கொடி. வெண்பட்டையின் நடுவே கடல் நீல நிறம் கொண்ட ஓர் அசோகச் சக்கரமும் அதை சுமந்து 24 அரும்புக் கால்களும் உள்ளன.



தேசியக் கொடியிலுள்ள காவி நிறம் தைரியம் மற்றும் தியாகத்தையும், வெண்மை நிறம் உண்மை மற்றும் அமைதியையும், பச்சை நிறம் நம்பிக்கையையும் வீரத்தையும் குறிப்பதாக அமைந்துள்ளது. கொடியின் நீள அகலங்கள் 3:2 என்ற விகிதத்தில் அமையவேண்டும். இக்கொடியை வடிவமைத்தவர் ஆந்திராவைச் சேர்ந்த பிங்களி வெங்கையா என்பவர்.

தேசியக்கொடி 1947 ஆகஸ்ட் 15ம் தேதி தில்லியிலுள்ள ராஷ்ட்ரபதி பவனில் 31 குண்டுகள் முழங்க முதன்முதலாக பறக்கவிடப்பட்டது. எல்லா வருடமும் ஆகஸ்ட் 15ம் தேதி தில்லி செங்கோட்டையில் தேசியக்கொடியேற்றும் சடங்கு 1948 முதல் துவங்கியது.

**தேசிய கீதம்**

நம் இந்திய தேசிய கீதம் (ஜனகன மன அதிநாயக ஜயஹே......) வங்கக்கவி ரவிந்திரநாத் தாகூரால் எழுதப்பட்டது. இந்திய அரசியலமைப்புக் குழு இப்பாடலை 1950 ஜனவரி 24ல் தேசிய கீதமாக அங்கீகரித்தது. இப்பாடலின் பொருள்:

இந்தியத்தாயே! மக்களின் இன்ப துன்பங்களை நிர்ணயிக்கின்ற நீயே அனைவரின் மனதிலும் ஆட்சி செய்கின்றாய். நின் திருப்பெயர் பஞ்சாப்பையும் சிந்துவையும், குஜராத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது. நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது. யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகின்றன. இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன. நின் புகழைப் பரப்புகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களை நிர்ணயிக்கின்ற தாயே! உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

**வந்தே மாதரம்**

ஜனகன மன தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்டபோதே சுதந்திர போராட்டத்தில் மக்களுக்கு எழுச்சியூட்டிய பங்கிம் சந்திரசட்டர்ஜி எழுதிய வந்தே மாதரம் பாடலுக்கும் தேசிய கீதத்துக்கு வழங்கப்படும் உயர்ந்த இடத்தை வழங்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

வந்தே மாதரம் ...... இப்பாடலின் இரு பத்திகளின் பொருள்:

அம்மா நான் வணங்குகிறேன். இனிய நீர்ப்பெருக்கினை, இன் கனி வளத்தினை, தென்றலின் சிறப்பினை, மரகதப்பச்சை வயல்களின் மாட்சிமையை, பைந்நிறப் படினம் பரவிய வடிவினை வணங்குகிறேன். எங்கள் தாயே வணங்குகிறோம். வெண்ணிலவின் கதிர்களின் ஒளியில் பூரித்திடும் இரவுகள்; இதழ் விரிந்து நறுமலர்கள் சொரியும் மரக்கூட்டங்கள்; எழில்மிகு புன்னகை; இனிமை ததும்பும் ஏற்றமிகு மொழிகள் நிறைந்தவள் எங்கள் தாய்! சுகமளிப்பவளே, வரமருள்பவளே தாயே வணங்குகிறோம்!

ஒரு வருட பலனுக்கு நெல்லை நடுங்கள் !
முப்பது வருட பலனுக்கு மரங்களை நடுங்கள் !!
நூற்றாண்டு பலனுக்கு கல்வியை கொடுங்கள் !!!

NMP
CHARITABLE TRUST
giving is living

# N.M.P அறக்கட்டளை
## கல்வி உதவித்தொகை வழங்கும் விழா













சிதம்பரம் கஸ்தூரிபாய் கம்பெனி, NMP ரெடிமேட்ஸ் மற்றும் NMP அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்கும் விழா, 10.07.2026 அன்று பலகாரம்.காம் ஆனந்தலஹரி ஹாலில் நடைபெற்றது. டாக்டர் திரு.K.R.முத்துக்குமரன் மற்றும் அவர்களின் துணைவியார் சிறப்பு விருந்தினர்களாகவும், அறக்கட்டளை தலைவர் திரு.வி.முத்துக்குமார் மற்றும் திருமதி.ஸ்ரீவித்யா முத்துக்குமார் அனைவரையும் வரவேற்று, 95 பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கினர். 17.04.2026 அன்று இந்திரா காந்தி டென்டல் சயின்ஸ் இன்ஸ்டிடியூட் இணைந்து நடத்திய இலவச பல் சிகிச்சை முகாம் நடைபெற்றது.


KASTHURIBAI®
Company - NMP Readymades
Since 1943. Chidambaram.
20/9, Bypass Link Road, Chidambaram.





Palagaram.com®
HIGH CLASS PURE VEG RESTAURANT
156, West car Street, Chidambaram.

நமது ஊரில் **சிறுநீரகத்திற்கென்று** பிரத்தியேகமான சிகிச்சை மையம்

# கும்பகோணம் சிறுநீரகம் & சர்க்கரை நோய் சிறப்பு சிகிச்சை மையம்

சிறுநீரகம் & சர்க்கரை நோய் சிறப்பு மருத்துவர்

## டாக்டர் M. செளமியா கோபிநாத்

MD (General Medicine)., DM (Nephrology).,
Fellowship in Glomerular Diseases

பார்வை நேரம்: தினசரிகாலை 11.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை

SCAN LOCATION

**இடம்:**

எண் 17, நால்ரோடு, டாக்டர் மூர்த்தி சாலை,
(அரசு மருத்துவமனை செல்லும் வழியில்), பொண்ணுசாமி நகர், கும்பகோணம்

### அளிக்கப்படும் சிகிச்சைகள்

- பொது மருத்துவம்
- தைராய்டு பிரச்சனைகள்
- நாள்பட்ட காய்ச்சல்
- நீரிழிவு மற்றும் நீரிழிவு சிறுநீரக நோய்
- உயர் இரத்த அழுத்தம் மற்றும் கட்டுபாடற்ற உயர் இரத்த அழுத்தம்
- சிறுநீரக கல்
- தற்காலிக சிறுநீரக செயல் இழப்பு
- நாள்பட்ட சிறுநீரக நோய்
- ஹீமோடையாலிசிஸ்
- பெரிட்டோனியல் டயாலிசிஸ்
- சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை
- சிறுநீரில் புரதம் வெளியேறுதல் & குளோமருலர் நோய்கள்
- சிறுநீரில் இரத்தம் வெளியேறுதல்
- உடல் உப்புகள் சமமின்மை
- சிறுநீர் பாதை தொற்றுகள், சிறுநீரக பாதை பிரச்சினைகள்
- சிறுநீரக புற்றுநோயியல்
- பரம்பரை சிறுநீரக நோய்கள்
- கர்ப்ப கால சிறுநீரக நோய்கள்
- குழந்தைகளின் சிறுநீரக நோய்கள்

Follow us on:

@DRSOWMIYA_NEPHRO

**9994407278, 8610858025**

# CHENNAI KARKATHAR ASSOCIATION

Choolaimedu, Chennai - 600 094.

# LADIES HOSTEL



- A/c. & Non A/c. Single Cot, Big Size Room
- Free Wi-Fi
- Free Washing Machine
- Free Aquaguard Water
- Two Wheeler Parking available
- Camera Facilities Available Inside & outside Area
- Security Persons available
- Three Times food, Breakfast, Lunch & Dinner
- Milk available Morning only
- 24 Hours warden available
- Catering Available
- Food Timings : Morning 7.30 a.m. to 9.30 a.m.
  Lunch : 12.00 p.m. to 2.30 p.m.
  Dinner : 7.30 p.m. to 9.00 p.m.



**No. 64, Sowrashtra Nagar 10th Street,**
**Choolaimedu, Chennai - 600 094.**
**Cell : 94454 82798, 99943 26976**
**E-mail : kaveri9941@gmail.com**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
**3–12–1947**

மறைவு :
**29–07–2025**

திரு. **மாணிக்கம் பிள்ளை**, SBI (Rtd)
**8/3,** மேட்டுத் தெரு, திருவிழந்தூர், மயிலாடுதுறை.

பாசமிகு குடும்ப தலைவராய், கடமையில் சிறந்த வங்கி ஊழியராய், பல நூற்றுக்கணக்கான கார்குல மக்களின் திருமண வாழ்க்கைக்கு வழிகாட்டியாய், உற்றார் உறவினர்களுக்கு சிறந்த ஆலோசகராய் வாழ்ந்த திரு. மாணிக்கம்பிள்ளை அவர்களின் **முதலாம் ஆண்டு நினைவு நாள் 29.07.2026.**

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்

மனைவி **விஜயா மாணிக்கம்**

மகன் – மருமகள்
**சீனுவாசன் மாணிக்கம்**
**வித்யா சீனுவாசன்**

மகள் – மருமகன்
**சுபா செந்தில்குமார்**
**K. செந்தில்குமார்**

பேரன்கள் – பேத்திகள்
**K.S. தரணீதரன்**
**பிரமோத் சுந்தர் ஸ்ரீ**
**வைபவி சுந்தர் ஸ்ரீ**

மற்றும்

**உறவினர்களும், நண்பர்களும்.**

# உழைப்பால் உயர்ந்த உத்தமர்

## மயிலாடுதுறையின் கைப்பந்து விளையாட்டுத் தந்தை

தோற்றம்
10.05.1949



மறைவு
23.07.2026

மணக்குடி,

திரு.**R. சோமசுந்தரம் பிள்ளை** அவர்கள்

பாசமும், பண்பும் நிறைந்த தங்களை காலம் பிரித்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது. உங்கள் அன்பு
எங்கள் உள்ளங்களில் நிலைத்திருக்கும். உங்கள் ஆன்மா இறைவன்
திருவடியில் சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

மீளாத் துயரில் :

மனைவி :

திருமதி, **S.லைலா**

மகள்கள் & மருமகன்கள் :

**V.உமா மகேஸ்வரி - G.வெங்கடேஷ்பாபு**
**S.காயத்ரிதேவி - Rtn.Dr.S.சத்யன்**
**S.வைஷ்ணவி - U.S.ஸ்ரீகாந்த்**
**S.சௌமியா - V.சூர்யா**

சகோதரர் :

**R.வடிவேல்-உமாமகேஸ்வரி**

சகோதரிகள் :

**A.ஞானபூங்கோதை அகோரம்**
**S.அலமேலு -ARMR.சுவாமிநாதன்**

பேரன் – பேத்திகள் :

**V.ஸ்ரீராம், Dr.S.ஸ்ரீநிதி, S.ஸ்ரீத்திக், S.ஷஷ்டிக், ,**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் :
15.08.1937



மறைவு :
01.08.2024

## N. மங்களம் பிள்ளை, Teacher Rtd.

காட்டுமன்னார் கோவில் வட்டம் வீராணநல்லூர் கிராமம், வெள்ளாழத் தெரு, தெய்வத்திரு. நடேசன் பிள்ளை – கோகிலம் இவர்களின் மகனும், தெய்வத்திரு. குஞ்சிதபாதம் பிள்ளை – சரஸ்வதி இவர்களின் மருமகனும் திருமதி சேது அம்மாள் அவர்களின் கணவரும் எங்களது தந்தையாருமாகிய **N. மங்களம் பிள்ளை** அவர்களின் **இரண்டாம் ஆண்டு நினைவு நாள் 01.08.2026.**

என்றும் உங்கள் நினைவில் வாழும்

**M. சேது அம்மாள்**

| | | |
|---|---|---|
| M.S. ஆனந்த் | G.நிரஞ்சனா | M. ஸ்ரீதர் |
| N. இராஜவல்லி | P. கணேஷ் | V. புஷ்பலதா |
| A.R. தன்வந்த் | | S.P. ஆதித்யா |


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
29 YEARS OF EXCELLENCE
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405/2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th August 2026




**Published by: K. SHANMUGAM**, on behalf of the Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by: M. NATARAJAN** at **Mayur Printers**, No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024, **Editor: VANAJA ELANGOVAN**